பக்கங்கள் – 16+8
விலை – ரூபா 60

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 89

ஞாயிற்றுக்கிழமை
23 பெப்ரவரி 2025

மாசி 11 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

## தவறான முடிவெடுத்து ஒருவர் பலி!

யாழ்ப்பாணம், பெப். 23
யாழ்ப்பாணம் நவாலி பகுதியில் குடும்பத்தலைவர் ஒருவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார் என்று பொலி 15

இலங்கையில்

# விடுதலைப்புலிகளுக்கு நீடிக்கின்றது தடை

கொழும்பு, பெப்ரவரி 23

**தமிழீழ விடுதலைப்புலிகள் உள்ளிட்ட 15 அமைப்புகள் மீதான தடையை நீடித்து வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.** 15



வடபகுதி கடற்பரப்பில்

## சட்டவிரோத மீன்பிடி: உடன் தடைசெய்க!

### தனிநபர் பிரேரணையை நேற்று முன்வைத்தார் ரவிகரன் எம்.பி.

கொழும்பு, பெப். 23
வடக்குக் கடற்பரப்பில் தொடர்ச்சியாக இடம்பெறும் சட்டவிரோத மீன்பிடி உள்ளிட்ட அத்துமீறிய நடவடிக்கைகள் உடனடியாகக் கட்டுப்படுத்தப்பட வேண்டும் 15

ரவிகரன் எம்.பி.யின்

## தனிநபர் பிரேரணைக்கு ஆளுந்தரப்பும் ஆதரவு!

### உடன் நடவடிக்கை எனவும் உறுதி

கொழும்பு, பெப். 23
வடக்குக் கடற்பரப்பில் இடம்பெறும் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளைத் தடுக்கவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனால் கொண்டுவரப் 15

உயிர்த்தஞாயிறுத் தாக்குதல்

## விசாரணைகளைக் குழப்ப பல்வேறு சதிமுயற்சிகள்

### அரசாங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 23
உயிர்த்தஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகளைக் குழப்புவதற்கு பல்வேறுபட்ட சதிமுயற்சிகள் இடம்பெற்றுவருகின்றன. இதுகுறித்து எமக்குப் புலனாய்வுத் தகவல்கள் கிடைத்துள்ளன என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் டி.டபிள்யூ.ஆர்.பி. செனவிரத்ன தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
பாதாளக் குழுக்களை ஒடுக்குவதற்குரிய செயற்பாடுகள் சிறப்பாக இடம்பெற்றுவரும் 15

## இலங்கையில் தற்போது 58 பாதாளக் குழுக்கள்!

யாழ்ப்பாணம், பெப். 23
இலங்கையில் தற்போது 58 பாதாளக் குழுக்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன எனவும், இந்த வலையமைப்பில் ஆயிரத்து 400 பேர்வரை செயற்படுகின்றனர் எனவும் பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார். 15

வடமாகாணத்தில்

## மார்ச்சில் மழை!

யாழ்ப்பாணம், பெப். 23
மார்ச் மாதத்தின் பல நாள்களில் மழை பதிவாகும் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியல்துறையின் தலைவரும், வானிலை ஆய்வாளருமான நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-
வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் காலநிலை அமைப்பின் பிரகாரம் மார்ச் மாதம் அதிகளவான வெப்பநிலை நிலவும் மாதமாகும். எனினும், எதிர்வரும் மார்ச் மாதத்தின் பல நாள்களில் வடக்கு 15

கோப்பாய் விபத்து

## படுகாயமடைந்தவர் நேற்று உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், பெப். 23
யாழ்ப்பாணம் கோப்பாய் பகுதியில் காரொன்று குழுவாக நின்றவர்கள் மீது மோதியதில் படுகாயமடைந்தவர் சிகிச்சையின்போது நேற்று உயிரிழந் 15

ஐக்கிய நாடுகள்

## மனித உரிமைகள் பேரவையின் 58ஆவது அமர்வு நாளை ஆரம்பம்!

### இலங்கைக்கு எதிரான பிடி இறுகுமா?

கொழும்பு, பெப். 23
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 58ஆவது அமர்வு நாளையதினம் ஆரம்பமாகவுள்ள நிலையில், இலங்கையின் விவகாரங்கள் தொடர்பில் பெரும் எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.
நாளைமுதல் 15






'புலியை அழிச்சிட்டம் எண்டுறதும் அவைதான் இல்லாத புலிக்கு தடை போடுறதும் அவைதான்'



## ரயில்கள் மீது தாக்குதல் மூன்று சிறுவர்கள் கைது

யாழ்ப்பாணம், பெப். 23
யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலமாக ரயில்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்ட நிலையில், பிரதான சந்தேகநபர்களாக மூன்று சிறுவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.
யாழ்ப்பாணப் பொலிஸ் புலனாய்வுப் பிரிவால் கைதுசெய்யப்பட்ட அவர்கள், யாழ்ப்பாணப் பொலிஸாரிடம் 15

# சஞ்சீவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் ... தமிழ் நாளிதழ்

| கொவிசெத | ஹந்தஹன ராசி சுப பலன் | NLB ஜய | மெகா பவர் | மஹஜன சம்பத | தன நிதானய | அத சம்பத |
|---|---|---|---|---|---|---|
| திகதி 22.02.2025 | திகதி 22.02.2025 | திகதி 22.02.2025 | திகதி 22.02.2025 | திகதி 22.02.2025 | திகதி 22.02.2025 | திகதி 22.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் 3997 | சீட்டிழுப்பு இலக்கம் 1064 | சீட்டிழுப்பு இலக்கம் 023 | சீட்டிழுப்பு இலக்கம் 2103 | சீட்டிழுப்பு இலக்கம் 5755 | சீட்டிழுப்பு இலக்கம் 1785 | சீட்டிழுப்பு இலக்கம் 330 |
| ஆங்கில எழுத்து N | வெற்றி இலக்கினம் விருச்சிகம் | ஆங்கில எழுத்து D | ஆங்கில எழுத்து N | ஆங்கில எழுத்து R | ஆங்கில எழுத்து E | ஆங்கில எழுத்து R |
| | | | சுப்பர் இலக்கம் 19 | | | |
| வெற்றி இலக்கங்கள் 15 20 25 30 | வெற்றி இலக்கங்கள் 03 43 47 57 | வெற்றி இலக்கங்கள் 1 1 8 3 | வெற்றி இலக்கங்கள் 14 31 44 48 | வெற்றி இலக்கங்கள் 1 4 2 4 6 9 | வெற்றி இலக்கங்கள் 17 27 47 54 | வெற்றி இலக்கங்கள் 2 4 6 9 |
| விசேட எழுத்து N | | | | | விசேட எழுத்து E | |

**பணியாளர்கள் தேவை**

யாழ் நகரில் உள்ள காட்சியறை ஒன்றிற்கு பின்வரும் பணியாளர்கள் தேவை.

- காட்சியறை முகாமையாளர்.
- சமூக வலைத்தள முகாமையாளர்.
- கணினி தொழிநுட்பவியலாளர்.

**077 758 0116**

**KAPRUKA** DLB

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|---|
| 22.02.2025 | சனிக்கிழமை | B | 05 | 01 31 38 43 | 1905 |

**அத கோடிபதி** DLB

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 22.02.2025 | சனிக்கிழமை | Z | 05 26 30 51 | 2555 |

**சுபிரி தன சம்பத** DLB

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 22.02.2025 | சனிக்கிழமை | B | 1 0 2 8 4 1 | 0463 |

**Super Ball** DLB

| திகதி | தினம் | சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 22.02.2025 | சனிக்கிழமை | 2729 | T | 31 59 72 78 |

**சனிதா** DLB

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 22.02.2025 | சனிக்கிழமை | M | 07 26 43 78 | 4890 |

**SASIRI** DLB

| திகதி | தினம் | வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|
| 22.02.2025 | சனிக்கிழமை | 0628 | 01 21 28 |

**லக்ன ராசி** DLB

| திகதி | தினம் | துலாம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|---|---|
| 22.02.2025 | சனிக்கிழமை | ♎ | 01 08 24 46 | 4441 |

# யாழில் புனரமைக்கவேண்டிய வீதிகளின் விவரங்களைத் தருக

## மாவட்டப் பதில்செயலர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.23

யாழ்.மாவட்டத்தில் புனரமைக்கவேண்டிய வீதிகளின் விவரங்களை வீதி அபிவிருத்தி அதிகாரசபை, வீதி அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் ஆகியன இணைந்து சரியான முறையில் தயாரித்துச் சமர்ப்பிக்குமாறு யாழ்.மாவட்ட பதில் செயலர் ம.பிரதீபன் அறிவுறுத்தியுள்ளார்.

வீதிப் புனரமைப்புத் தொடர்பான கலந்துரையாடல் யாழ். மாவட்டச் செயலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அரசால் வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக வடக்கு மாகாணத்தின் வீதிகளைப் புனரமைப்பதற்காக நிதி ஒதுக்கீடு செய்யவுள்ளது. அதற்கமைய மாவட்டத்தில் புனரமைக்க வேண்டிய வீதிகளின் விவரங்களைத் துல்லியமான முறையில் தயாரித்து உரிய அமைச்சு வழங்கவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-41-66-27)


# மரண அறிவித்தல்

## குஞ்சுப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை (சின்னப்பு)



தோற்றம் 20.06.1953

மறைவு 19.02.2025

கூகைமாவடி கண்டாவளையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குஞ்சுப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை (சின்னப்பு) கடந்த 19.02.2025 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - கற்பகபிள்ளை தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - தெய்வானை தம்பதியரின் மருமகளும், சிதம்பரப்பிள்ளை (சின்னப்பு) அவர்களின் அன்பு மனைவியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.02.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2.00 மணியளவில் கண்டாவளை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கூகைமாவடி,
கண்டாவளை.

தகவல்:
பிள்ளைகள்
077 148 4276

(CS/57577) N-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றங்களைத் தடுப்பதற்கான வழிமுறை என்கவுண்டர் அல்ல!

## சட்டத்தரணிகள் சங்க முன்னாள் தலைவர் எச்சரிக்கை

**கொழும்பு, பெப். 23**

**பொலிஸாரின் என்கவுன்டர் கொலைகள் குற்றங்களைத் தடுப்பதற்கான வழிமுறையல்ல என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் தலைவர் சாலியபீரிஸ் எச்சரித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,
கொட்டாஞ்சேனை துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இரு சந்தேகநபர்கள் என்கவுண்டரில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

பொலிஸ் நிலையத்தில் அல்லது பொலிஸாரின் பிடியில் உள்ள போது சந்தேகநபர்கள் கொல்லப்படுவது குற்றச்செயல்களின் சூத்திரதாரிகள் குறித்த ஆதாரங்களை அழித்துவிடும். இந்தக் கொலைகளில் ஈடுபட்ட பொலிஸார் குற்றவாளிகளாகக் கருதப்படுவார்கள். என்கவுன்டர்களில் ஈடுபட்ட பொலிஸார் சில வருடங்களின் பின்னர் அதற்கான விளைவுகளை எதிர்கொள்ளநேரிடும்.

பொலிஸ் நிலையங்களில் ஈடுபட்ட கொலைகளையும் என்கவுன்டர்களையும் உச்சநீதிமன்றம் கண்டித்து வந்துள்ளது. எந்த அரசாங்கத்தின் கீழும் சட்டத்துக்குப்புறம்பான கொலைகளை ஏற்கமுடியாது- என்றார். (ச-இ)

# ஒழுங்குமுறையின்கீழ் வாடகைப் பேருந்துகள்

## வடக்கு ஆளுநர் நடவடிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.23
வடக்கு மாகாணத்தில் வாடகைக்கு அமர்த்தப்பட்டுச் சேவையில் ஈடுபடும் பேருந்துகளை ஒழுங்குபடுத்துவதற்கான கொள்கை ஆவணத்தை உடனடியாகத் தயாரிக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் வடக்கு மாகாணப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் தலைவர் மற்றும் பொதுமுகாமையாளர் ஆகியோருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,
தனியார் மற்றும் இலங்கைப் போக்குவரத்துச்சபை என இரு தரப்புகளும் ஒழுக்கமாகச் செயற்படவேண்டும். அதைமீறும் பட்சத்தில் அதிகாரசபையின் தலைவர் மற்றும் பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேவேளை அரச பணியாளர்கள் வழமையான வழித்தடப் பேருந்துகளில் பயணிக்காது அதிக கட்டணம் செலுத்தி வாடகை அடிப்படையில் பேருந்துகளை அமர்த்திப் பயணிக்கின்றனர்.

அரச பணியாளர்கள் தற்போது வாடகைக்குப் பேருந்தை அமர்த்திப் பயணிக்கும் வழித்தடங்களில் உடனடியாகப் பேருந்துச் சேவைகளை அதிகரிக்கவேண்டும்.

அத்துடன் சிறிய ரக தனியார் பேருந்துகளை எதிர்காலத்தில் சேவையிலிருந்து நிறுத்தவேண்டிய நிலை காணப்படுகிறது. இதற்காக அத்தகைய பேருந்து உரிமையாளர்களுக்குக் கடன் வசதிகளைப் பெற்றுக்கொடுப்பது உதவியாக இருக்கும்- என்றார். (ச-33-66)

# பவள விழாவையொட்டி பல்வேறு போட்டிகள்

யாழ்ப்பாணம், பெப்.23
சாவல்கட்டு மகாத்மா சனசமூக நிலையத்தின் 75ஆவது ஆண்டின் பவள விழாவை முன்னிட்டு பல்வேறு நிகழ்வுகளை எதிர்வரும் மார்ச் மாதம் 7ஆம் திகதி வடமாகாண ரீதியில் நடத்தவுள்ளதாக ஏற்பாட்டுக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி எதிர்வரும் 28ஆம்திகதி காலை 7மணிக்கு நீச்சல் போட்டியும், பிற்பகல் 3 மணிக்கு கயிறு இழுத்தல் போட்டியும், எதிர்வரும் மார்ச் மாதம் 1ஆம் திகதி காலை 6மணிக்கு மரதன் ஓட்டப்போட்டியும், காலை 7.30 மணிக்கு சைக்கிள் ஓட்டப்போட்டியும் இடம்பெறவுள்ளன.

அத்துடன் வலிகாமம் பிரதேச ரீதியில் உதைபந்தாட்ட நிகழ்வும், சிறுவர்களுக்கான பல்வேறு நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன.

இறுதி நிகழ்வுகள் எதிர்வரும் மார்ச் மாதம் 7ஆம் திகதியன்று பிரமாண்டமானமுறையில்நிகழ்த்தப்படவுள்ளன.

நிகழ்வுகளில் பங்கேற்க விரும்புவோர் எதிர்வரும் 26ஆம் திகதிக்கு முன்னராக த.ராஜ்குமார் 0773933179, செ.டுபின்சன் 0779509975, சி.செந்தூரன் 0779459078 ஆகியோருடன் தொடர்புகொண்டு பதிவுகளை மேற்கொள்ளலாம்.

விளையாட்டுகளில் வெற்றியீட்டுபவர்களுக்கு வெகுமதியான பணப்பரிசில்களும், கேடயங்களும் வழங்கப்படும் என்றும் ஏற்பாட்டுக்குழு தெரிவித்துள்ளது. (ச-41-20-125-27)

# தேடுவாரற்ற நிலையில் சாவ. பொது மைதானம்

## *உலக வங்கியின் நிதி எங்கே? மக்கள் கேள்வி*

சாவகச்சேரி, பெப். 23
சாவகச்சேரி நகரப்பகுதியிலுள்ள நகரசபையின் பொதுவிளையாட்டு மைதானம் நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாது பற்றைகள் சூழ்ந்து காணப்படுகின்றது. இதனால் விளையாட்டுப் பயிற்சிகளை மேற்கொள்வதில் சிரமங்களை எதிர்கொள்ளவேண்டியுள்ளது என்று அந்தப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

தென்மராட்சிப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட விளையாட்டு கழகங்களுக்கிடையிலான போட்டிகள் இந்த மைதானத்திலேயே நடைபெறுகின்றன. இந்த மைதானம் பராமரிப்பின்றிக் காணப்படுவதால் விளையாட்டுக்கழகத்தினர் பயிற்சிகளை மேற்கொள்ள கோவில் வீதிகளைப் பயன்படுத்துகின்றனர்.

இந்த மைதானப் புனரமைப்புக்காக உலக வங்கியினால் நிதி ஒதுக்கப்பட்டு நிதி நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே இதுதொடர்பில் உரிய அதிகாரிகள் தலையீடு செய்து மைதானத்தைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-25, 9)

# குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், பெப்.23
நவாலி வடக்கில் குடும்பஸ்தர் ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மீட்கப்பட்டுள்ளார்.

நவாலி வடக்கைச் சேர்ந்த ம.பாலகருஷ்ணன் (வயது 51) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மானிப்பாய் பொலிஸார் மேற்கொண்டுவருகிறனர். (ச-125)



வன்முறைகளால் பாதித்த

# சிறுவர், பெண்களுக்கு பராமரிப்பு நிலையங்கள்

நுவரெலியா,பெப்.23
வன்முறைகளால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் பெண்களுக்கான தற்காலிக பராமரிப்பு நிலையமொன்றை நுவரெலியாவில் நிறுவுவதற்கு அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

இத்தகைய பராமரிப்பு நிலையங்கள் ஏற்கனவே பத்து மாவட்டங்களில் செயற்பட்டுவருகின்றன.

இந்தப் பராமரிப்பு நிலையங்களில் பால்நிலை வன்முறை மற்றும் வன்முறைகளால் பாதிக்கப்பட்ட சிறுவர்களும் பெண்களும் பராமரிக்கப்படுகின்றனர். (ச-22,6)

# மக்களின் காணிகள் கிழக்கிலும் ஆக்கிரமிப்பு

## *சாணக்கியன் சுட்டிக்காட்டு*

கொழும்பு, பெப். 23
வடக்கு மாகாணம் மட்டுமல்லாது கிழக்கிலும் முப்படையினரின் ஆக்கிரமிப்புக்கு மக்கள் முகங்கொடுக்கின்றனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் சுட்டிக்காட்டியுள்ளார். நாடாளுமன்றப் பாதுகாப்பு அமைச்சின் முதலாவது ஆலோசனைக் கூட்டம் ஜனாதிபதி தலைமையில் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெற்றபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இராணுவமுகாம்களான முறக்கொட்டான்சேனை, பாலையடி, வட்டைகுருக்கள் மடம், காயங்கேணி, புதூரில் விமானப்படையினரால் கையகப்படுத்தப்பட்ட காணி, தாண்டியடி துயிலும் இல்லம் மற்றும் களுவாஞ்சிக்குடி பொலிஸ்நிலையம் என்பன பொதுமக்களுக்குச் சொந்தமான நில ஆக்கிரமிப்புக்களே.

இவற்றை விடுவிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-25, 213)



கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தின் மாணவத் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு அதிபர் க. தவகீஸ்வரன் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக லண்டல் உபவாசல் குன்று முருகன் ஆலயத்தின் உபதலைவர் மா. சிறிகாந் [illegible] (ச-125, 17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16ம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 03 . 03 . 1958

இறப்பு 20 . 02 . 2009



## அம்பலவாணர் பரமநாதன்

(தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை - யாழ்ப்பாணம், பொறியியல் உதவியாளர்)

திதி: மாசி மாத அபரபக்க ஏகாதசி

அன்புள்ள அப்பா !
எண்ணியதெல்லாம் ஈடேற
தொடங்கிடும் யாவும்
தடையின்றித் தொடர
என்றும் எங்களோடிருங்கள்

"திருவதிகை"
வேளாவை, அளவெட்டி.

பிள்ளைகள்

(CS/57548) J-1


---

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்

தோற்றம் 22 . 02 . 1952

மறைவு 20 . 02 . 2025



## நடராஜா ஆச்சாரி நித்தியானந்தன் (நித்தி)

158/1 நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா ஆச்சாரி நித்தியானந்தன் (நித்தி) அவர்கள் நேற்று முன்தினம் (20.02.2025) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குற்றாலிங்கம் ஆச்சாரி நடராஜா ஆச்சாரி-லெட்சுமி அம்மாள் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற திருநாவுக்கரசு-தனபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும் விஜயராணி அவர்களின் பாசமிகு கணவரும், அமலா, நவலஷ்மி (மாலா), வினோ (அகிலன்), சோனியா, அகிதா (அகி) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.02.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்குச் எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

158/1 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல் :
குடும்பத்தினர்.
077 313 1622 (மகன்-அகிலன்)

---

# மரண அறிவித்தல்



## தங்கேஸ்வரன் யோகாம்பிகை (குணம்)

புங்குடுதீவு 7ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும், தற்போது யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தங்கேஸ்வரன் யோகாம்பிகை அவர்கள் நேற்று முன்தினம் (21.02.2025) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா - கண்மணி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், தங்கேஸ்வரனின் அன்பு மனைவியும், அருள்செல்வி, காலஞ்சென்ற கண்ணதாசன் மற்றும் அன்புதாசன், பாரதிதாசன், மலர்ச்செல்வி, யோகநாதன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான கிருஸ்ணகுமார், உமாகாந்தா மற்றும் கயல்விழி, கலியுகா, பகிதரன், ஜனுசியா ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான கனகம்மா, சிவபாக்கியம், மகேஸ்வரி, செல்லம்மா, பூரணம், அமிர்தம்மா, தவக்குமார் மற்றும் சரோஜினிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான பத்மநாதன், சபாரத்தினம், திலகவதி மற்றும் லீலாவதி, புனிதவதி, குலசேகரம், கிருபானந்தன், சண்முகசுந்தரம் ஆகியோரின் மைத்துனியும், திலீபன், றணிஷா, தமிஷா, மதுஷா, சாருஜன், சானுஜா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (23.02.2025) ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப 2.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக புங்குடுதீவு, கேரதீவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பிறப்பு 02.02.1945

இறப்பு 21.02.2025


இல - 10, பாரதி ஒழுங்கை,
கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல் :
குடும்பத்தினர்
077 781 7114

(CS/57580) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய
(ராசிபலன்)

**மேடம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். குடும்பத்தில் உறவினர்கள் வருகையால் வீட்டில் சிறுசிறு சலசலப்புகள் ஏற்படக்கூடும். பொறுமை அவசியம். தந்தையின் வழியில் எதிர்பார்த்த காரியம் முடிவதில் தாமதம் ஏற்படக்கூடும்.

**இடபம்:** இன்று புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். கணவன் மனைவி இருவரும் ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது.

**மிதுனம்:** அனுகூலமான நாள். முக்கிய முடிவு எடுப்பதற்கு முன்பு வாழ்க்கைத் துணையுடன் ஆலோசனை செய்வது நல்லது. கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகள் கேட்டதை வாங்கிக் கொடுப்பீர்கள்.

**கடகம்:** சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. நண்பர்கள் வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். உங்களை எதிர்த்துப் பேசியவர்கள் பணிந்து வருவார்கள்.

**சிம்மம்:** பணிகளில் கூடுதல் கவனம் தேவைப்படும் நாள். தேவையான பணம் கையில் இருந்தாலும், தேவையற்ற செலவுகளும் ஏற்படக்கூடும். வெளியிடங்களில் சாப்பிடுவதைக் கண்டிப்பாகத் தவிர்க்கவும். பிள்ளைகள் வகையில் சங்கடம் ஏற்படக்கூடும்.

**கன்னி:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். நீண்டநாள்களாகச் சந்திக்காமல் இருந்த நண்பர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள். தாய்வழி உறவினர்களால் செலவுகள் ஏற்படக்கூடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**துலாம்:** இன்று சாதிக்கும் நாளாக அமையும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். மனதில் தைரியம் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக்கொள்வார்கள்.

**விருச்சிகம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். ஆனால், மற்றவர்களுடன் பேசும்போது பொறுமை அவசியம். வீண் அலைச்சலைத் தவிர்ப்பது நல்லது. முக்கிய முடிவு எடுப்பதாக இருந்தால், குடும்பப் பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டுச் செய்யவும்.


**தனுசு:** இன்று எதிலும் பொறுமை அவசியம். உறவினர்களுடன் அனுசரணையாக நடந்துகொள்ளவும். புதிய முயற்சி சாதகமாகமுடியும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மகரம்:** தேவையான பணம் கையில் இருந்தாலும், வீண்செலவுகள் ஏற்படவும் வாய்ப்பு உள்ளது. உடல் ஆரோக்கியத்தில் கவனம்தேவை. குலதெய்வக் கோயிலுக்குச் செல்லும் வாய்ப்பு சிலருக்கு ஏற்படக்கூடும்.

**கும்பம்:** மனதில்தைரியமும்தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணையால் எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மீனம்:** காரியங்கள் சாதகமாக முடியும். புதிய முயற்சிகள் வெற்றிபெறும். எதிர்பாராத செலவுகளால் கடன்வாங்கநேரிடும். கூடுமான வரை வெளியூர்ப் பயணம் மேற்கொள்வதைத் தவிர்த்துவிடவும்.





## புத்தக அரங்க விழாவின் 2 ஆம் நாள் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், பெப். 23

தேசிய கலை இலக்கியப் பேரவையின் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு 'நூறு மலர்கள் மலரட்டும்' என்ற திட்டத்தின் புத்தக அரங்க விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வு 'ஈழத்து நூல்களை அறிவோம்' எனும் தொனிப்பொருளில் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப.3.30 மணிக்கு இளவாலை அண்ணாவியார் மிக்கேல் நீக்கிலான் நினைவு அரங்கில் இடம்பெறவுள்ளது.

இதன்போது வி. ஸ்ரீரஞ்சனியின் சிறுவர் இலக்கியமான 'மீராவின் தம்பி' பற்றி எழுத்தாளர் ஸ்ரீலேக்கா பேரின்பகுமாரும், 'சிறகை விரித்துப் பறப்போம்' சிறுவர் நூல் பற்றி ஓய்வுநிலை ஆசிரியர் விஜயா பீரிஸும் , கந்தர்மடம் அ. அஜந்தனின் 'மரணங்களின் சாட்சியாக' சிறுகதைத் தொகுதி தொடர்பாக எழுத்தாளரும் அபிவிருத்தி உத்தியோகத்தருமான டயானா நியூட்டனும் 'ஆற்றுப்படுத்தும் கலையும் சிலையும்' நூல் பற்றி கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி அதிபர் பொ. அரவிந்தனும் அறிமுகவுரைகளை ஆற்றவுள்ளனர்.

தொடர்ந்து மாலை 5 மணிக்கு நோபேட் உதயகுமார் அபிதாவின் நெறியாள்கையில் விசேட நடன நிகழ்வும், சண் நாடகக்குழுவின் தயாரிப்பில், பு. கணேசராசாவின் எழுத்துரு மற்றும் நெறியாள்கையில் 'என்னவென்று சொல்வேணடி' மற்றும் மாவை நித்தியானந்த னின் எழுத்துருவில் 'முட்டை' ஆகிய நாடகங்களும் இடம் பெறவுள்ளன. (ச-25)

## விருதுகளுக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம், பெப். 23

வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் அலகினால் வருடாந்தம் வழங்கப்பட்டுவருகின்ற 'கலைக்குருசில்' மற்றும் 'இளங்கலைஞர்' விருதுகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான விண்ணப்பப் படிவங்களை மாகாண மற்றும் கல்வி அமைச்சின் இணையத்தளங்களிலும் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர்களிடமும் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25)

பேடன் பவல் நினைவையொட்டி

## தென்மராட்சி சாரணியரால் 'க்ளீன் சிறீலங்கா' திட்டம்!

யாழ்ப்பாணம், பெப். 23

சாரணிய இயக்கத்தின் தந்தை ரொபர்ட் பேடன் பவல் பிரபுவின் 168 ஆவது பிறந்ததினத்தில் 'கிளின் சிறீலங்கா' செயற்திட்டத்துக்கு அமைவாக சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி மற்றும் உசன் இராமநாதன் மகாவித்தியாலயம் ஆகியவற்றின் சாரணியர்கள் இணைந்து சாவகச்சேரி புகையிரத நிலையத்தை அழகுபடுத்தும் பணியை நேற்று முன்னெடுத்தனர்.

பாடசாலைகளின் அதிபர்கள் தலைமையில் ஜனாதிபதி சாரணர் விருது பெற்ற டிறிபேர்க் கல்லூரியின் பழைய மாணவன் மதுசனின் இணைவழிகாட்டலில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சாரணிய மாணவர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் எனப் பலர் பங்கேற்றனர்.

அத்துடன் டிறிபேர்க் கல்லூரியின் 150 ஆவது ஆண்டின் நிறைவாக உருவாக்கப்பட்ட 'நகர்வனம்' பகுதியில் மரக்கன்றுகளும் நடப்பட்டன. (ச-28)



மகா சிவராத்திரியை முன்னிட்டு உரும்பிராய் ஞானவைரவ கோயில் நிர்வாகத்தினால் நேற்றுச் சனிக்கிழமை சமய அறிவுப்போட்டிகள் நடத்தப்பட்டன. (ச-25)

## 'வனமெல்லாம் புதிர்' நூல் அறிமுகம் இன்று

கிளிநொச்சி, பெப். 23

சிறந்த அறிவியல் புனைகதை இலக்கியத்துக்கான விருதைப்பெற்ற ஜனகா நீக்கிலாஸின் 'வனமெல்லாம் புதிர்' நூல் அறிமுக நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கிளிநொச்சி திறன் விருத்தி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. உலகத் தமிழ்ப் பண்பாட்டுப் பேரவையின் இலங்கைக் கிளையின் தலைவர் அருணாசலம் சத்தியானந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், யாழ் பல்கலைக்கழகத்தின் மேனாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா, படைப்பாளியும் சமூக செயற்பாட்டாளருமான வெற்றிச்செல்வி சந்திரகலா ஆகியோர் உரையாளர்களாகப் பங்கேற்கவுள்ளனர். (ச)

## கந்தரோடைக் குளக்கரை சுத்தம்செய்யும் நிகழ்வு

யாழ்ப்பாணம், பெப்.23

'அழகான கடற்கரை ஓர் கவர்ச்சிகரமான சுற்றுலாத்தலம்' எனும் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கந்தரோடைக் குளக்கரையைச் சுத்தம்செய்யும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணியளவில் உடுவில் பிரதேச செயலாளர் தலைமையில் நடைபெறவுள்ளது. பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் கிராமமக்கள் இணைந்து முன்னெடுக்கவுள்ள இந்தப் பணியில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு உடுவில் பிரதேச செயலக நிர்வாகத்தினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (ச-41-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை




**நாளொரு நல்வார்த்தை**

நான் எதையும் சாதிக்க வல்லவன் என்று சொல்லுங்கள். நீங்கள் உறுதியுடன் இருந்தால் பாம்பின் விஷம்கூட சக்தியற்றதாகிவிடும்.


—விவேகானந்தர்—

## தேரின் இரு அச்சாணிகள்!

துப்பாக்கிச்சூடுகளும், வன்முறைகளும் மலிந்த பூமியாக மாறியிருக்கின்றது இலங்கை. காலை, மதியம், இரவு என மாத்திரைகளை எடுத்துக்கொள்வதைப் போன்று ஒவ்வொருநாளும், நாட்டின் ஏதோவொரு பகுதியில் படுகொலைகள் சம்பவித்துக் கொண்டிருக்கின்றன. 'துப்பாக்கிச்சூடு கட்டுப்படுத்தப்படும், நாட்டிலிருந்து பாதாளக் குழுக்கள் அகற்றப்படும்' என்று அரசாங்கம் கூறுகின்ற போதிலும் அறிக்கைகளுக்கும், அரங்கேறும் சம்பவங்களுக்கும் இடையில் கிஞ்சித்தும் தொடர்பில்லை என்பதையே இந்த வன்முறைகளும் சூடுகளும் சாட்சியம் செய்கின்றன.மாற்றம் என்பது நாடாளுமன்ற ஆசனங்களிலோ அல்லது ஜனாதிபதிப் பதவியிலோ தங்கியுள்ள ஒன்றல்ல. அரசாங்கம் என்பது வேறு அரச நிறுவனங்கள் என்பது வேறு. நாடாளுமன்ற ஆசனங்களால் தீர்மானிக்கப்படும் அரசாங்கத்தினதும், அரச நிறுவனங்களினதும் பணிகள் ஒரு தேரின் இரு அச்சாணிகள் போன்றவை. இரண்டும் சீரா கவும், நேராகவும் இருந்தால் மட்டுமே தேர் நகரும். இல்லையேல் தேர் கவிழ்வது உறுதி. அதுபோல்தான், மாற்றம் நிகழ்த்தப்பட்டுவிட்டது, நாடாளுமன்றம் சுத்தம் செய்யப்பட்டுவிட்டது என்று அரசாங்கம் கூறினாலும், அரசநிறுவனங்களில் எந்த மாற்றங்களும் இல்லாதபட்சத்தில் இவ்வாறான துப்பாக்கிச்சூடுகள் தொடர்கதையே.

கொட்டாஞ்சேனையில் நேற்றுக் கைதுசெய்யப்பட்ட துப்பாக்கிதாரிகள் இருவர் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். 'பொலிஸாரை தாக்கமுனைந்ததைத் தொடர்ந்தே அவர்கள் கொல்லப்பட்டனர்' என்று பொலிஸ் திணைக்களம் அறிக்கையிட்டுள்ளது. இலங்கையில், பாரதூரமான குற்றங்களுடன் தொடர்புடைய ஆயுததாரிகள் கைதுசெய்யப்படும்போது, அவர்கள் பொலிஸாரைத் தாக்க முனைவதும், அதையடுத்து பொலிஸார் அவர்களைச் சுட்டுக்கொல்வதும் புதியதல்ல. இது ஆகப்பழைய நடைமுறை. பழகிப் புளித்துப்போன ஒன்று. ஜனாதிபதி அநுர, நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த காலங்களில் ஒருதடவை இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டியிருந்தார். எனவே, தனது ஆட்சியின் கீழ் இடம்பெறும் அதே விடயங்களுக்கு முப்படைகளின் தலைவராகவும், பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டிய பெரும் பொறுப்புடையவராகவும் அநுர என்ன செய்யப்போகின்றார்? என்ற கேள்வி எழுகின்றது.

ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் நோக்கம் சரியாக இருக்கலாம். ஆனால், அது தேரின் ஓர் அச்சாணி மட்டுமே. ஒரேயொரு அச்சாணியைக் கொண்டு தேரை செலுத்திவிட ஒருபோதும் இயலாது. அரசாங்கத் திணைக்களங்களின் சுயாதீனங்கள் இன்று ஊழலாலும், மோசடிகளாலும், ஆயுதக் குழுக்களாலும் இயல்பிழந்து வலுவிழந்து உள்ளன. அந்த விடயங்களில் தலையீடு செய்து இரண்டாவது அச்சாணியையும் சீராக்கினால்தான், இலங்கை எனும் தேர் அபிவிருத்தியையும் அமைதியையும் வளர்ச்சியையும் நோக்கி விரைந்து பயணிக்கும். இலங்கையின் பொருளாதாரம் சுற்றுலாத்துறையை மையப்படுத்தியே தற்போதுவரை கட்டமைக்கப்பட்டுவருகின்றது. இவ்வாறிருக்கையில் இத்தகைய அச்சுறுத்தல்கள் சுற்றுலாத்துறையை எந்தச் சமரசமும் இல்லாமல் நேரடியாகப் பாதிக்கும். அது இலங்கையின் தோல்வியாகவோ - பாதுகாப்புத் துறையின் தோல்வியாகவோ மட்டும் இராது. மாறாக, தேசிய மக்கள் சக்தியினர் மீது இலங்கையர்கள் கொண்ட நம்பிக்கையின் தோல்வியாகவே அமையும்.




# கொட்டாஞ்சேனையில் பொலிஸார் என்கவுண்டர்

### இருவர் உயிரிழப்பு

**யாழ்ப்பாணம், பெப். 23**

**கொழும்பு, கொட்டாஞ்சேனையில் நேற்றுமுன்தினம் நடந்த நடைபெற்ற துப்பாக்கிப்பிரயோக சம்பவத்தில் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவர் பொலிஸாரின் துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்துள்ளனர்.**

கொட்டாஞ்சேனைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில், வர்த்தக நிலையமொன்றின் உரிமையாளரான சசிகுமார் என்பவர் உயிரிழந்திருந்தார்.

துப்பாக்கிச்சூடு நடத்திவிட்டு தப்பிய கொலையாளிகளை கொடவத்தையில் வைத்து பொலிஸார் மடக்கிப்பிடித்து கைதுசெய்தனர். அவர்களிடம் மேற்கொண்ட விசாரணையில் சந்தேகநபர்கள் இருவரையும் மறைத்து வைத்திருந்த ஆயுதங்களைக் காட்டுவதற்காகப் பொலிஸாரினால் அழைத்துச் சென்றநிலையில், பொலிஸாரின் துப்பாக்கியைப் பறித்து பொலிஸார் மீதே சந்தேகநபர்கள் துப்பாக்கிச்சூடு நடத்த முற்பட்டுள்ளனர். இதனால் பொலிஸாரின் பதில் துப்பாக்கிச்சூட்டில் குறித்த இருவரும் உயிரிழந்துள்ளனர். இந்தச் சம்பவத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ச-இ)

## வர்த்தக அமைச்சர் மீது காணிமோசடி வழக்கு

வர்த்தகம், உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்கவுக்கு எதிராக காணி மோசடி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

நெசனல் வர்கஸ் இன்ஸ்டியூட் நிறுவனத்திற்குச் சொந்தமான இரண்டு மாடிக் கட்டடமொன்றைக் கொண்ட காணியை போலி காணி உறுதி தயாரித்து மோசடி செய்தாரென அவர் மீது குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது. இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது பாதிக்கப்பட்டவர்கள் தங்களது எழுத்துமூல சமர்ப்பிப்புகளை மார்ச் மாதம் 7ஆம் திகதி நீதிமன்றில் முன்வைக்கமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)


## நீரில் மூழ்கி வெளிநாட்டு பிரஜை சாவு

கொழும்பு, பெப். 23

ஹிக்கடுவை கடலில் மூழ்கி வெளிநாட்டுப் பிரஜை ஒருவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார். ரஷ்ய நாட்டைச் சேர்ந்த 38 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர் மேலும் இரண்டு வெளிநாட்டுப் பிரஜைகளுடன் இணைந்து ஹிக்கடுவை கடலில் நீராடிக் கொண்டிருந்தபோது இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது. (ச-இ)

## அரசியலமைப்பு விவகாரங்களுக்கு குழு நியமனம்

அரசியலமைப்பு விவகாரங்களை கையாள்வதற்கு குழு நியமிக்கப்படவுள்ளதாக சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன அறிவித்துள்ளார். இந்தக்குழுவில் பிரதமர் ஹரிணி அமரசூரிய, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, சபைத் தலைவர் பிமல் ரத்நாயக்க மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஹர்ஷன நாணயக்கார, சத்தியலிங்கம் மற்றும் நிஹால் அபேசிங்க ஆகியோர் அடங்குகின்றனர். (ச-இ)



## இன்சுலின் தட்டுப்பாடு

இன்சுலின் போதுமான அளவு இல்லாததால் நோயாளர்கள் பெரும் சிரமத்தை எதிர்கொண்டுள்ளனர் என்று மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான மருத்துவர்களின் தொழிற்சங்கக் கூட்டணிதங்க தலைவர் சமல் சஞ்சீவ தெரிவித்துள்ளார்.

மருத்துவ விநியோக பிரிவு இன்சுலின் விநியோகிக்கப்பட்டதாகக் கூறினாலும், மருத்துவமனைக்கு தேவையான அளவை விட குறைவாகவே கிடைக்கின்றன. இதன் விளைவாக, நோயாளர்கள் வெளிப்புற மருந்தகங்களிலிருந்து அதிக விலைக்கு அதனை பெறவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முப்படை வசமுள்ள காணிகள் விரைவில் விடுவிக்கப்படும்!

ஜனாதிபதி தெரிவிப்பு



**கொழும்பு, பெப்.23**
**வடக்கு, கிழக்கு மாத்திரமன்றி நாடு முழுவதிலும் முப்படையினரின் பாவனையிலுள்ள காணிகள் தொடர்பில் மீண்டும் மதிப்பாய்வு மேற்கொண்டு காணிகளை விடுவிப்பது குறித்து எதிர்காலத்தில் தீர்மானம் எடுக்கப்படும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

பத்தாவது நாடாளுமன்றத்தின் பாதுகாப்பு அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் முதலாவது கூட்டம் நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கில் மக்களின் உண்மையான தேவைக்கு அமைய விகாரைகள் அமைக்கப்பட்ட விவகாரம் சம்பந்தமான பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும். வடக்கில் அமைக்கப்படும் சட்டவிரோத விகாரைகளால் இன மற்றும் மத ரீதியான பிளவுகளை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன என்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் எனது கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

மதவாதம் மற்றும் இனவாதம் என்பன அரசியலில் இருந்து முற்றாக நீக்கப்படவேண்டும். வடக்கில் மக்களின் உண்மையான தேவைக்கு அமைய இந்தப் பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும்.

குறுகிய அரசியல் இலாபம் தேடும் குழுவினர் இதுபோன்ற சம்பவங்களை அரசியல் முரண்பாடு களாக்குகின்றனர். இதுபோன்று குறுகிய அரசியல் இலாபங்களுக்காக இனவாதம், மதவாதத்தைத் தூண்டுவதற்கு எவருக்கும் இடமளிக்கப்படமாட்டாது- என்றார். (ச-இ)

## மஹிந்த, மைத்திரி வெளிநாட்டுப் பயணங்களுக்கு 60 மில்லியன் செலவழிப்பு!

கொழும்பு, பெப்.23
முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்சவும், மைத்திரிபால சிறிசேனவும் தமது வெளிநாட்டுப் பயணங்களுக்கென 60 மில்லியனுக்குக் கூடுதலான தொகையைச் செலவிட்டுள்ளனர் என்று பிரதி வெளிவிவகார அமைச்சர் அருண் ஹேமசந்திர கடந்த வியாழக்கிழமை நாடாளுமன்றில் உரையாற்றுகையில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
2018ஆம் ஆண்டு மைத்திரிபால சிறிசேன அமெரிக்கா சென்றபோது முதல் பெண்மணி, ஒன்பது அமைச்சர்கள், பதின்மூன்று பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், 23 ஊடகவியலாளர்கள் உட்பட 77பேர் அவருடன் பயணம் செய்திருந்தனர். இந்தப்பயணத்துக்கு 50.4 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச இந்தியா சென்றபோது ஐந்து பெண்கள், 12 அதிகாரிகளுடன் மேலும் 11 அதிகாரிகள், 5 ஊடகவியலாளர்கள், இரண்டு தனித்தனி பாதுகாப்புப் பிரிவினர், முதல் பெண்மணி உட்பட 72 பேர் பயணம் செய்திருந்தனர். இந்தப்பயணத்துக்கு 9.5 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது - என்றார். (ச-41-6)

## சிறுவர்களிடம் மீட்கப்பட்ட தோட்டாக்கள்



கொழும்பு, பெப்.23
கண்டி, ஹசலக்கப் பிரதேசத்தில் சிறுவர்களிடமிருந்து சுமார் 30 துப்பாக்கிரவைகள் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஹசலக்க பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்ள வீடொன்றில் கடந்த புதன்கிழமை, சிறுவன் ஒருவன் அடுப்புக்குள் இட்டு எரித்த பொருள் வெடித்ததை அடுத்து வீட்டார் அதுதொடர்பில் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தியிருந்தனர்.

பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில், அந்தப் பகுதியில் உள்ள வீடொன்றுக்கு அருகில் விளையாடிக்கொண்டிருந்த சிறுவர்கள் அருகில் மரப்பலகைகள் அடுக்கப்பட்டிருந்த இடத்தில் கண்டெடுத்த துப்பாக்கி ரவைகளைத் தங்களுக்கிடையே பகிர்ந்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அதில் ஒரு சிறுவன் விளையாட்டாக துப்பாக்கி ரவையை அடுப்பில் போட்டபோது அது வெடித்துள்ளமையும் விசாரணையில் கண்டறியப்பட்டது.

அதையடுத்து சிறுவர்களின் வீடுகளில் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளில் 30 துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ஏ-இ)


## பொதுமக்களுக்கு இல்லாத பாதுகாப்பு அரசியல்வாதிகளுக்கு அவசியமில்லை

அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ

கொழும்பு, பெப்.23
பொதுமக்களுக்கு இல்லாத பாதுகாப்பு அரசியல்வாதிகளுக்கு அவசியமில்லை . பொதுமக்களைப் பாதுகாப்பதிலேயே அரசாங்கம் அதிக அவதானம் செலுத்தியுள்ளது என்று சுகாதார அமைச்சர், அமைச்சரவை ஊடகப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கனேமுல்ல சஞ்சீவவின் கொலையைக் காரணம் காட்டி அரசியல்வாதிகளுக்கு மீண்டும் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்ற கருத்தையும் எதிர்க்கட்சிகள் முன்வைத்துவருகின்றன.

உண்மையிலேயே அரசியல்வாதிகள் தங்களது தனிப்பட்ட விடயங்களுக்காகப் பாதுகாப்பை பயன்படுத்தியுள்ளனர். தேசிய பாதுகாப்பு தொடர்பில் அதிக அவதானம் செலுத்திவருகிறோம். அண்மைய தினங்களாகவே நாட்டின் பல பிரதேசங்களில் பாதாள உலக செயற்பாடுகள் பதிவாகியிருந்தன. அவை தொடர்பிலும் உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த கலாசாரத்தை மீள இலங்கையில் உருவாக்கமாட்டோம் - என்றார். (ச-இ)



## மலர்சாலையில் சஞ்சீவவின் சடலம்

கொழும்பு, பெப்.23
கணேமுல்ல சஞ்சீவவின் உடல் பொரளையில் உள்ள தனியார் மலர்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. இறுதிச் சடங்குகள் குறித்து இதுவரை எந்தத் தகவலும் தெரிவிக்கப்படவில்லை. சஞ்சீவவின் உடலை அடக்கம் செய்வதற்கு கொழும்பு தலைமை நீதிவான் தனுஜா லக்மாலி, அனுமதி வழங்கி உத்தரவிட்டிருந்தார்.

இந்நிலையில், கணேமுல்ல சஞ்சீவவின் உடல் அவரது உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ச-இ)

## சட்டவிரோத விகாரை விடயத்தில் நீதி நிலைநாட்டப்பட வேண்டும்

சமாதானத்துக்கும், நல்லிணக்கத்துக்குமான பணியகம் வலியுறுத்து

கொழும்பு, பெப்.23
தையிட்டியில் பொதுமக்களின் காணிகளில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டு வரும் திஸ்ஸ விகாரை தொடர்பில் வடக்கு மாகாணத்தின் சமாதானத்துக்கும், நல்லிணக்கத்துக்குமான பணியகம் கண்டனங்களைத் தெரிவித்துள்ளது.

அந்தப் பணியகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய மதத்தை பின்பற்றக்கூடியவர்கள் அதிகமாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பௌத்த மதத்தைபின்பற்றுகின்றவர்கள் இல்லாத இடங்களில் அரச அதிகாரப் படையினரின் அனுசரணையுடன் அத்துமீறிய இன, மத முரண்பாடுகளை தோற்றுவிக்கும் வகையில் பல செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது. அந்தவகையில் தையிட்டியில் மக்களுக்குரிய காணியில் சட்ட விரோத முறையில் அமைக்கப்பட்டு வரும் திஸ்ஸ விகாரை தொடர்பாக வடமாகாணத்தின் சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான பணியகம் கண்டனத்தைத் தெரிவிக்கின்றது.

இந்தவிடயத்தில் இன, மத முரண்பாட்டை மீண்டும் ஏற்படுத்தாத வண்ணம் நீதி நிலைநாட்டப்பட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற வேண்டுகோளையும் விடுக்கின்றோம் என்றுள்ளது. (எ-27)

## 'தினக்குரல்' நிறுவுநருக்கு இந்தியத்தூதரகம் இரங்கல்

இலங்கைத் தொழிலதிபரும் 'தினக்குரல்' நாளிதழின் நிறுவுநருமான எஸ். பி. சாமியின் மறைவுக்கு யாழ். இந்தியத் துணைத் தூதரகம் இரங்கலைத் தெரிவித்துள்ளது.

தமிழ் பத்திரிகைத்துறையிலும் தொழில்துறையிலும் அவர் ஆற்றிய தொண்டுகள் சிறந்த முன்னோடியாக தலைமுறைகளை ஊக்குவிக்கும். இந்தக் கடினமான தருணத்தில், அவருடைய குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும், 'தினக்குரல்' குழுவுக்கும் எங்கள் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறோம் என்றும் இந்தியத் துணைத் தூதரகம் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தூய்மை!

'தூய இலங்கை' வேலைத்திட்டத்தின் கீழ் கடற்கரையை சுத்தப்படுத்தும் 'அழகிய கடற்கரை ஒரு கவர்ச்சிகரமான சுற்றுலாத்தலம்' எனும் தேசிய வேலைத்திட்டம் பொது அமைப்புக்களின் பங்களிப்புடன் நெடுந்தீவு கடற்கரையில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 தொடக்கம் இடம் பெறவுள்ளது. குறித்த நிகழ்ச்சி திட்டத்தில் கலந்து கொண்டு தங்கள் ஒத்துழைப்பை வழங்குமாறு பொதுமக்கள் மற்றும் பொது அமைப்புக்களிடம் பிரதேச செயலகத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(ம-25-9)

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாண நகரின் மையப்பகுதியில் 23 பேர்ச் காணி விற்பனைக்கு உள்ளது. காணிக்கு முன்பாக யாழ்ப்பாணம் பொது வைத்தியசாலையும், பின்னால் Jetwing ஹோட்டலும் அமைந்துள்ளன.
தரகர் வேண்டாம்

தொடர்பு: 076 464 9028

### வேலையாட்கள் தேவை

சாவகச்சேரி நகரில் இயங்கும் பிரபல மோட்டார் சைக்கிள் விற்பனை உதிரிப்பாகம் மற்றும் பழுதுபார்க்கும் நிலையத்திற்கு மோட்டார் சைக்கிள் திருத்துநர்கள் (Mechanic) தேவை.

தொடர்புகளுக்கு:
077 620 5628

### வாகன ஓட்டுநர் தேவை

உடுவில் மகளிர் கல்லூரியின் **ஆட்டோ, கார், பஸ்** வாகனங்கள் ஓட்டுவதற்கு ஓட்டுநர்கள் தேவை.
தகுதியான சாரதி அனுமதிப்பத்திரத்துடன் காரியாலயத்திற்குச் சமுகம் தரவும்.

- **இடம் :** உடுவில் மகளிர் கல்லூரி அலுவலகம்
- **காலம் :** 24.02.2025 - 28.02.2025 வரை
- **நேரம் :** 8.30 - 2.30 வரை

(cr.44391) (N-1)
அதிபர்



### ஈழத்து கைலாய ஜோதிட நிலையம்

இந்தியாவில் ஆன்மீகத்துறையில் 10 வருடங்களாக புகழ்பெற்ற

**அம்மன் அருள் வாக்கு**

- கல்வியில் முன்னேற்றம் இல்லையா ?
- குழந்தைப் பாக்கியம் கை கூடவில்லையா?
- கணவன் - மனைவி பிணக்கா ?
- பிரிவால் வேதனையா? தொழில் பிரச்சினையா?
- வாழ்வில் முன்னேற்றம் இல்லையா?
- மாங்கல்ய பாக்கியம் கை கூடவில்லையா?
- வெளிநாடு செல்லத் தடையா?
- அடிக்கடி நோய் ஏற்படுகின்றதா?

அனைத்திற்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்
இல. 20/26, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(முன் அனுமதி பெற்றுக்கொள்ளவும்.)
தொடர்புகளுக்கு :- 077 281 1234

(CS/21777) J-1

### யா/ கொல்லங்கலட்டி சைவத்தமிழ் வித்தியாலயம்

பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும்.

காலம் :- 02.03.2025 ஞாயிற்றுக்கிழமை.
இடம் :- பாடசாலையின் பிரதான மண்டபம்.

அனைத்துப் பழைய மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தலைவர் — செயலாளர்

(CS/57565) J-1

### Jaffna College - Vaddukoddai
### Vacancy – Science Teacher – English Medium

Jaffna College is a prestigious and long standing private school in Vaddukoddai, Sri Lanka. The school is looking for a passionate, dynamic, inspirational and hard-working individual for the above position.

**Requirements**
- Academic Qualifications: Bachelor of Science Honours degree.
- Classes to handle: Grade 6 to A/L
- Language Proficiency: Fluency in both English and Tamil, with the ability to conduct classes in both languages.

Applicant should be
- be an individual with strong values such as honesty, integrity, sportsmanship and work ethics.
- be computer literate.

Closing date for applications 06.03.2025
Applications with the names of two non-related referees should be sent to hr@jaffnacollege.lk
**Only short listed candidates will be called for an interview.**

Principal

(CS/57574) J-1

### மணமகன் தேவை

1996, இந்து, பரணி, TEACHER
பூர்வீகம் -யாழ்ப்பாணம்
மணமகள் பதிவு இல: 11471.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401
www.EQMarriageService.com

### மணமகள் தேவை

1996, இந்து, பூரட்டாதி, ACCOUNTANT
பூர்வீகம் - புங்குடுதீவு, வதியுமிடம் - U.K
மணமகன் பதிவு இல: 11177.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401
www.EQMarriageService.com

### மாபிள்கள் விற்பனைக்கு

றொசல்ஸ் றைல்ஸ் மாபிள்கள் விற்பனைக்குண்டு

தொடர்புகளுக்கு:
077 988 8447
071 265 5832

### விற்பனைக்கு

தனங்களப்பு - மன்னார் வீதியில் அமைந்துள்ள சகல வசதியும் கொண்ட வீடு மற்றும் காய்க்கும் தென்னைகள் நிறைந்த 60 பரப்பு தென்னந்தோட்டம் விற்பனைக்கு.

(CR/44389) J-1

தொடர்பு:- 0094 77 425 3573

### வீடு வாடகைக்கு

தேவையான வசதிகளுடன் யாழ். மாதகல் பகுதியில் வீடு வாடகைக்கு உண்டு.
கல்வி நிலையத்துக்கோ அல்லது நிறுவனங்களுக்கு உகந்தது
தொடர்புகொள்ளவும்

077 731 8412

### வீடு வாடகைக்கு

யாழ். கோண்டாவில் புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் 50m தொலைவில் தளபாடத்துடன் 5 அறைகள், சமையலறை, 2 மலசலகூடம், குளியல் அறையுடன் கூடிய வீடு குறுகிய, நீண்ட மாத வாடகைக்குக் கொடுக்கப்படும்.

(CS/57491) J-1

077 623 5793, 077 296 9638

### மணமகள் தேவை

யாழ் இந்து (V) அவிட்டம் 4, 7 இல் சூரியன், செவ்வாய், புதன். அரச உத்தியோகத்தர் மணமகனுக்கு பொருத்தமான மணமகள் தேவை

தொடர்புகளுக்கு:
077 115 9862

### தேவை

யாழ் நகரில் இயங்கும் பிரபல தனியார் கல்வி நிறுவனத்திற்கு மேற்பார்வையாளர் தேவை. கணினி அறிவுள்ளவர்கள் விரும்பத்தக்கது.
யாழ் மாநகரை அண்டியவர்கள் தொடர்பு கொள்ளவும்.

074 056 7791

### காணி விற்பனைக்கு

நல்லூர் கோவிலில் இருந்து 600M தூரத்தில் 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
077 794 8012

### விற்பனைக்கு

நுரையீரல் பாதிப்பினால் மூச்சுவிடச் சிரமப்படும் நோயாளர்களுக்கு அவசியமான ஆறு மாதங்கள் பாவித்த நல்ல நிலையில் உள்ள பின்வரும் சாதனங்கள் விற்பனைக்கு உண்டு.

1. Oxygen Concentrator
2. N.I.V (BPAP System Device)
3. Oxygen Cylinder with Regulator.

விலை பேசித் தீர்த்துக்கொள்ளலாம்.

(CS/57550) J-1

077 300 0352

## Telesonic
comfort . convenience . care

**வளர்ந்து வரும் எமது குழுவில் இணைந்து கொள்ளுங்கள்**

### காட்சியறை முகாமையாளர் - யாழ்ப்பாணம்

Midea, Toshiba மற்றும் Carrier போன்ற அபிமானம் மிக்க உலகளாவிய வர்த்தகநாம உற்பத்திகளைப் பயன்படுத்தி இலங்கையில் வளிசீராக்கல் மற்றும் குளிரூட்டல் தீர்வுகளை வழங்கும் ஒரு முன்னோடி நிறுவனமாக டெலிசொனிக் லங்கா பிரசித்திபெற்று விளங்குகிறது. விரிவடையும் எமது வியாபார செயற்பாடுகளில் உலகப் பிரசித்தி பெற்ற வீட்டுசாதனங்கள் வர்த்தக நாமங்களையும் உள்ளடக்கியதாக எமது வர்த்தக செயற்பாடுகளை நாம் சிறப்பாக விஸ்தரித்து வருகின்றோம்.

எமது வளர்ந்து வரும் குழுவின் ஒரு பகுதியாக எமது வெற்றிக்கதைக்கு பங்களிப்பு செய்து எமது தொழிற்றுறையில் முன்னணி வர்த்தக நாமங்களுடன் இணைந்து பணியாற்றும் வாய்ப்பை நீங்கள் பெறுவீர்கள். உங்களுடைய பங்கு பல்வேறு பொறுப்புகள் சம்பந்தப்பட்டதாகவும் உங்களுடைய தொழில்சார் வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்குமான ஒரு மேடையை வழங்குவதாகவும் அமையும். எங்களுடன் ஒன்றிணைந்து எமது அனைத்து வியாபார அம்சங்களிலும் அனுபவத்தை நோக்கிய பயணத்தின் ஒரு பகுதியாக முன்னேறுங்கள்.

**தொழில் பொறுப்புகள்:**

- வாடிக்கையாளர் அனைத்தையும் காணும் அனுபவத்தை உறுதிப்படுத்தும் வகையில் அன்றாட காட்சியறை செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல்.
- புதிய வாடிக்கையாளர்கள் மற்றும் முகவர்களை அடையாளம் கண்டு கொள்வதன் மூலம் விற்பனைகளை அதிகரித்த மாதாந்த வருமான இலக்குகளை அடைதல்.
- பொருள் இருப்பு மட்டத்தைக் கண்காணித்து கணக்குப் பிரிவுடன் சேர்ந்து பொருள் இருப்பு மதிப்பீட்டை நடத்துதல் மற்றும் தோன்றக்கூடிய வியாபார செயற்பாடுகளை முகாமைத்துவம் செய்தல்.
- வாடிக்கையாளர் விசாரணைகள் மற்றும் முறைப்பாடுகளைக் கையாளுதல் மற்றும் அதிசிறந்த சேவையை வழங்குதல்.

**தொழில் தகைமைகள் :**

- க.பொ.த உயர்தர தகைமை அல்லது அதற்கு சமமாக சம்பந்தப்பட்ட ஒரு தொழில்சார் தகைமையைப் பூர்த்தி செய்திருத்தல்.
- சில்லறை விற்பனைகள் அல்லது காட்சியறை முகாமைத்துவத்தில் குறைந்தபட்சம் 3 - 5 வருடங்கள் அனுபவம்
- உறுதியான தலைமைத்துவ மற்றும் குழு முகாமைத்துவ திறமைகள்
- Ms Office தொழில் திறமை மற்றும் மென்பொருள் சில்லறை முகாமைத்துவம்
- வாடிக்கையாளர் தொடர்பாடல் மற்றும் எலக்ட்ரோனிக் கைத்தொழில் முன் அனுபவம் மேலதிக தகைமையாக கருதப்படும்.
- யாழ்ப்பாணத்தில் அல்லது வடபிராந்தியத்தில் வசிப்பவராக இருத்தல் மேலதிக தகைமையாக கருதப்படும்.


தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்களுக்கு கவர்ச்சிகரமான சம்பளப்பொதி தகைமைகள் மற்றும் அனுபவம் அடிப்படையில் ஏனைய அனுகூலங்கள் வழங்கப்படும்.

போட்டியான இந்த வேலைவாய்ப்பில் நீங்கள் வெற்றி பெற விரும்பினால் இந்த விளம்பரம் வெளியிடப்பட்ட 10 நாட்களுக்குள் **careers@telesoniclanka.com**என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சலின் subject lineல் விரும்பும் பதவியைக் குறிப்பிட்டு விண்ணப்பிக்கவும்.

www.[illegible].com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# ஆக்கப்பொருள் கண்காட்சி

பளை, பெப்.23

பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஆடை வடிவமைத்தல், அழகுக்கலை மற்றும் மனைப்பொருளியல் ஆகியவற்றின் பயிலுநர்களால் தயாரிக்கப்பட்ட ஆக்கப்பொருள்கள் காட்சிப்படுத்தலும் சான்றிதழ் வழங்கலும் பிரதேச செயலக மண்டபத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. பிரதேச செயலர் இ. த. ஜெயசீலன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மாவட்டக்கிராம அபிவிருத்தி அலுவலர் சி.உமாபாலன் கலந்துகொண்டார். (ச-25,9)





யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப்போட்டி, கல்லூரி அதிபர் அருட்தந்தை திருமகன் தலைமையில் கல்லூரி மைதானத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மறை மாவட்டக் குருமுதல்வர் ஜெபரட்ணம் அடிகளாரும், கௌரவ விருந்தினராக தேசிய கராத்தே தெரிவுக் குழுவின் தலைவர் அன்ரோ டினேஷிம் கலந்துகொண்டனர். (ச-25.20)







கிளிநொச்சி தர்மபுரம் மத்திய கல்லூரி மாணவர்களின் வீதியோட்ட நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. ஆண்களுக்கான வீதியோட்டம் பாடசாலை முன்றலில் ஆரம்பிக்கப்பட்டு ஏ 35 பிரதான வீதியினூடாக ரெட்பா சந்திவரை சென்று மீண்டும் பாடசாலை முன்றலில் நிறைவடைந்தது. பெண்களுக்கான வீதியோட்டம் ரெட்பா சந்தியிலிருந்து ஆரம்பிக்கப்பட்டு கல்லூரி முன்றலில் நிறைவடைந்தது. (ச-25, 113)



உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப்போட்டி அதிபர் க.உமாபாலன் தலைமையில் கல்லூரி மைதானத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக மருத்துவரும் உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தின் பழைய மாணவருமான மருத்துவக் கலாநிதி வே. பரமநாதன், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சிக் கல்வி வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் சி.நவநீதன், கொடிகாமம் உபபொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கஜாப் ஆகியோர் பங்கேற்றனர். (ச-41-159)



சைவபரிபாலன சபை நடத்திய புண்ணிய நாச்சியம்மையார் தினமும் பரிசளிப்பு விழாவும் சபையின் தலைவர் உ. தயானந்தன் தலைமையில் யாழ். நீராவியடியிலுள்ள சைவபரிபாலன சபையின் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றன. நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி மாலதி முகுந்தன், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-41-66)


கோப்பாய் ஆசிரியர் கலாசாலைச் சமூகத்தின் ஏற்பாட்டில், உலகத் தாய்மொழித்தினநிகழ்வு கலாசாலையின் முதல்வர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் ரதிலட்சுமி மண்டபத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் யாழ். பல்கலைக்கழகக் கல்வியியல் துறையின் தலைவர் கலாநிதி. ஆ. நித்திலவர்ணன் கலந்துகொண்டு வாழ்த்துரை ஆற்றினார். (ச-25, 66)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3 ஆம் ஆண்டு நினைவும் 1 ஆம் ஆண்டு நினைவும்

பிறப்பு 19.06.1939



இறப்பு 23.02.2022

பிறப்பு 16.04.1947



இறப்பு 23.02.2024

**தர்மலிங்கம் சண்முகராஜா** **சண்முகராஜா நித்தியலட்சுமி**

எம்மைப் பெற்றெடுத்து வளர்த்து எமது வளர்ச்சிப் பாதையை பசுமை ஆக்கி வாழ்வை மெருகூட்டி பொறுமை எனும் பாடம் புகட்டி எவ்வித நிலையையும் சமாளிக்க கற்றுத் தந்தவர்கள் நீங்கள். எமது கண்கள் கலங்கிய போதும் நாங்கள் இருக்கிறோம் என்று உறுதுணையாய் இருந்த எமது அப்பா அம்மா எம்மை விட்டு விரைவில் சென்றது ஏனோ? உங்கள் ஆத்மாக்கள் சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்

பிள்ளைகள், மருமகன்கள்
பேரப்பிள்ளைகள்

# மாவட்டச் செயலகம், கிளிநொச்சி
# பெறுகை அறிவித்தல்.

கிளிநொச்சி மாவட்டச் செயலாளரினால் பின்வரும் விபரங்களைக்கொண்ட குடிசார் வேலைகளுக்கான தேசிய பெறுகை பின்வருமாறு அட்டவணைப்படுத்தப்படுகிறது.

| இல | ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்த பெயர் | மதிப்பீட்டுத் தொகை(ரூபா) (வரி நீங்கலாக) | ICTAD தர பதிவு | பிணைப்பணம்/ காலம் | மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|---|
| 1 | KN/EB/13/Imp/25/1111-05 | Interlock paving to the path at skill development center, District Secretariat, Kilinochchi | 10.35 மில்லியன் | C6 & C5 Building | ரூபா 110,000/- 23.06.2025 வரை | 3500.00 |
| 2 | KN/EB/13/Imp/25/1111-06 | Painting & Repairing works in Canteen at District Secretariat, Kilinochchi | 1.97 மில்லியன் | Building C9& C8 | 20,000.00 26.05.2025 | 1500.00 |
| 3 | KN/EB/13/R.R/25/1110-16 | Renovation of roof top slab at District Secretariat, Kilinochchi | 2.86 மில்லியன் | Building C8 & C7 | 30,000.00 09.06.2025 | 2000.00 |

1. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல விலைக் கோரலாளர்களாலும் விண்ணப்பிப்பதற்கு தகுதியுடையவராவர்.
   I. நிர்மாணப்பயிற்சி கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையினால் (ICTAD/CIDA) தேசிய நிர்மாண ஒப்பந்ததாரரை பதிவு செய்யும் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்ததாரர் பதிவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
   II. இக்டாட் (ICTAD/CIDA) வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதியளவு ஒப்பந்தங்களை மேற்கொண்ட ஆற்றலைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   III. நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 04/2016 (ii) இலக்க 08.05.2019 ஆம் திகதிய நிதிச் சுற்றறிக்கைக்கு அமைவாக வடக்கு மாகாணத்தைச் சார்ந்தவர்களுக்கு 5% முன்னுரிமையளிக்கப்படும்.
   IV. ஒப்பந்ததாரர் மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்றவேலைச் செயற்றிறனுக்கு உட்பட்டு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் அட்டவணைப்படுத்தப்படாமலிருத்தல் வேண்டும்
2. ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த கேள்விதாரர்கள் கேள்விகள் தொடர்பான மேலதிக தகவல்களை கிளிநொச்சி மாவட்டச் செயலக நிர்வாகக்கிளையில் பெற்றுக்கொள்ளலாம். (தொ.பே.இல:- 0212285663, பக்ஸ் இல:-0212283966)
3. கேள்வி ஆவணங்களை 24.02.2025 ஆம் திகதியிலிருந்து 07.03.2025 ஆம் திகதிவரை முற்பகல் 9.00 மணிமுதல் பிற்பகல் 3.00 மணிவரை வேலைநாட்களில் கிளிநொச்சி மாவட்டச் செயலக நிர்வாகக் கிளையில் பெற்றுக்கொள்ளலாம்.
4. இப்பெறுகை தொடர்பான தெளிவுபடுத்தல் கூட்டம் (Pre bid meeting ) 05.03.2025 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.
5. இரு முத்திரை இடப்பட்ட உறைகளில் (மூலப்பிரதி, பிரதி) தனித்தனியாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட பெறுகை ஆவணங்களையும் கோருவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணங்களையும் சகல பெறுகை ஆவணங்களையும் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அது தொடர்பாக பந்தி 5 இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு அமைவாக ஒப்படைத்தல் வேண்டும்.
6. முத்திரையிடப்பட்ட பெறுகை ஆவணங்கள் யாவும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "KN/............................" என ஒப்பந்த இலக்கம் குறிப்பிடப்பட்டு தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, மாவட்டச் செயலகம், கிளிநொச்சி எனும் முகவரிக்கு 10.03.2025 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்குமுன் கிடைக்கப்பெற கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். பெறுகை ஆவணங்கள் யாவும் உடனடியாக திறக்கப்படும். பெறுகைகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.
7. கேள்விகள் தயாரிப்பு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விதாரர்களுக்கு ஏற்படும் ஏதாவது செலவுகளுக்கு அல்லது செலவினங்களுக்கு தொழில் தருநர் பொறுப்பாகமாட்டார்.
8. தாமதமாக கிடைக்கும் விலையிடப்பட்ட பெறுகைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

சு.முரளிதரன்
திணைக்களப் பெறுகைக்குழுத் தலைவர் / மாவட்டச் செயலாளர்,
கிளிநொச்சி மாவட்டம்.

(44390) J-1

## தேவை

அரியாலையில் இயங்கும் பல்பொருள் அங்காடிக்கு பொருட்கள் விற்பதற்கு விற்பனையாளர் தேவை (அருகில் உள்ளவர்கள் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது)

தொடர்பு: **077 540 0425**

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்திலிருந்து 2.5 கிலோமீற்றர் தூரத்திலும், பல்கலைக்கழக வளாகத்திலிருந்து 500 மீற்றர் தூரத்திலும் 2 1/4 பரப்பு காணியில் 4 அறைகள், வரவேற்பறை, சமையலறை, 2 குளியலறை, விறாந்தை தனிக்கிணறு என 2000 சதுர அடியில் அமைந்த பெரிய வீடு பாவனைக்கு ஏற்ற வகையில் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-

**Whats app:- +61 421 290 240**

## மைதான பராமரிப்பாளர்களுக்கான விண்ணப்பம் கோரல் பதவி வெற்றிடங்கள் இரண்டு (2)

Sri Lanka Cricket

யாழ் மாவட்ட துடுப்பாட்ட சங்கத்தின் மல்லாகம் ஸ்ரீ பாஸ்கரன் துடுப்பாட்ட மைதானத்திற்கு மைதான பராமரிப்பாளர் (2) பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப் பதவிக்கு விண்ணப்பிக்க தகைமை உடையவர்கள் தமது சுயவிபரக் கோவை, உறுதி செய்யப்பட்ட தொழில் அனுபவச் சான்றிதழ் ஆகியவற்றை எதிர்வரும் 28.02.2025 திகதிக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ கீழ் தரப்பட்ட முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**அனுப்ப வேண்டிய முகவரி:** இல: 84, இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி.

**குறிப்பு:** முன் அனுபவத்தின் அடிப்படையில் சம்பளம் தீர்மானிக்கப்படும்

**செயலாளர்**
**யாழ் மாவட்ட துடுப்பாட்ட சங்கம்.**

# மரண அறிவித்தல்

தோற்றம் 23 . 11 . 1958



மறைவு 22 . 02 . 2025

**அமரர் காசிநாதர் கணேசலிங்கம் (1020 கணேசு)**

சரசாலை மத்தி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட காசிநாதர் கணேசலிங்கம் அவர்கள் நேற்று (22.02.2025) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற காசிநாதர்-தங்கரத்தினம் தம்பதிகளின் ஏக புத்திரனும் இராஜேஸ்வரி காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரி, கமலேஸ்வரி மற்றும் விமலேஸ்வரி, கனகேஸ்வரி, மகேஸ்வரி, சாரதா ஆகியோரின் அன்புச் சகோதரனும் கதிர்காமநாதன் காலஞ்சென்ற குகதாசன் மற்றும் கனகரத்தினம், காங்கேசன், வேதநாயகன், தங்கவேலு ஆகியோரின் மைத்துனரும் நிவேதா, தாரணி, ஜனனி, கஜனி, விசாகன், சாகித்தியன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.02.2025) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் சரசாலை மத்தியில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சரசாலை ஆலடி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**சரசாலை மத்தி**
**சாவகச்சேரி**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நிலநடுக்கம்

ஆப்கானிஸ்தானில் நேற்று அதிகாலை இரண்டு நிலநடுக்கங்கள் அடுத்தடுத்து ஏற்பட்டுள்ளன. ரிக்டர் அளவுகோலில் ஒரு நிலநடுக்கம் 4.6 அலகுகளாகவும், மற்றைய நிலநடுக்கம் 4.2 ரிக்டர் அலகுகளாகவும் பதிவானது. (ம)

## துப்பாக்கிச்சூடு

அமெரிக்காவின் கெண்டகி மாநிலத்தில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில், இரண்டு பெண்கள் உட்பட மூவர் உயிரிழந்துள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)


# கண்ணீர் அஞ்சலி

மண்ணில் 27 . 04 . 1950

விண்ணில் 21 . 02 . 2025



### அமரர் திருமதி ஈஸ்வரகுமாரி கிருஷ்ணதாசன்

அன்னார் ம. கிருஷ்ணதாசனின் அன்பு மனைவியும், கோகுலன், மயூரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், சக்தியின் அன்புப் பேர்த்தியும், அமரர் விஜயரட்னம் - புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும், அமரர் மகாலிங்கம் - செல்வரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகளும், விஜயகுமாரன், நந்தகுமாரன், சிவகுமாரி, மேகலா ஆகியோரின் அன்புச் சகோதரியும், பரமானந்ததேவி (அமரர்), பரமநாதன் (அமரர்), பரமானந்தராஜா, பரமநாயகம் (அமரர்), கணேஸ்வரன் (அமரர்), சுத்தானந்தன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

உற்றார், உறவினர்,
உதயதாரகை,
கைதடி மத்தி, கைதடி.

# மரண அறிவித்தல்

மலர்வு 01 . 01 . 1936

உதிர்வு 19 . 02 . 2025



### செல்லையா பொன்னுச்சாமி (S.P. சாமி)

எமது தந்தையாரின் நண்பரும் Dr கேசவராஜா அவர்களின் அன்புத் தந்தையுமான செல்லையா பொன்னுச்சாமி அவர்கள் காலமான செய்தி கேட்டதும் ஆழ்ந்ததுயரில் இருக்கும். அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

சாரங்கா நகைமாடம்
வெங்கடேஸ்வரா பேருந்து
பங்காளரும்
உரிமையாளரும் ஊழியர்களும்

(CS 2593) V-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 02 . 04 . 1952

மறைவு 18 . 02 . 2025



### தம்பிராசா சண்முகலிங்கம்

(ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர், கட்டடத் திணைக்களம்,
Retired Technical officer - Building Department)

யாழ். மீசாலை வடக்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட தம்பிராசா சண்முகலிங்கம் அவர்கள் கடந்த 18.02.2025 செவ்வாய்க்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான தம்பிராசா - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுந்தரம் சின்னத்தம்பி - அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், யோகராஜமலர் (ஓய்வுபெற்ற ஆசிரியர் வீரசிங்கம் மத்திய கல்லூரி) அவர்களின் அன்புக் கணவரும், தீபா (பிரான்ஸ்), கபிலன் (லண்டன்), ரூபா (லண்டன்), நிசாந்தி (லண்டன்), சோபனா (முகாமைத்துவ உத்தியோகத்தர் பிரதேச செயலகம் தெகிவளை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பகீரதன் (பிரான்ஸ்), பத்மறாஜி (லண்டன்), கேதீஸ்வரநாதன் (லண்டன்), ஐங்கரன் (லண்டன்), டினேஸ்குமார் (பொறியியலாளர் நகரசபை- தெகிவளை) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், குமாரவேலு மற்றும் நல்லம்மா (அவுஸ்திரேலியா), கமலாதேவி (இலங்கை), காலஞ்சென்றவர்களான குணசிங்கம், சுந்தரலிங்கம் மற்றும் ஸ்ரீஸ்வரன் (Holland) ஆகியோரின் அன்புச் சகோதரரும், அருளானந்தம் (Doctor), இளம்பிறைநாதன் (Retir`ed A.G.M Peoples Bank), தேவமலர், பொற்கிளி (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், தீபக் (பொறியியல் பீடம், மொறட்டுவ பல்கலைக் கழகம்), சாருக் (பிரான்ஸ்), றொஜிஷ், கஜிஷா (லண்டன்), அபிஷா, அஷ்வியா, அக்ஷித் (லண்டன்), வர்ஷன், ஆருஷ், ஆராதனா (லண்டன்), பிரணவ், ஆரத்யா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.02.2025) ஞாயிற்றுக்கிழமை மு.ப 08:30 மணிமுதல் மு.ப 10:30 மணிவரை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

யோகராஜமலர் - மனைவி - +94778867258,
தீபா-பகீரதன் - மகள் - +33758823355
கபிலன் - பத்மறாஜி - மகன் - +447772444548,
ரூபா-கேதீஸ்வரநாதன் - மகள் - +447737386558
நிசாந்தி-ஐங்கரன் - மகள் - +447585669296,
சோபனா-டினேஸ்குமார் - மகள் - +94778583858
நல்லம்மா-சகோதரி - +61423153055,
கமலாதேவி - சகோதரி - +94774652259, ஸ்ரீ ஸ்ரீஸ்வரன் - சகோதரர்

தகவல்: மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்
சியாமிளா மில் லேன்,
மீசாலை வடக்கு, மீசாலை.

(CS/443881) J-1

# மரண அறிவித்தல்

பிறப்பு 09 . 05 . 1941

இறப்பு 20 . 02 . 2025



### இராசதுரை பாலசிங்கம்

யாழ். நுணாவில் சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இராசதுரை பாலசிங்கம் கடந்த 20.02.2025 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசதுரை - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், மாவிட்டபுரத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான நடேசு - சின்னமணி தம்பதியரின் மூத்த மருமகனும், புவனேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், றமேஸ்வரன் அவர்களின் வளர்ப்புத் தந்தையும், சுகன்ஜா றமேஸ்வரன் அவர்களின் அன்பு மாமனாரும், சுவேதன், வாசனா ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற நடராஜமணி மற்றும் பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.02.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 12.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக குச்சப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

தொடர்பு:
றமேஸ்வரன் - மகன் - Mobile: + 141 652 38 324
புவனேஸ்வரி - மனைவி - Mobile: + 947 760 69450

(cs 57570) (N-1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருதிக்கொடை இன்று

யாழ்ப்பாணம், பெப்.23

உரும்பிராய் உதவும் நண்பர்கள் அமைப்பு 11ஆவது ஆண்டாக நடத்தும் மாபெரும் குருதிக்கொடை முகாம் நகுலேஸ்வரன் விஜயசன் ஞாபகார்த்தமாக இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 2மணி வரை உரும்பிராய் மேற்கு இளைஞர் சனசமூக நிலைய மண்டபத்தில் இடம்பெற வுள்ளது.

இந்தக் குருதிக்கொடை முகாமில் பங்குபற்றும் அனைவருக்கும் பயனுள்ள மரக்கன்றுகள், அழகிய தேநீர்க் கோப்பைகள் மற்றும் பாராட்டுச்சான்றிதழ்கள் என்பன வழங்கப்படும் என ஏற்பாட்டா ளர்கள் தெரிவித்துள்ளனர். (ச-41-66)

**வாடகைக்கு உண்டு**

சுண்டுக்குளியில் Restin, அறைகள் வாடகைக்கு உள்ளன.

தொடர்பு: **077 724 2427, 077 741 2713**

## பாதாளக்குழு உதவியாளர் கைது

கொழும்பு, பெப். 23

டுபாயில் தலைமறைவாகவுள்ள பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்தவரும் பிரபல போதைப்பொருள் கடத்தற்காரருமான 'சேதவத்த கசுன்' என்பவரின் உதவியாளர் ஒருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார் எனக் கொழும்பு வடக்குப் பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். கைது செய்யப்பட்ட சந்தேகநபர் கொழும்பு வெல்லம்பிட்டிப் பிரதேசத்தில் வசிக்கும் 23 வயதுடையவராவார். சந்தேகநபரிடமிருந்து 11 கிராம் 500 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும் வாள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. (ச-இ)

## மின் உற்பத்தி வீழ்ச்சி

கொழும்பு, பெப்.23

நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக நீர்மின் உற்பத்தி வீழ்ச்சியடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இலங்கை மின்சாரசபையின் மொத்த மின் உற்பத்தியில் 21 வீதம் குறைவடைந்துள்ளது எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. வீழ்ச்சியடையும் மின்சார உற்பத்தியை ஈடு செய்வதற்கு எரிபொருள் மின் உற்பத்தி நிலையங்களின் மின் உற்பத்தியை அதிகரிக்க நேரிட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

Kings Care **Quality Care for Senior Citizens with Love**



For further information:
Phone - Thuva - 0767022 0515 //
Email : thuvarsikan523@gmail.com
Head Office Chemmida
Phone - 0779714784 // Email - ...@yahoo.com

Our skilled home assistants will help to
- Maintain proper Personal and Domestic Hygiene
- Assist in Activities of Daily Living and Assist to improve Psychological Wellbeing

(Also providing housemaids for cooking and cleaning)

வயோதிபர், நோயாளிகள் பராமரிப்பு மற்றும் வீட்டு வேலைகளுக்கு ஆட்களை வழங்குகின்றோம்.



# பணிநிலை வெற்றிடம்

பின்வரும் பணிநிலைகளுக்கு அனுபவமும் ஆற்றலும் மிக்கவர்கள் உடனடி வேலைவாய்ப்பு

- உதவி ஆசிரியர்கள்
- களச்செய்தியாளர்கள்
- ஒப்புநோக்குநர்கள்
- பக்கவடிவமைப்பாளர்கள்


ஆர்வமும் தகைமையும் உடையோர் மின்னஞ்சல் ஊடாகவோ அல்லது தபால் மூலமாகவோ விண்ணப்பிக்கலாம்.

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

chiefeditor@uthayan.com

# மரண அறிவித்தல்

தோற்றம் 09 . 03 . 1963



மறைவு 22 . 02 . 2025

**அம்பலம் இரவீந்திரதாசன்** (சமாதான நீதவான்)

திருகோணமலையைப் பிறப்பிடமாகவும் இல 14, சபாபதி வீதி, பூநாறி மரத்தடியை வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலம் இரவீந்திரதாசன் அவர்கள் நேற்று (22.02.2025) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலம்-அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற தியாகராசா-யோகேஸ்வரி தம்பதியரின் பாசமிகு மருமகனும் சகுந்தலாஜினி அவர்களின் அன்புக் கணவரும் நீலவர்ணா, ரஜிவர்ணன் (ஸ்டோனியா), ஹேமவர்ணா (நியூசிலாந்து) ஆகியோரின் அன்புத் தந்தையும் சுபேந்திரன், மேர்லி (ஸ்டோனியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான தயாரட்ணம், யோகராஜா மற்றும் விஜயகுமாரி (திருகோணமலை), தவமலர் (திருகோணமலை) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற தியாகராசா மோகன் மற்றும் ரவீந்திரன் கிருஷ்ணவேணி, பழனிதாஸ் மீனலோஜினி ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற நடராசா சந்திராதேவி ஆகியோரின் அன்பு மருமகனும் ரிச்சாட்றைஸ்டன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.02.2025) திங்கட்கிழமை பிற்பகல் 02.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

இல 14, சபாபதி வீதி,
பூநாறி மரத்தடி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 639 3740



**சைவ நெறிக்கூடம்**
**அருள் ஞானமிகு உச்சி முருகன் கோயில்**
**Bridge Street, High Wycombe, Bucks HP11 2EL.UK**

எமது திருக்கோயிலுக்கு தமிழில் பூசை செய்யக்கூடிய அனுபவமிக்க அருட்சுனைஞர் தேவை.

இரண்டு வருடங்களுக்கு மட்டும்

(அரசாங்க வேலை அனுமதி எடுத்துத் தரப்படும்)

இங்கிலாந்துக்கு வரக்கூடியவர்கள் கடவுச்சீட்டு மற்றும் சான்றிதழ்களை அனுப்பி வைக்கவும் சூம் மூலம் தேர்வு.

தேர்வுக்கு மேலதிக விபரங்கள் மற்றும் ஆவணங்கள் அனுப்ப

**Whatsapp : 0044 7841 522514**

நிர்வாகத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒலிபரப்பாளர் ஆனந்தி நேற்றுமுன்தினம் மறைவு


கொழும்பு, பெப். 23
பிபிசி தமிழ்ச் சேவையில் இணைந்த முதலாவது பெண்மணி என்று அறியப்படும் ஒலிபரப்பாளர் ஆனந்தி சூரியப்பிரகாசம் நேற்றுமுன்தினம் காலமானார்.
பல்வேறு தடைகளைத் தகர்த்து மிகச்சிறந்த ஊடகவியலாளராகவும், ஒலிபரப்பாளராகவும் செயற்பட்டுவந்த ஆனந்தி சூரியப்பிரகாசம் விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனையும் நேர்காணல் செய்த பெருமைக்குரியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-இ)

# இராணுவத்தைவிட்டு வெளியேறுவோரே பாதாளக் குழுக்களுடன் தொடர்பு

ஆயுதப்பயிற்சி பெற்ற பின்னர் சட்டவிரோதமாக இராணுவத்தைவிட்டு வெளியேறும் பலர் பாதாள உலகக் குழுக்களுடன் தொடர்புகொள்ளும் போக்கு அதிகரித்துவருகின்றது என்று பாதுகாப்புச் செயலாளர் ஏர் வைஸ் மார்ஷல் (ஓய்வு) சம்பத் துய்யகொந்தா தெரிவித்துள்ளார்.
அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
பொருளாதார நெருக்கடி மற்றும் போதைப்பொருள் பழக்கம் காரணமாக இராணுவத்தினர் குற்ற வாளிகளுடன் தொடர்பில் இருக்கின்றனர் எனத் தகவல்கள் கிடைத்துள்ளன. எதிர்காலத்தில் அவர்களை அடையாளம் கண்டு கைதுசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பாதுகாப்புச் செயலாளர் தெரிவித்தார். (ச-இ)

## மரண அறிவித்தல்

தோற்றம்
05 . 11 . 1962



இறப்பு
21 . 02 . 2025

### வல்லிபுரம் மகேந்திரராசன் (மகான்)

(காளிகோவிலடி மல்லாகம்-பிரான்ஸ்)

காளிகோவிலடி மல்லாகத்தை பிறப்பிடமாகவும் பிராண்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் மகேந்திரராசன் (மகான்) நேற்று முன்தினம் (21.05.2025) சனிக்கிழமை அமரத்துவமடைந்துவிட்டார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லலிபுரம்-சரஸ்வதி தம்பதிகளின் மகனும் காலஞ்சென்றவர்களான கமலாதேவி, மல்லிகாதேவி, ஜெயராஜன் (அப்பன்) மற்றும் சௌந்தர்ராஜன், விமலாதேவி ஆகியோரின் சகோதரனும் சாந்தினியின் கனவரும் யுவந்தன், சதீசன், சகிதன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிராண்சில் நடைபெறும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சகோதரர்கள்
காளிகோவிலடி மல்லாகம்
22.02.2025

## 31ம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

அன்புடையீர் !

கடந்த 27.01.2025 திங்கட்கிழமை
அன்று இறைபதமடைந்த எமது குடும்பத்தலைவர்

### அமரர். தர்மலிங்கம் சுந்தரலிங்கம்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் 24.02.2025 திங்கட்கிழமை காலை 6 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வு 26.02.2025 புதன்கிழமை பகல் 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்கள் அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

இல 86/3, திருவையாறு,
கிளிநொச்சி.
0767014510 / 0763806990

இங்ஙனம்
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

## அருணாசலம் மனோரஞ்சிதம்



நுணாவில் மேற்கு சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட அருணாசலம் மனோரஞ்சிதம் அவர்கள் நேற்றுமுன்தினம் (21.02.2025) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-அன்னலட்சுமி தம்பதிகளின் பாசமிகு மகளும், அருணாசலம் அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற நடராசா மற்றும் வசந்தகுமாரன், விஜயகுமாரன், கோமதி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், மேனகா, சுகுணா, சத்துருசிங்கம் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், காஞ்சனா காலஞ்சென்ற லதாசினி மற்றும் அரவிந்தி, சயந்தி, பிரதாபன், துசாபரன், திவாகர் ஆகியோரின் பாசமிகு தாயாரும் சிவராசா, பிரதீபன், கௌதமி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் பிரியலதா, திவாசினி தஷ்வின், யெருசிகன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
குடும்பத்தினர்

| | |
|---|---|
| அருணாசலம் (கணவர்) | : 077 967 2340 |
| பிரதாபன் (மகன்-அவுஸ்திரேலியா) | : 044 974 4699 |
| அரவிந்தி (மகள்-அவுஸ்திரேலியா) | : 041 087 9270 |
| சிவா (அவுஸ்திரேலியா-மருமகன்) | : 042 475 7814 |

தோற்றம் 29.05.1955
மறைவு 21.02.2025

நுணாவில் மேற்கு
சாவகச்சேரி

(CS 57584) V-1

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பாதீடு தொடர்பில் கலந்துரையாடல்!

அரசியல் பேசும் இளையோர் அமைப்பின் ஏற்பாட்டில் 2025ஆம் ஆண்டுக்கான பாதீட்டை விளங்கிக் கொள்ளுதல் தொடர்பான கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணியளவில் இணையவழியில் இடம்பெறவுள்ளது.
நிகழ்வில் முனைவர் பட்ட ஆய்வாளர் நியந்தினி கதிர்காமர் கலந்து கொண்டு கருத்துரை ஆற்றவுள்ளார். இக்கலந்துரையாடலில் Meeting ID: 862 4662 0466, Passcode: politics ஊடாக இணைந்துகொள்ளமுடியுமென நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ம-66)

### தவறான...

ஸார் தெரிவித்துள்ளனர். 47 வயதுடைய குடும்பத்தலைவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அளவுக்கு அதிகமான கடன்சுமை காரணமாகவே அவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார் என்று முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
இறப்பு விசாரணைகளைத் திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (அ-ம-66)

### விடுதலைப்...

பாதுகாப்புச் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் எச்.எஸ்.துயகொந்தாவால் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.
பயங்கரவாதத்தில் ஈடுபட்டமை, பயங்கரவாதத்துடன் தொடர்புபட்ட செயற்பாடுகளுக்கு நிதியளித்தமை ஆகிய குற்றச்சாட்டுகளின் அடிப்படையிலேயே இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக அந்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.
குறித்த அமைப்புகளின் நிதி மற்றும் பொருளாதார சொத்துகளும் முடக்கப்பட்டுள்ளன. மேலும், பயங்கரவாதத்துடன் தொடர்புடைய 222 நபர்களின் பெயர்ப்பட்டியலையும் அரசாங்கம் வெளியிட்டுள்ளது. (அ-ம-இ)

### விசாரணைகளைக்...

நிலையில், சில சந்தர்ப்பங்களில் அவற்றுக்குத் தடங்கல் ஏற்படுத்துவதற்கு முயற்சிக்கும் குழுக்கள் தொடர்பிலும், நபர்கள் சம்பந்தமாகவும் எமக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன.
திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் இருப்பு, சில மோசடியான அரசியற்குழுக்களில்தான் தங்கியுள்ளது.
ஆதலால், அந்தக் குற்றச்செயல்களில் ஈடுபடும் குழுக்களைப் பாதுகாப்பதற்கு அரசியற்குழுக்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றன. சந்தேக நபர்கள் சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர். சிலருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளது. மேலும் சிலருக்கு வழக்குத் தொடுப்பதற்குரிய ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன.
உயிர்த்தஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் மீள்விசாரணை ஆரம்பமாகியுள்ளது. வெளிவராத பக்கங்கள் பற்றியும் விசாரணை தொடர்கின்றது. இப்படியான விசாரணைகளை ஒடுக்குவதற்கும், நாட்டில் உறுதியற்ற நிலையை ஏற்படுத்துவதற்கும் சிற்சில குழுக்கள் செயற்படுகின்றன. இது தொடர்பிலும் விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன. நாட்டின் தேசியப் பாதுகாப்பை பலவீனமடையச் செய்ய எவரையும் அனுமதிக்கமாட்டோம் - என்றார். (அ-ம-44)

### படுகாயமடைந்தவர்...

தார். கோப்பாய் மத்தியைச் சேர்ந்த சோதிலிங்கம் கஜேந்திரன் (வயது -30) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.
மரண வீட்டுக்குச் சென்று திரும்பியவர்கள், குழுவாகக் கடையொன்றுக்கு முன்பாக நின்றவேளையில் காரொன்று அவர்கள் மீது மோதியது.
நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த விபத்தில் ஒருவர் படுகாயமடைந்ததுடன், மேலும் 5 பேர் காயமடைந்திருந்தனர். அவர்களில் படுகாயமடைந்த நபரே நேற்று சிகிச்சையின்போது உயிரிழந்துள்ளார்.
விபத்தை ஏற்படுத்திய சாரதி, காருடன் தப்பிச்சென்ற நிலையில், அவரைக் கைதுசெய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (அ-ம-26)

### மார்ச்சில்..

மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் மழை கிடைக்கும் நாள்களாக அமையும் என்பது மகிழ்ச்சியான செய்தி.
அயன இடை ஒருங்கல் வலயச் செயற்பாட்டால் தூண்டப்பட்ட மேற்காவுகை (வெப்பச்சலனம்) காரணமாகவே மார்ச் மாதம் அதிகளவிலான மழைநாள்கள் நிலவ வாய்ப்புண்டு.
ஆனால், மார்ச் மாதத்தில் கிடைக்கவுள்ள மழை மேற்காவுகை மழை என்பதனால் இடிமின்னல் நிகழ்வுகள் தொடர்பில் அவதானமாக இருப்பது அவசியம். பொதுவாக மார்ச், ஏப்ரல் மாதங்களில் அதிகமழை கிடைப்பது நீர்வள ரீதியாக எமக்கு நன்மையானது. ஏனெனில், இந்த மழை எமது தரைக்கீழ் மற்றும் தரைமேற்பரப்பு நீர்வள மீள்நிரப்புகையில் அதிகம் செல்வாக்குச் செலுத்தும் - என்றுள்ளது. (அ-ம-66)

### இலங்கையில்...

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
'கடந்த காலங்களில் பாதாளக் குழுக்களுக்கு ஏதேனும் அடிப்படையில் அரசியற்பாதுகாப்பு கிடைக்கப்பெற்றுள்ளது. தற்போது அவ்வாறு அரசியற் பாதுகாப்பு கிடைக்கப்பெறவில்லை. இலங்கைக்குள் உதவியாளர்கள் மூலமும் செயற்படமுடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. கைதுகள் இடம்பெறுகின்றன. இதனால் சிலர் வெளிநாடுகளுக்குத் தப்பிச்சென்றுள்ளனர்.
இலங்கையில் தற்போதுவரை 58 பாதாள உலகக்குழுக்கள் செயற்படுகின்றன. ஆயிரத்து 400 வரையான உதவியாளர்கள் உள்ளனர். 'கோட்பாதர்கள்' வெளிநாடுகளில் இருந்து இவர்களை இயக்குகின்றனர். 2024ஆம் ஆண்டு 75 துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றன. வெட்டிப் படுகொலைசெய்யப்பட்ட சம்பவங்கள் 18 பதிவாகின.
இவ்வருடம் இதுவரையான காலப்பகுதியில் 17 துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. வெட்டிப் படுகொலைசெய்யப்பட்ட சம்பவங்கள் 5 இடம்பெற்றுள்ளன. இவற்றுக்கு மறைமுகமாகவோ, நேரடியாகவோ பாதுகாப்புத் தரப்பின் ஒத்துழைப்புக் கிடைக்கப்பெற்றுள்ளது. அவர்களும் அடையாளம் காணப்பட்டு கைதுசெய்யப்பட்டு வருகின்றனர். துப்பாக்கிகளும் மீட்கப்பட்டுள்ளன - என்றார். (அ-ம-44)

### தனிநபர்...

பட்ட பிரேரணைக்கு ஆளுங்கட்சியினரும் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளனர்.
ஆளுந்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான ரொசான் அக்மிமென, ரஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி ஆகியோர் இந்தப் பிரேரணையை முன்வைத்தமைக்காக நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனுக்கு தமது ஆதரவைத் தெரிவித்தனர்.
அத்துடன் இவ்வாறான பிரேரணையை முன்வைத்தமைக்காக கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனுக்கு நன்றி தெரிவித்ததுடன், இந்தப் பிரேரணை மீது உடன் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் உறுதியளித்துள்ளார். (அ-ம-26)

### சட்டவிரோத...

என்று வலியுறுத்தி நாடாளுமன்ற உறுப்பினர் து.ரவிகரன் நேற்றுத்தனிநபர் பிரேரணையை முன்வைத்துள்ளார்.
குறித்த பிரேரணையை முன்வைத்து ரவிகரன் எம்.பி. தெரிவித்ததாவது:-
வடக்குக் கடற்பரப்பில் இன்று சட்டவிரோதிகளின் ஆதிக்கம் அதிகரித்துள்ளது. சட்டவிரோத மீன்பிடி காரணமாக, பல்லாயிரம் நேர்மையான மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் இந்தத் தொழிலை விட்டுவிடலாமா? என்று எண்ணும் அளவுக்கு நிலைமை மோசமாகிவிட்டது. வடக்குக் கடற்பரப்பில் இருந்து மீனினங்கள் விரைவாக அழிந்துவிட்டன. எனவே, சட்டவிரோத மீன்பிடியை கட்டுப்படுத்தப்போகின்றீர்களா? இல்லையா?, சட்டவிரோத மீன்பிடியைக் கட்டுப்படுத்த அரசாங்கத்தால் முடியுமா, முடியாதா? என்ற கேள்விகளுக்குத் தெளிவான பதில் வழங்கப்படவேண்டும்.
இந்தக் கேள்விகளுக்கான பதில்களை இன்றைய மீனவர்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்.
தயவுசெய்து விரைவாக நடவடிக்கைகளை மேற்கொண்டு வடக்குக் கடற்பரப்பை சட்டவிரோதிகளின் ஆதிக்கத்தில் இருந்து விடுவியுங்கள். இப்போது வடக்குக் கடற்பரப்பில் சட்டவிரோதிகளின் ஆட்சிதான் நடக்கின்றது.
எத்தனை விதமான சட்டவிரோத மீன்பிடி முறைகள் உள்ளனவோ அத்தனையையும் பயன்படுத்துகின்றனர்.
மீன்பிடியில் ஈடுபடும் மீனவக்குடும்பங்கள் மட்டுமல்ல, அந்த மீனவர்களிடம் தொழில்புரியும் பெண்தலைமைக் குடும்பங்கள், மீன்விற்பனையில் ஈடுபடும் பெண் தலைமைக் குடும்பங்கள் என 10 ஆயிரத்து 500 பெண் தலைமைக் குடும்பங்கள் இந்தத் தொழிலை நம்பியுள்ளன. இது பாரதூரமான பிரச்சினை.
எமது கடற்பரப்பில் இடம்பெறும் இவ்வாறான சட்டவிரோத செயற்பாடுகளைத் தடுக்கும் விடயத்துக்கு எமது மீனவர்கள் பூரணஒத்துழைப்பையும் ஆதரவினையும் தருவார்கள். தயவுசெய்து மீனவசமூகத்தை வாழவிடுங்கள் என்றுதான் கேட்கின்றேன் - என்றார். (அ-ம-26)

### மனித...

ஏப்ரல் மாதம் 4ஆம் திகதிவரை இந்த அமர்வு நடைபெறவுள்ளது. இலங்கையின் பொறுப்புக்கூறல் தொடர்பான பிரதான அனுசரணையாளரான அமெரிக்கா மனித உரிமைகள் பேரவையில் இருந்து வெளியேறியுள்ள நிலையில், இலங்கைக்கு எதிரான தீர்மானம் தொடர்ந்து வலுவான நிலையுடன் பேணப்படுமா என்பது தொடர்பில் பெரும் எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 57ஆவது கூட்டத்தொடரில் இலங்கையின் பொறுப்புக்கூறல் தொடர்பில் மீண்டும் வலியுறுத்தப்பட்டதுடன், இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பில் சாட்சியங்களைத் திரட்டும் நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. இதற்கு ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கடும் கண்டனம் தெரிவித்ததுடன், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தை மறுப்பதாகவும் அறிவித்திருந்தது.
இவ்வாறான பின்னணியிலேயே 58 ஆவது அமர்வை இலங்கை எதிர்கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-இ)

### ரயில்கள்...

ஒப்படைக்கப்பட்டுள்ளனர். மூன்று சிறுவர்களும் 15 வயதுடையவர்கள். அவர்களில் ஒருவர் ஏற்கனவே சீர்திருத்தப் பள்ளியில் சேர்க்கப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டவர் என்று முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் பொலிஸார் கூறியுள்ளனர். சந்தேகநபர்களை நீதிமன்றத்தில் முற்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-26)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

யாழ். மாநகர சபை எல்லைக்குள் 2 பரப்புக் காணி 4 பக்க சுற்று மதில், பொளி கல்லுக் கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு. நல்ல அயல் சூழலுடன் அமைந்த அனைத்து வசதிகளையும் இலகுவாக பெறக்கூடிய இடம்.

(CS/2574) J-1

**076 026 8540**

## வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் பிரபல உணவகமொன்றிற்கு

- காசாளர் Cashier (பெண்)
- உணவு பரிமாறுபவர் Waiters (ஆண்)

தேவை.

(CS/2581B) J-1

**077 474 5330**

## ஒத்துமாறல்

அபிவிருத்தி உத்தியோகத்தர் (Central Government) வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு ஒத்துமாற விரும்புகிறார் விரும்பம் உள்ளவர்கள் தொடர்புகொள்ளவும்.

(cs 57552) (N-1)

**077 222 4941**

## வேலையாட்கள் தேவை

கொக்குவில் தாவடியில் இயங்கிவரும் பிரபல்யமான நிறுவனம் ஒன்றிற்கு பொதியிடுதல் வேலைக்கு ஆட்கள் தேவை. பெண்கள் விரும்பத்தக்கது.
சம்பளம்: - 35000 /-
வயதெல்லை: 18 - 35 வரை

(cs 57553) (N-1)

**077 7885 039**

## காணி விற்பனைக்கு

கொடிகாமத்தில் 104 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

(CS/57573) J-1

whatsapp:- **074 173 3553**

## வீடு வாடகைக்கு

கிளிநொச்சியில் வீடு வாடகைக்கு உண்டு. விபரம் நேரில்

(cs 57582) (N-1)

தொடர்பு: **077 711 1716**
**076 860 4501**

## வேலையாட்கள் தேவை

தெல்லிப்பளை, அச்சுவேலி ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள போத்தலில் கள் அடைக்கும் எமது தொழிற்சாலைக்கு வேலைக்கு ஆட்கள் தேவை. (ஆண்/பெண்)
போத்தல் கழுவுதல். லேபிள் ஒட்டுதல். பெட்டிக்குள் அடைத்தல் போன்ற வேலைகள்.
சம்பளம் 1500/- மதிய உணவு வழங்கப்படும்.
வேலை நேரம் - 8.30am - 5.30 pm

(CS/57568) J-1

**074 026 3150, 077 433 4820**

## விடுவிப்பு

ஹமாஸ் அமைப்பால் பணயக் கைதிகளாகப் பிடித்து வைக்கப் பட்டிருந்த மேலும் ஆறு இஸ்ரேலிய பணயக் கைதிகள் விரைவில் விடுவிக்கப்படவுள்ளனர் என்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் உறுதிப்படுத்தியுள்ளது. (ம)

## SPOKEN ENGLISH & GRAMMAR

Grade 7 to GCE O/L, A/L,
பட்டதாரிகள், தொழில்புரிவோர்,
கொழும்பில் பலவருடம் கற்பித்த அனுபவ
ஆசிரியர்: K. Ganesh BA
வீடு வந்தும் கற்பிக்கப்படும்.

**077 766 8725**

## வேலையாட்கள் தேவை

குழு முகாமையாளர்கள் தேவை.
காப்புறுதித்துறை, சந்தைப்படுத்தல்துறை, குழுமுகாமைத்துவத்துறைகளில் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
மேலதிக தகவல்களுக்கு கீழ்வரும் தொலைபேசி இலக்கத்திற்கு உங்களுடைய பெயர். முகவரியை SMS மூலம் அனுப்பி வைக்கவும்

(CS/29828) J-1

**077 231 5916**

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

கொக்குவில் மேற்கு பகுதியில் மிக நல்ல சூழலில் அமைந்துள்ள சகல வசதிகளுடன் கூடிய 2 பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்குண்டு. விலை 3 1/4 கோடி விலை பேசித் தீர்க்கலாம். தரகர் தேவையில்லை

(CS/57583) J-1

தொடர்புகளுக்கு: **076 294 3552**

## பெண் பராமரிப்பாளர் தேவை

யாழ் மாவட்டத்தில் வசிக்கும் அம்மா ஒருவரைப் பராமரிப்பதற்கு அனுபவம் உள்ள பெண் பராமரிப்பாளர் உடன் தேவை. சம்பளம் பேசி நிர்ணயித்துக் கொள்ளலாம். ஆர்வம் உடையவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்

(CS57586) J-1

தொடர்புகளுக்கு: Whats app **077 009 5706**

## வேலையாட்கள் தேவை

வீட்டில் தங்கி நின்று வேலை பார்ப்பதற்கு 50 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் அல்லது தம்பதிகளாக வேலையாட்கள் தேவை

(CS 57564) N-1

தொடர்பு: **075 894 3735**

## Group and Personal Classes

86, இராஜேஸ்வரி வீதி, அரியாலை

**English**
**By. C.S.K. Mayuran**

தரம் 6 முதல் O/L வரை வகுப்புக்கள்
ஆரம்பம் 26.02.2025
புதன்கிழமை மாலை 5.30 மணி

- Vocabulary
- Structural Grammar
- Spoken English

(CS/57564) J-1

தொடர்புகளுக்கு: **077 193 0298**

## மணமகள் தேவை

யாழ். இந்து (V) 1984 இல் பிறந்த அரச வேலையில் உள்ள திருமணப்பதிவுடன் விவாகரத்தான அத்தம் நட்சத்திரம் உடைய மணமகனுக்கு அழகிய மணமகள் தேவை.

(CS/57563) J-1

தொடர்பு:- **077 335 0298**

## Solar அனுமதி தேவை

சூரிய மின்சார இணைப்பின் (Solar Power) 100Kv க்கு மேற்பட்ட அனுமதிப் பத்திரத்தை வடபகுதியில் காணியுடன் விற்க ஆர்வமுள்ள...கள் தொடர்பு கொள்ளவும்.

(CS/57576) J-1

தொடர்பு:- **077 082 1010**

## வாடகைக்கு உண்டு

ஆஸ்பத்திரி வீதியில் முதல் மாடியில் அலுவலக பாவனைக்கு முகாமையாளர் அறை, இரு மலசலகூடம் மற்றும் சகல வசதிகளுடன் உள்ள 880 சதுர அடி இடம் வாடகைக்கு உண்டு.

**071 2963 285**

## மணமகன் தேவை

யாழ் இந்து 1984 இல் பிறந்த அவுஸ்ரேலியாவில் வசிக்கும் Accountant ஆக தொழில்புரியும் மணமகளுக்கு பட்டம் பெற்ற அவுஸ்ரேலியாவில் வசிக்கும் மணமகன் தேவை.

**076 249 5401, 076 162 4584**

## பாபு மாபிள் வேலை

**மாபிள் பதித்தல்**


அதிக காலம் மத்திய கிழக்கு நாட்டில் மாபிள் வேலைசெய்தவரால் குறுகிய காலத்தில் உங்கள் விருப்பத்திற்கு ஏற்ற வகையில் உறுதியாகவும், கவர்ச்சி கரமாகவும் மாபிள் பதித்துத் தரப்படும்.

(CS/57348) J-1

**Tel : 077 382 4871**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

தோற்றம்
02 . 08 . 1941



மறைவு
06 . 03 . 2024

கடந்த 06.03.2024 புதன்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்பத்தின் தலைவர்

### அமரர் மயில்வாகனம் பாலசுப்பிரமணியம்

ஆண்டொன்று ஆனதென்று அறிவு எமக்கு கூறுகிறது
உண்மைதானா இதுவென்று எம் உள்ளுணர்வு மறுக்கிறது
கண்மூடித்திறப்பதற்குள் எல்லாம் கனவு போல்தான் தெரிகிறது
கனவாகி விடாதா என்று எம் நனவு மனம் ஏங்குகிறது
அப்பா உம் இழப்பு நம்மையெல்லாம் உருக்குலைய வைத்ததப்பா
அன்பு கொண்ட உம் வதனம் என்றும் எம்மோடு இருப்பது போல்
உணர்கின்றோம் அன்பால் என்றும்! எத்தனை ஆண்டுகள் ஆனாலும்
நீங்காது அப்பா உங்கள் நினைவு எம் நெஞ்சோடு.....

அவர்களின் முதலாம் ஆண்டு ஆத்மசாந்திப் பிரார்த்தனை (திவசம்) இன்று (23.02.2025) ஞாயிற்றுக்கிழமை இலண்டனில் உள்ள மூத்தமகன் பா.கனகபாலன் அவர்களது இல்லத்தில் (20 Beecham Road, reading, Rg302rd, UK) நடைபெறும். அத்துடன் 2ம் குறுக்குத்தெரு. பருத்தித்துறையிலுள்ள அன்னாரது இல்லத்திலும் நடைபெறும். அந்நிகழ்வில் கலந்துகொண்டு அன்னாரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

**141, 2ம் குறுக்குத்தெரு.**
**பருத்தித்துறை.**

**குடும்பத்தினர்**

தொடர்பு:
பா. கனகபாலன் (லண்டன்) + 44 7846 286 202
பா. ஸ்ரீசங்கர் (லண்டன்) + 44 7960 633 579
பா. பிரகாஷ் (பரிஸ்) + 33 6856 682 77
கோ. பிருந்தா (அவுஸ்திரேலியா) + 61 410 100 251
பா. கனகரத்தினதேவி - 077 445 6369

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் பலாலி றோட் ஊரெழுவில் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 12 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

- பலாலி றோட் ஊரெழு பிள்ளையார் கோவில் வடக்கு வீதியில் இருந்து 300m
- பலாலி-புன்னாலைக்கட்டுவன் சந்தியில் இருந்து சுன்னாகம் செல்லும் பிரதான வீதியில் இருந்து 300m இருவழிப் பாதை கொண்டது.
- நல்ல தண்ணீர் ஊற்று, சிவப்பு மண், நல்ல சூழல் வீடுகள் அமைப்பதற்கு நல்ல அமைவிடம்.

தொடர்பு: **077 623 4204**
**076 755 8606**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.02.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 08

# சஞ்சீவி

Registered as a Newspaper

> உடாஅதும் உண்ணாதும் தம்உடம்பு செற்றும்
> கெடாஅத நல்லறமும் செய்யார் கொடாஅது
> வைத்தீட்டி னார்இழப்பர், வான்தோய் மலைநாட!
> உய்த்தீட்டும் தேனீக் கரி
>
> – நாலடியார்

மலை : 34 | வள்ளுவர் ஆண்டு : 2055 | மாசி 11 | ஞாயிற்றுக்கிழமை (23.02.2025) | சிகரம் :131



# வணங்குதலிலாவது பரிகார நீதி கிடைக்குமா தையிட்டி மூலம்?

○ ஊடுருவி



எந்தவோர் இனத்தவரோ, மதத்தவரோ வழிபடும் இடத்தை இடித்தழிப்பதோ, இடம் மாற்றியமைப்பதோ பொதுவாக சம்பந்தப்பட்டவர்களுக்கு நெருடலான விடயம்தான். ஆழமான காயத்தை உண்டுபண்ணும்தான். அதேபோல, ஆக்கிரமிப்பின் சின்னமாக ஒரு வணக்கத்தலத்தை அமைத்துவிட்டு அதற்காகப் பலம் குறைந்தவர்கள் தமது பெருந்தன்மையுடன் விட்டுக்கொடுத்தேயாக வேண்டும் என சண்டித்தனத்துடன் நிற்பதையும் ஏற்றுக்கொள்ளலென்பது சிரமமே. ஆனால், தமிழர்களைப் பொறுத்தவரை குறிப்பாக இந்துக்களைப் பொறுத்தவரை தையிட்டி விவகாரம்தான் முதலாவதோ, இறுதியானதோ என்று கொள்ளமுடியாது.

தையிட்டி விவகாரத்தைப் பொறுத்தவரை இது இராணுவத்தினருக்கான நிதியிலிருந்து கட்டியெழுப்பப்பட்டது. அதேவேளை, இதே மாவட்டத்தில், இதே தொகுதியில் இதே பிரதேச செயலர் பிரிவில், இதே பிரதேசசபைக்கு உட்பட்ட இடத்தில் கீரிமலை ஆதிசிவன் கோயில், பெண் சித்தரான சடையம்மாவின் சமாதி கோயில், சங்கர சுப்பையர் மடம், கதிரவேலன் கோயில் என்பவற்றை இராணுவமே முற்றாக அழித்தொழித்தது. வரலாற்று ஆதாரங்களை அழித்த அதே இடத்தில் அந்த வெற்றியைப் பதிவு செய்த ராஜபக்ச குடும்பத்தவர்களே (மஹிந்த, கோத்தாபய மற்றும் பஸில் அல்லது நாமல்) தொடர்ச்சியாக நாட்டை ஆள உரிமையுள்ளவர்கள் என்ற நினைப்புடன் அவர்களை மனதிலிருத்தி ஜனாதிபதி மாளிகை அமைக்கப்பட்டது. பலம் உள்ளவர்கள் சொல்வது, செய்வதுதான் சரி மற்றவர்கள் இதை விதியென்றோ சரியென்றோ ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற மமதைதான் படைத் தரப்பிடமும் ஆளும் தரப்பிடமும் இருந்தது.

தையிட்டி விகாரையில் தமிழர்கள் கைவக்க இடமளிக்க மாட்டோம் என்று தற்போது சிங்களத்தின் மீட்பராகத் தன்னைப் பதிவு செய்ய விமல் வீரவன்ஸ போன்றோருடன் போட்டிபோடும் உதய கம்மன்பில வீரமுழக்கமிடுகிறார். இவரது வாழ்வில் நிகழ்ந்த மறக்க முடியாத மறக்கக்கூடாத விடயமொன்றை அவருக்கு நினைவூட்டலுக்காகப் பதிவு செய்கிறோம்.

இவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் நாடாளுமன்றுக்கு யாழ். கிளிநொச்சி மாவட்டங்களின் சார்பில் 2004இல் தேர்ந்தெடுக்கப்பட்ட அமரர் ரவிராஜும் நண்பர்கள். ஒத்த கருத்துள்ளவர்கள்தான் நண்பர்களாக இருக்க வேண்டுமென்பது விதியில்லையே. ஒருநாள் உதய கம்மன்பிலவை சந்திக்க ரவிராஜ் அவரது வீட்டுக்குச் சென்றிருந்தார். அவ்வேளை, உதய கம்மன்பில அங்கிருக்கவில்லை. சில நிமிடங்களில் வந்துவிடுவார் என்ற விடயம் ரவிராஜுக்குத் தெரிவிக்கப்பட்டது. எனவே, உதய கம்மன்பிலவின் அலுவலகத்துக்கு வருகை தருவோருக்கென ஒதுக்கப்பட்ட ஆசனமொன்றில் அவர் அமர்ந்திருந்தார். வாகனமொன்றில் உதய கம்மன்பில வந்திறங்கியதும் இருவரும் ஒருவரையொருவர் கண்டுகொண்டனர். உடனே, சட்டென எழுந்த ரவிராஜ் அந்த அலுவலகத்தில் பிரத்தியேகமாக உதய கம்மன்பில மட்டுமே அமரும் ஆசனத்தில் போய் அமர்ந்து கொண்டார்.

அந்த அறை வாசலுக்கு வந்த உதய கம்மன்பில, "நீ எப்படி எனது ஆசனத்தில் அமர்வாய்?", என்று சற்று அதிகமாகவே கோபத்துடன் கேட்டார். ஆசனத்திலிருந்தவாறே சற்றுக் கேலியாகவே "உன்னுடைய உனக்கு மட்டுமே சொந்தமான ஆசனத்தில் இரு நிமிடங்கள் மட்டுமே உட்கார்ந்த என்மீது உனக்கு இவ்வளவு கோபம் வருகிறதே. தம்முடைய பரம்பரையான வாழிடங்களில் சொந்த வீட்டில் இருந்து உங்களால் விரட்டியடிக்கப்பட்டு அகதிகளாக வாழும் தமிழர்களின் மனதில் எவ்வளவு கோபம் இருக்கும் என்று நினைத்துப் பார்"

என்று பதிலளித்தாராம் ரவிராஜ். இது உதய கம்மன்பிலவுக்கு மறக்க முடியாத சம்பவம். ஆனால், அரசியலில் தன்னை மீண்டும் நிலைநிறுத்த வேண்டுமென்றால் தூய சிங்களவனாக நடிக்கவேண்டுமென்றால் அவர் இப்படித்தான் பேசவேண்டும்.

* * * * *

இராணுவத்துக்கான நிதியோ அல்லது வேறெந்த நிதியோ அதனை வழங்கிய தரப்புகள் தமது சொந்தக் காணிக்குள் விகாரை அமைக்கப்பட்டதை ஏற்றுக்கொள்ள முடியாத மக்களை சமாதானப்படுத்த அல்லது சாந்தப்படுத்த ஏன் முயற்சிக்கக்கூடாது? படைத்தரப்பால் அழிக்கப்பட்ட ஆலயங்களை அதே வடிவமைப்புடன் அமைத்து பக்தியுடன் அவற்றை வழிபட ஏற்பாடு செய்யலாமே. இதே தொகுதியில் தமிழர்களின் காணிகளில் விவசாயமோ, வேறு தொழிலோ, சுண்ணாம்புக்கல் அகழ்ந்தெடுக்கப்பட்டோ கொண்டு செல்லப்பட்டதற்கு தமிழர்களுக்கு நியாயமாக வழங்கப்பட்டிருக்க வேண்டிய நிதிதான் இது என்றாவது எண்ணலாமே?

ஒரே விடயத்தைத் தமிழர்கள் செய்வதற்கும் சிங்களவர்கள் செய்வதற்கும் வெவ்வேறு நீதிகள். சந்திரிகா அரசுக்கு வழங்கிய ஆதரவை திரும்பப்பெற உத்தேசித்துள்ளதாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் அறிவித்தார். இந்த நாட்டின் அரசியலை சிறுபான்மையினர் தீர்மானிக்க முடியாது என்று முடிவெடுத்த ஜே. வி. பி.யினர் தாங்கள் அரசுக்கு ஆதரவளிப்பதாக அறிவித்து சிங்கள பௌத்தர்களே தாம் என்பதை நிலைநாட்டினர். 1970களில் தம்மைக் கொத்துக் கொத்தாகக் கொன்றொழித்த ஆட்சியினரின் வம்சாவளியினரின் தொடர்ச்சியே இந்த அரசு என எண்ணவில்லை. கதிர்காம அழகி மன்னம்பேரியை தற்காலிகமாக மறந்துவிடுவோம் என நினைத்தனர். அதேபோல சிறையிலிருந்த ஜே. வி. பி.யினர் அனைவரும் விடுதலையாகினர். பொதுமன்னிப்பு என்ற அறிவிப்பு வெளிவந்ததாக நினைவில்லை. "எங்கள் பகைவர்கள் எங்கோ மறைந்தனர் இங்குள்ள சிங்களவர் ஒன்றாதல் கண்டே", என்று பாடாத குறைதான்.

கடந்த தேர்தலில் அரசியல் கைதிகள் அனைவரும் விடுதலை செய்யப்படுவார்கள் என்று ரில்வின் சில்வாவைத் தவிர அனைவரும் சொன்னார்கள். இன்று 'நாங்களா அப்படிச் சொன்னோம் ?' என்று கேட்கும் நிலை. அரசியல் கைதிகள் என்று எவரும் இல்லையே என்றும் அறிவித்தாயிற்று. இலங்கை அரசியலைப் பொறுத்தவரை பண்டா செல்வா, டட்லி செல்வா என ஒப்பந்தங்களால் தமிழர்கள் ஏமாற்றப்பட்டதே வரலாறு. எனவேதான் இராணுவச் சிந்தனையோடு அழிக்கப்பட்ட தமிழரின் சகல வழிபாட்டிடங்களையும் விடுவியுங்கள் என இந்த விவகாரத்தில் தலையிடும் தரப்புகளின் கவனத்துக்குக் கொண்டு வரவேண்டும்.

குறிப்பாக வழிபாட்டிடங்களுக்கு நிகராக மனமுருகி கண்ணீர் சிந்தி வழிபடும் இடங்கள் என்றால் அவை துயிலும் இல்லங்களே. இவை, இவற்றை அழிக்கும் வரலாற்றை ஆரம்பித்த சந்திரிகாவினதோ மஹிந்தவினதோ பரம்பரை நிலங்களல்ல. புதைக்கப்பட்ட நிலங்களில் தங்கள் பிள்ளைகளை நினைத்து மனப்பாரத்தை இறக்கி அழுது தீர்க்க எந்தச் சங்கடங்களும் இருக்கக்கூடாதல்லவா? எனவே, அந்த இடங்களில் இருந்து படையினர் விலகி வழிவிடுவதற்கு கௌதம புத்தர் எந்த விதத்தில் தடையாக இருப்பார்? அந்தந்தத் துயிலுமில்லங்கள் அமைந்துள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்களின் பொறுப்பில் (RDS) இதனை விடலாமே? எங்களது தேர்தல் வெற்றிக்காகத்தான் இவர்கள் மாண்டார்கள் என நினைக்கும் அரசியல்வாதிகளின் பிடியிலிருந்து இழப்புகளைச் சந்தித்த குடும்பத்தினரை விடுவிப்பது புத்தரை எண்ணிச் செய்யும் புண்ணிய காரியம் போல முடிவெடுத்தால் என்ன? மேலும், இந்த விகாரை அமைப்பு விவகாரத்தில் வலி. வடக்கு பிரதேச சபையின் அப்போதைய தலைவர் மேற்கொண்ட கோளாறுகளை விபரித்தால் கட்டுரை மேலும் நீண்டுவிடும். அவர் செய்தது சரி என நிரூபிக்கவே இந்த விடயத்தில் தமிழரசுக் கட்சியின் மத்திய குழு மௌனம் சாதிக்கிறது.

* * * * *

நல்லூர்க் கந்தன் ஆலயம் என்பதன் வரலாறு தற்போது நாம் காணும் வடிவத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்டதல்ல. வடிவம் மட்டுமல்ல நிலமும் வேறுதான். முத்திரைச் சந்தியிலுள்ள தேவாலயம் இருக்கும் இடத்தில்தான் முன்னர் நல்லூர் ஆலயம் இருந்தது. அந்தக் கோவிலை இடித்த அந்நிய ஆட்சியாளர்கள் அதில் கிடைத்த கற்களைக் கொண்டே யாழ்ப்பாணக் கோட்டையைக் கட்டினார்கள். அதற்காக நல்லூர் ஆலயம் எந்த இடத்தில் இருந்ததோ அதில்தான் மீண்டும் அமையவேண்டும் என்று எமது முன்னோர்கள் அடம்பிடிக்கவில்லை. கோவிலை இடித்தவர்களின் கல்வி முறைகள், மொழிகளை பின்பற்றத் தயங்கவில்லை. இப்போதிருக்கும் நல்லூர், அமைந்திருக்கும் இடம் உண்மையில் முஸ்லிம்களுக்கே பெரும்ளவில் சொந்தமானது. எனினும், இஸ்லாமியர்கள் பெருமனதுடன் சகவாழ்வு கருதி சில உடன்பாட்டுக்கு வந்தனர். அவற்றில் ஒன்று ஆலயத்துக்கு முன்னால் கற்பூரம் விற்கும் உரிமை முஸ்லிம்களுக்கு மட்டுமே உரியது. யாருக்கு அதை வழங்குவது என்பதை பள்ளிவாசல் தீர்மானிக்கும். இடப்பெயர்வு வரை இந்த நடைமுறை இருந்தது.

08



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னராஜா விமலன்



# ஒரு கிரிக்கெட் ரசிகனின் பார்வையில் தில்லைநாதன் கோபிநாத்தின்

# துடுப்பாட்டம்:

## அன்றும் இன்றும்



சர்வதேச கிரிக்கெட் போட்டிகள் பற்றிய அறிமுகம் எனக்கு ஏற்பட்டது தொண்ணூறுகளின் ஆரம்பத்தில் வெளிவந்த 'ஈழநாதம்' பத்திரிகை வாயிலாகத்தான். அதில் விளையாட்டுக்கென ஒரு பக்கம் வாராவாரம் வெளிவந்தது. சச்சின் டெண்டுல்கர், பிறைன் லாறா போன்ற பெயர்கள் அறிமுகமானதும் அதன்மூலம்தான். அந்தப் பக்கங்களை பத்திரமாகக் கோவைப்படுத்தியும் வைத்திருந்தேன். அதேவேளை சர்வதேச கிரிக்கெட் போட்டிகளைப் பார்வையிடத் தொடங்கியது 1996 உலகக் கிண்ணத் தொடருடன்தான். மின்சாரம் இல்லாத அந்தக் காலப்பகுதியில் கணிசமான உலகக் கிண்ணப் போட்டிகளை நண்பர்களுடன் இணைந்து கறுப்பு வெள்ளை தொலைக்காட்சியில் சைக்கிள் டைனமோ மூலம் சுற்றிப்பார்த்ததும் இந்திய இலங்கை அணிகள் மோதிய அரையிறுதிப் போட்டியையும் இறுதிப் போட்டியையும் எங்கள் வீட்டில் ஜெனரேற்றர் மூலம் வாடகை வண்ணத் தொலைக்காட்சியில் பார்வையிட்டதும் இன்றும் நினைவில் உள்ளன.

1996 உலகக் கிண்ணத்தை இலங்கை அணி முதன்முறையாகக் கைப்பற்றியதைத் தொடர்ந்து புதியதொரு ரசிகர் பட்டாளம் உலகெங்கும் இலங்கை அணிக்கு உருவாகி இருந்தது. ஆனாலும் விதிவிலக்காக இந்த உலகக் கிண்ணத் தொடரில் அதிகூடிய ஓட்டங்களை (523) குவித்து தொடர்நாயகன் விருதை வென்ற சச்சின் டெண்டுல்கரின் சிறப்பான ஆட்டம் என்னை இந்திய அணியின் ரசிகனாக மாற்றியது. அன்றில் இருந்து அவர் விளையாடும் ஒரு நாள் போட்டிகளுக்குத் தனியாகவும் டெஸ்ட் போட்டிகளுக்குத் தனியாகவும் இரண்டு நாட்குறிப்பேடுகளில் ஒவ்வொரு போட்டியிலும் அவர் பெற்ற ஓட்டங்கள், யாருடைய பந்து வீச்சில் எவ்வாறு ஆட்டமிழந்தார், அவர் பெற்றுக்கொண்ட நூறுக்கு மேற்பட்ட இணைப்பாட்டங்கள், அவர் பெற்ற ஆட்டநாயகன் விருது, தொடர் நாயகன் விருது, அவ்வப்போது அவர் பெற்ற கௌரவம் குறித்து வெளிவந்த பத்திரிகை நறுக்குகள், புகைப்படங்களென இணைய வசதிகள் இல்லாத அந்தக் காலத்திலேயே விலாவாரியாக எழுதி வைத்திருந்தேன். காலப்போக்கில் சச்சினின் பதிவுகளில் இருந்து சர்வதேச கிரிக்கெட் போட்டிகள் குறித்த தகவல்களின் சேகரமாக அந்த நாட்குறிப்புகள் மாற்றமடைந்தன.

இதன் அடுத்த பரிமாணமாகக் கிரிக்கெட் குறித்து வெளிவந்த நூல்களைச் சேகரிக்கத் தொடங்கினேன். புன்னியாமீன் வெளியிட்ட 'Wills World Cup -1996 நினைவுகள்', மணிமேகலைப் பிரசுரம் வெளியிட்ட 'உலகப் புகழ் பெற்ற கிரிக்கெட் வீரர்களும் சாதனைகளும்', நா.எத்திராஜ் எழுதிய 'இந்தியக் கிரிக்கெட் வீரர்கள்', பேராசிரியர் மா.நடராஜசுந்தரம் எழுதிய 'துடுப்பாட்டம்' என்று கிரிக்கெட் தொடர்பான நூல்களின் கணக்கு ஆரம்பமானது. அதுதவிர பழைய புத்தகக்கடையில் கிடைத்த Sport Star சஞ்சிகைகளை ஒன்று 20 ரூபா வீதம் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் வாங்கிக்கொண்டேன். இந்தச் சேகரங்கள் என்னுள் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளை மாத்திரம் அல்லாமல் சர்வதேச, உதைபந்தாட்டப் போட்டிகள், ரென்னிஸ் போட்டிகள், தடகளப் போட்டிகள் மீதான ஈடுபாட்டையும் விசாலிக்கச் செய்தது. பிற்பட்ட பத்திரிகைகளில் விளையாட்டுத்துறைப் பத்திகளை எழுதுவதற்கும் 'டான்' தொலைக்காட்சியில் 'மைதானம்' நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்குமான தற்துணிவை இந்தச் சேகரங்களே எனக்கு வழங்கியிருந்தன.

இவ்வாறானதொரு சூழலில்தான் 1999 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரம் படித்துக்கொண்டிருந்த காலப்பகுதியில் 'உதயன்' பத்திரிகையின் 'சஞ்சீவி' வாரமலரில் 'துடுப்பாட்டம் : அன்றும் இன்றும்' என்ற தலைப்பில் ஒரு தொடர் வெளிவந்தது. சர்வதேச கிரிக்கெட் குறித்து அறியாத பல தகவல்களையும் புள்ளிவிபரங்களையும் இணைத்து எழுதப்பட்ட அந்தத் தொடர் வியப்பைத் தந்தாலும் அதைவிட ஆச்சரியம் என்னைவிட வயது குறைந்த 16 வயதுடைய மாணவரான 'கோபி' என்பவர் அதனை எழுதி இருந்தது தான். மூன்று வருடங்களுக்கு முன்னர் என்று நினைக்கிறேன், நூலக நிறுவன இயக்குநரான தில்லைநாதன் கோபிநாத் தனது முகநூலில் தான் 'சஞ்சீவி' வாரமலரில் எழுதிய 'துடுப்பாட்டம் : அன்றும் இன்றும்' கட்டுரைத் தொடர் நூலாக வெளிவந்துள்ளது எனக் குறிப்பிட்டபோதே அந்தத் தொடரை எழுதிய 'கோபி' இவர்தான் எனத் தெரியவந்தது. அந்த நூலைப் படிப்பதற்கு ஆவலாக இருந்தாலும் நூலைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

அண்மையில் ஒரு நிகழ்வில் பரணியோடு உரையாடுகையில், பேச்சு கோபிநாத்தின் நூல்கள் பற்றித் திரும்பியது. அவரது துடுப்பாட்டம் குறித்த நூல் என்னிடம் இல்லை என்றபோது தனது சேகரத்தில் இருந்த ஒரு பிரதியை எனக்கு அன்பளித்திருந்தார். அந்தத் தொடரை முன்னர் தொடர்ச்சியாக வாசித்து இருந்தாலும் சுமார் 25 வருடங்கள் கழித்து அந்த நினைவுகளை மீட்டிப்பார்க்கும் சந்தர்ப்பமாக அது அமைந்தது.

'ஜீவநதி' பதிப்பகத்தின் 140ஆவது வெளியீடாக 160 பக்கங்களில் இந்த நூல் 2020 ஆம் ஆண்டு தை வெளியாகி உள்ளது. 'சஞ்சீவி' வாரமலரில் 24 வாரங்கள் வெளிவந்த இந்தக் கட்டுரைகளை இன்றைய காலகட்டத்தில் புரிந்துகொள்வதற்கு ஏதுவாக முன்னுரையில் கோபிநாத் தெரிவித்த சில கருத்துக்களை முதலில் பதிவுசெய்வது அவசியமாகும். "இப்போது துடுப்பாட்டப் போட்டிகள் நடைபெறும்போதே கணத்துக்குக் கணம் தகவல்களை இற்றைப்படுத்தும் கிரிக்கின்போ போன்ற இணையத்தளங்கள் உள்ளன. ஆட்டக்காரர் விபரங்களும் புள்ளிவிபரங்களும் இணையம் எங்கும் கிடைக்கின்றன. ஆனால் இந்த வசதிகள் எதுவும் இல்லாத காலத்தில் இக்கட்டுரைத் தொடர் எழுதப்பட்டது. யாழ்ப்பாணத்தில் இணைய இணைப்பு அறிமுகமாகியிராத காலம் அது. நல்லூர் பொதுசன நூலகத்தில் ஏலத்தில் நான் வாங்கியிருந்த பெருமளவு ஸ்போட் ஸ்ரார் சஞ்சிகைகளே இத்தொடருக்கு உசாத்துணைகளாக இருந்தன. அத்துடன் தொலைக்காட்சியில் ஒளிபரப்பான ஆட்டங்களில் இருந்தும் தகவல்களைப் பெற்று இற்றைப்படுத்த முடிந்தது. இந்தக்கட்டுரைகள் வெளிவந்த அதே வடிவத்திலேயே தொகுக்கப்பட்டுள்ளன. புள்ளி விபரங்களையும் ஆட்டக்காரர் விபரங்களையும் கொண்டிருந்த அட்டவணைகள் தவிர்க்கப்பட்டுள்ளன. ஏனெனில் அவற்றில் பெரும்பாலானவை இப்போது மாறிவிட்டிருப்பதோடு இலகுவாகப் பெறக்கூடியனவாகவும் உள்ளன"

அந்தவகையில் இந்தக் கட்டுரைகளை வசதிக்காக கீழ்வருமாறு வகைப்படுத்தி நோக்கலாம்.

1. கிரிக்கெட்டின் வரலாறு
2. துடுப்பாட்ட வீரர்களின் சாதனை
3. பந்துவீச்சாளர்களின் சாதனை
4. சகலதுறை வீரர்களின் சாதனை
5. இலங்கை அணியின் சாதனைகள்
6. உலகக் கிண்ணப் போட்டிகள்
7. கிரிக்கெட்டின் எதிர்காலம்

கிரிக்கெட்டின் வரலாறு என்பதில் சுமார் ஐநூறு ஆண்டுகளின் முன்னர் இங்கிலாந்தில் ஆடப்பட்டு வந்த ஆட்டங்கள் குறித்து "முதல்வகை ஆட்டத்தில் ஒரு தோற்பந்து வீசப்பட ஆட்டக்காரர் அதனைத் தடியொன்றால் அடித்தார். பந்துத் தடுப்பாளர்களும் இருந்தனர்.

ஆனால் பந்து வீசுபவருக்கான இலக்கு பயன்படுத்தப்படவில்லை. மறுவகை ஆட்டத்திலே ஒரு ஸ்டூல் இலக்காயிருக்க ஆட்டக்காரர் பந்தினை வெறுங்கைகளால் தடுத்து அடித்தார். ஒருமுறை தடுத்ததால் ஒரு எண்ணிக்கை கிடைத்தது. பந்து Stool இனை மோதினாலோ அல்லது அடிக்கப்பட்ட பந்தை அது நிலத்தில் விழமுன்னர் தடுப்பாளர் பிடித்தாலோ (Catch) ஆட்டக்காரர் ஆட்டமிழந்தார். காலப்போக்கில் இவ்வகை ஆட்டத்திலும் தடுத்தாடுவதற்கு தடிகளைப் பயன்படுத்தும் முறை அறிமுகமானது. இருவகை ஆட்டங்களும் இணைந்தே கிரிக்கெட் உருவானது எனக் குறிப்பிடுகின்றார். அவ்வாறு ஆரம்பத்தில் ஆடப்பட்டுவந்த கிரிக்கெட் படிமுறையாக வளர்ச்சி அடைந்து இன்றைய வடிவத்தைப் பெற்றது குறித்தும் டெஸ்ட் போட்டிகளின் தோற்றத்தையும் வரையறை செய்கின்றார்.

1877ஆம் ஆண்டு இங்கிலாந்து - அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையில் மெல்போர்ணில் நடைபெற்ற முதல் டெஸ்ட் போட்டி, ஏனைய டெஸ்ட் அந்தஸ்து பெற்ற நாடுகள் விளையாடிய முதல் டெஸ்ட் போட்டி, அதுபோல 1971 ஜனவரி 05 ஆம் திகதி இங்கிலாந்து - அவுஸ்ரேலிய அணிகள் மெல்போர்ண் மைதானத்தில் விளையாடிய ஓவர் ஒன்றுக்கு 8 பந்துவீச்சுக்களை உள்ளடக்கிய 40 ஓவர்கள் கொண்ட ஒருநாள் போட்டியின் தோற்றம், பின்னர் அவை 60 ஓவர்களாக மாற்றப்பட்டு இன்றைய 50 ஓவர்களாக ஆடப்பட்டு வந்தமை, முதன்முதலில் பெண்கள் பங்குபற்றிய துடுப்பாட்டம் 1745 இல் நடைபெற்றதான தகவல், 1958 இல் நியூசிலாந்தின் கிறிஸ்ற்சேர்ச்சில் சர்வதேச பெண்கள் துடுப்பாட்ட சம்மேளனம் (International Women's Cricket Council) உருவாக்கப்பட்டமை உள்ளிட்ட விடயங்களும் பதிவாகியுள்ளன.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாசார மையம் பெயர்மாற்றம்:




# பின்னணியில் என்ன நடந்தது?

## பா.ஜ.க. வின் கைவரிசையா?

யாழ்ப்பாண கலாசார மையம் பெயர் மாற்றத்தின் பின்னணியில் பா.ஜ.க. வின் கரங்கள் செயற்பட்டதாக 'இந்து' பத்திரிகையின் கொழும்பு நிருபராகப் பணியாயற்றிய நிருபமா சுப்பிரமணியன் ' How a tone deaf New Delhi botched it in Jaffna'என்ற தலைப்பில் 'டெக்கான் ஹெரால்ட்' பத்திரிகையில் கட்டுரையொன்றை வரைந்துள்ளார். அந்தக் கட்டுரையின் தமிழாக்கம் இங்கு தரப்படுகிறது.

தமிழாக்கம்: ந.பரமேஸ்வரன்

உ ஜனவரி 18 அன்று, இந்திய உயர்ஸ்தானிகராலயம் தமிழ்ப்புலவர் தத்துவஞானி திருவள்ளுவரைக் கௌரவிக்கும் வகையில் யாழ்ப்பாண கலாசார மையத்தின் பெயரை 'திருவள்ளுவர் கலாசார மையம்' என்று பெயர்மாற்றுவதாக "எக்ஸ்" தளத்தில் பதிவிட்டது . இலங்கை உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் ஆகியோர் பெயர் மாற்றத்தை வரவேற்று இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் பதிவைப் பகிரவும் செய்தனர். தமிழக ஆளுநர் ஆர். என். ரவியும் அதைப் பாராட்டினார். இது புதுடில்லி எப்படி அண்டை மக்களின் உணர்வுக்குரல்களைக் கேட்காமல் செவிடாக மாறியுள்ளது என்பதையும், பாரதிய ஜனதாக் கட்சியின் (BJP) உள்நாட்டு நிகழ்ச்சி நிரலால் அதன் வெளியுறவுக் கொள்கை தொடர்பான பார்வை மிகவும் இருட்டடிப்புச் செய்யப்பட்டுள்ளதால் அது நீண்டகால நண்பர்களையும் செல்வாக்கையும் இழந்து பிராந்தியத்தில் அதன் நல்ல பணிகளைச் சிதைத்துவருவதையும் மீண்டும் ஒருமுறை எடுத்துக்காட்டியுள்ளது.

யாழ்ப்பாண கலாசார மையம் போரினால் பாதிக்கப்பட்ட வட இலங்கைக்கு இந்தியாவினால் வழங்கப்பட்ட 12 மில்லியன் டொலர் மதிப்புள்ள ஒரு சிந்தனை மிக்க பரிசு . 2011 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட நவீன அரங்கத்துடன் கூடிய 11 மாடிகள் கொண்ட இந்தக் கட்டுமானமே, யாழ்ப்பாணத்தின் உயரமான கட்டடமாகவும் மாறியுள்ளது. இந்தக் கட்டடத்தின் கட்டுமானப்பணிகள் 2021 இல் நிறைவடைந்தன.

யாழ்.மாநகரசபையிடம் இதைப் பராமரிப்பதற்கு நிதி இல்லாமையால் இந்தியா ஐந்து ஆண்டுகளுக்கு இந்த மையத்துக்கு நிதியளிக்க ஒப்புக்கொண்டது. இந்தக் கட்டடம் 2023 ஆம் ஆண்டு அப்போதைய இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் சம்பிரதாயபூர்வமாக யாழ்ப்பாண மக்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

### திருவள்ளுவர் எங்கே வருகிறார்?

சங்ககாலத் தமிழ்த் துறவி புலவர் தத்துவஞானி எனப் பல பரிணாமங்களைக் கொண்ட திருவள்ளுவர் உலகம் முழுவதும் தமிழர்களால் போற்றப்படுகிறார். இதனால் தமிழ்நாட்டில் பா.ஜ.க. காலூன்ற முயற்சிக்கும்போது திருவள்ளுவரைப் பயன்படுத்துகிறது.

2024 ஆம் ஆண்டு நடைபெற்ற இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்நாட்டில் பா.ஜ.க. வெற்றி பெறும் என எதிர்பார்க்கப்பட்டது. தேர்தலுக்கான பா.ஜ.க. தேர்தல் விஞ்ஞாபனம் உலகளவில் திருவள்ளுவர் கலாசார மையங்களை நிறுவுதல் என்ற வாக்குறுதியை உள்ளடக்கியிருந்தது.

2024 செப்ரெம்பரில், சிங்கப்பூருக்கு விஜயம் செய்த மோடி, அங்கு இந்தியா தனது முதலாவது திருவள்ளுவர் மையத்தை நிறுவும் என்று புலம்பெயர் தமிழருக்கு உறுதியளித்தார். இந்த அறிவிப்பை முதலில் பாராட்டியவர்களில் தமிழக பா.ஜ.க. தலைவர் கே. அண்ணாமலையும் ஒருவர். தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் மே 2026 இல் நடைபெற உள்ளது. அதற்குள் புதிதாக ஒரு மையத்தை அமைப்பது சாத்தியமில்லை. ஆனால் பொருத்தமான இடம் ஒன்று கிடைத்தது. அதுதான் யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம் இந்த வாக்குறுதியை நிறைவேற்றிய முதலாவது இடமாக மாறியது. யாழ்ப்பாண கலாசார மையத்தின் பெயரை மாற்றும் முடிவை பிரதமர் அலுவலகம் இந்திய உயர்ஸ்தானிகராலயத்திற்குத் தெரிவித்தது. யாழ்ப்பாண கலாசார மையத்தின் பெயர் திருவள்ளுவர் கலாசார மையமாக பெயர்மாற்றம் செய்யப்பட்டமைக்கு எதிர்ப்புக் கிளம்பியபோது, அது புதுடில்லியை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. இலங்கைத் தமிழ் சிறுபான்மையினர் யாழ்ப்பாணத்தை தமிழர் வடக்குக் கிழக்கின் வரலாற்று மற்றும் கலாசார இதயமாகக் கருதுகின்றனர். 30 ஆண்டுகால இனமோதலில் அது கிட்டத்தட்ட அழிக்கப்பட்டது. 1983 இல் மோதல் தொடங்கிய உடனேயே, சிங்களக் கும்பல்கள் யாழ்ப்பாணப் பொதுநூலகத்தை எரித்து, அங்கிருந்த தமிழ்ப் புத்தகங்கள் மற்றும் கையெழுத்துப் பிரதிகளின் தொகுப்புகளை எரித்தன.

ஏராளமான தமிழர்கள் மோதலில் இருந்து தப்பி வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்தபோதிலும், யாழ்ப்பாணம் தமிழ் அரசியலுக்கும் அடையாளத்துக்கும் மையமாக உள்ளது. வானளாவ உயர்ந்து நிற்கும் இந்தக் கலாசார மையம் இலங்கையில் ஒரு காலத்தில் தமிழ்க் கலாசாரத்தின் உச்சத்தையும் மோதலின் பேரழிவு மற்றும் அதிர்ச்சியைக் கடந்து அந்த உயரங்களை மீண்டும் பெறுவதற்கான சமூகத்தின் உறுதியைக் குறிப்பதாக அமைந்திருந்தது.

இந்த நிலையில், யாழ்ப்பாணக் கலாசார மையத்தின் பெயரை திருவள்ளுவர் கலாசார மையமாக, தன்னிச்சையான பெயர் மாற்றம் செய்தமை யாழ்ப்பாணத் தமிழ் மக்களைக் கோபப்படுத்தியது . குறிப்பாக யாழ்ப்பாணப் பிரதிநிதிகள் எவரிடமும் ஆலோசனை கேட்கப்படவில்லை. நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரிடமும், குறிப்பாக அநுரகுமார திஸாநாயக்க அமைச்சரவையின் ஒரே தமிழ் உறுப்பினரான மீன்வள அமைச்சரிடம்கூட, இதுபற்றி ஆலோசிக்கப்படவில்லை. பெயர்மாற்ற விழாவில் கலந்துகொண்ட அமைச்சர் ராமலிங்கம் சந்திரசேகரன் தங்களுக்குப் பெயர்மாற்றம் தொடர்பாக எதுவும் தெரிவிக்கப்படவில்லை என்று கூறியிருந்தார். அத்துடன் மேலும் தமிழென அவமானப்படுத்தும் விதமாக பெயரின் தமிழ் வடிவம், ஆங்கிலம் மற்றும் சிங்களத்துக்குப் பின்னர் கடைசியாகக் காணப்பட்டது பொதுமக்களின் அதிருப்தி அதிகரித்ததால், இலங்கைத் தமிழரசுக் கட்சி பெயர்மாற்றம் குறித்து வேதனையை வெளிப்படுத்தி யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத்தூதருக்குக் கடிதம் ஒன்றை எழுதியது. திருவள்ளுவருக்கு எதிர்ப்பு இல்லை என்றாலும், இலங்கைத் தமிழ் அடையாளமாக யாழ்ப்பாணத்தின் பெயரில் அந்த மையத்தின் பெயர் அமையவேண்டும் என்றும் தமிழரசுக் கட்சி வலியுறுத்தியது.

எனினும் இந்த விடயத்தில், முழுமையாக விட்டுக்கொடுக்க விரும்பாத புதுடில்லி மாற்றுவழிகளை நாடியது. கொழும்பில் உள்ள இந்திய இராஜதந்திரிகள் முதலில் "திருவள்ளுவர் கலாசார மையம் யாழ்ப்பாணம்" என்ற சமரசத்தை பரிந்துரைத்தனர். இது யாழ்ப்பாணத்தை வெறும் முகவரிபோல ஒலிப்பதாக தமிழர் தரப்பு எதிர்ப்புத் தெரிவித்தது. இறுதியில் யாழ்ப்பாண திருவள்ளுவர் கலாசார மையம் என்று பெயர்மாற்றப்பட்டுள்ளது. ஆனால் யாழ். தமிழர்கள் இன்னும் இந்தியாவின் பெரிய அண்ணன் அணுகுமுறையை எதிர்த்துப் போராடிவருகின்றனர். இந்தியா தனது நலன்களுக்காக ஈழப்போராட்டத்தை ஆதரித்தது. மேலும் இந்தியாவின் தலையீடு அதிகாரப் பகிர்வுக்கான அரசியலமைப்புத் திருத்தத்துக்கும் வழிவகுத்தது. வரலாற்று ரீதியாக இந்தியாவுடன் நெருக்கமாக இருந்த தமிழ் மக்களை சீனா கவர முயற்சித்துவரும் நேரத்தில் இந்தப் பெயர் மாற்ற சர்ச்சை எழுந்துள்ளது.

சமீபத்திய ஆண்டுகளில், சிங்கள அரசியலில் சீனாவின் செல்வாக்குக் குறித்த கவலைகள் காரணமாக, கொழும்புடன் நெருக்கமான உறவுகளை ஏற்படுத்துவதற்காக புதுடில்லி , தமிழர் பிரச்சினையைக் குறைத்து மதிப்பிடுவதால் அவர்கள் ஏமாற்றமடைந்துள்ளனர். இலங்கைக் கடல் பகுதியில் தமிழக மீனவர்கள் அதிக அளவில் மீன்பிடிப்பது யாழ்ப்பாணத்தில் இந்தியாவுக்கு எதிராக உணர்வுகளை அதிகரிக்கச் செய்யும் இன்னொரு பிரச்சினையாகும்.

குடியரசு தினத்தன்று, யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத்தூதர் இலங்கைத் தமிழ் மக்கள் எந்த நேரத்திலும் கதவைத் தட்டக்கூடிய நட்பு நாடு இந்தியா என்று கூறினார். இந்தியா தனது இருதரப்பு உறவுகளுக்கு அப்பால் சென்று தமிழ் மக்களுடன் நிற்கிறது என்றும் உங்கள் நண்பர்கள் யார் உங்களுக்கு எதிரானவர்கள் யார் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும் என்றும் அவர் கூறினார். சில முடிவுகள் வேறுபாடுகளை உருவாக்கியிருந்தாலும் யாழ்ப்பாண துணைத்தூதரகம் மக்களின் நலன்களை மனதில் வைத்திருக்கும் என்றும் அவர் உறுதியளித்தார். மாற்றங்களைச் சமாளிக்க முடியும். ஆனால் ஒரு காலத்தில் யாழ்ப்பாண கலாசார மையமாக இருந்து, பின்னர் பெயர்மாற்றப்பட்ட விடயம், யாழ்ப்பாணத் தமிழர்களை ஒவ்வொரு நாளும் முகம்சுழிக்க வைக்கவே செய்யும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேர்தல் ஆண்டில் தையிட்டி விகாரை

நிலாந்தன்

அரசியல் சமூகச்செயற்பாட்டாளரான செல்வின் அண்மையில் சொன்னார், 'பலாலியில் தரையிறங்கும் ஒரு விமானத்தின் பருந்துப் பார்வையில் முதலில் தெரியப்போவது தையிட்டி விகாரைதான்' என்று. பகலில் சூரியஒளியிலும் இரவில் இருளின் பின்னணியில் மின்னொளியில் முழிப்பாகத் தெரியப்போவதும் விகாரையாகத்தான் இருக்கும். எனவே பலாலி விமானநிலையத்தில் தரையிறங்கும் ஒரு விமானப்பயணிக்கு யாழ்ப்பாணத்தின் தரைத்தோற்றத்தில் முதலில் முழிப்பாகத் தெரியப்போவது தையிட்டித் தாதுகோபமா ?

தையிட்டியிலிருந்து சுமார் 13 கிலோமீற்றர் தொலைவில் உள்ள மாதகல் சம்பில் துறை ஏற்கனவே ஜம்புகோளப் பட்டினமாக பெயர்மாற்றப்பட்டு சிங்கள பௌத்த மயப்படுத்தப்பட்டுவிட்டது. அங்கே ஒரு பெரிய விருந்தினர் விடுதி உண்டு. அது யுத்த வெற்றிவாதத்தின் சுற்றுலாவிகளாக வரும் சிங்கள பௌத்த பயணிகளைக் கவரும் நோக்கிலானது. அதையும் படைத்தரப்பே பரிபாலித்து வருகிறது. அங்கேயும் தனியார் காணிகள் பறிக்கப்பட்டிருப்பதாக குற்றச்சாட்டுக்கள் உண்டு. இப்படிப்பட்டதோர் நிலப்பறிப்பு மற்றும் சிங்கள பௌத்த மயமாக்கற் பின்னணியில் தையிட்டி விகாரையை விட்டுக் கொடுப்பதற்கு அரசாங்கம் தயாராக இருக்குமா ?

அண்மையில் உயிர்நீத்த ஊடகவியலாளராகிய பாரதியின் இறுதிநிகழ்வுக்கு வந்திருந்த கொழும்பை மையமாகக் கொண்ட ஊடகவியலாளர் ஒருவர் என்னிடம் பின்வருமாறு சொன்னார், “தையிட்டி விகாரையின் மையப்பகுதி அதாவது தாதுகோபம் அமைந்திருக்கும் காணி ஒரு மலேசிய ஓய்வூதியருக்குரியது. அவருடைய உறவினராகிய ஒரு பெண் மலேசியாவில் வசிக்கிறார். அவர் சில ஆண்டுகளுக்கு முன் சுமந்திரன் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தபொழுது அவரைச் சந்தித்து அது தொடர்பாக உரையாடியிருக்கிறார். அதன்பின் அவர் அப்போதிருந்த தளபதி சவேந்திர சில்வாவையும் சந்தித்ததாகத் தகவல் உண்டு” என்று.

இந்த விடயத்தை நான், அண்மையில் யாழ். திண்ணை விடுதியில் நடந்த ஐ.நா.வின் விருந்துபசாரத்தில் கலந்து கொண்ட சுமந்திரனைக் கண்டபொழுது கேட்டேன். அவர் அந்தத்தகவல்கள் உண்மையானவை என்று சொன்னார். அந்தப் பெண் கிட்டத்தட்ட 80 வயதைக் கடந்தவர் என்று கூறப்படுகிறது. அவர் இப்பொழுது எங்கே இருக்கிறார் அல்லது அவர் இருக்கிறாரா இல்லையா போன்ற விவரங்கள் சுமந்திரனுக்குத் தெரியவில்லை.

ஆனால், காணி உரிமையாளர் வெளிநாட்டில் என்பது உண்மையான தகவல் அல்ல என்று சம்பந்தப்பட்ட உள்ளூராட்சிசபையின் முன்னாள் உறுப்பினர் சஜீவன் கூறுகிறார். அப்போதிருந்த தமிழரசுக் கட்சியின் உள்ளூராட்சி மன்றத் தலைவர் இது தொடர்பில் பொறுப்பாக நடந்து கொள்ளவில்லை என்றும், விகாரை கட்டப்பட்டதற்கு அவரும் பொறுப்பு என்று சஜீவன் குற்றஞ் சாட்டுகிறார்.

'காணி உரிமையாளர் மலேசியாவில்' என்று கூறப்படுவதை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வட்டாரங்கள் வேறுவிதமாகப் பார்க்கின்றன. தையிட்டிப் போராட்டத்தின் எழுச்சியை திசைதிருப்பும் நோக்கத்தைக் கொண்ட தகவல்கள் இவை என்று அவர்கள் கருதக்கூடும். அவர்கள் தையிட்டி விகாரையை ஒரு சட்டவிரோதக் கட்டுமானம் என்று தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள். ஆனால் அதை சட்டரீதியாக மட்டும் அணுகக்கூடாது. அதை ஏன் தனியே சட்டரீதியாக மட்டும் அணுகக்கூடாது? ஏனென்றால் சட்டவிரோதமானது, பிழையானது என்றால் சட்ட ரீதியானது சரியானது என்பதே தர்க்கம். சட்ட ரீதியானது சரியானது என்றால் சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பின் சட்டக் கட்டமைப்பு தமிழ் மக்களுக்கு நீதியைப் பெற்றுத் தரும் என்று நம்பலாமா?

இல்லை. தமிழ் மக்களுக்கு எதிரான இன அழிப்பின் கருவிகளில் சட்டமும் ஒன்று. அண்மையில் அரசியல் பேசும் இளையோர் என்ற அமைப்பின் மெய்நிகர் சந்திப்பில் சுட்டிக்காட்டப்பட்டதுபோல, திருகோணமலையில் பஸ் நிலையத்தில் கட்டப்பட்ட இரண்டு புத்தர் சிலைகளுக்கு எதிராக நீதிமன்றம் வழங்கிய கட்டளை உண்டு. ஆனால் சிலைகள் அகற்றப்படவில்லை. கிழக்கில் மேய்ச்சல் தரை ஆக்கிரமிப்புக்கு எதிராக நீதிமன்றக் கட்டளை உண்டு. முல்லைத்தீவில், நீராவியடியில், நீதிமன்றத் கட்டளையை மீறி பிள்ளையார் ஆலய வளாகத்தில் ஒரு பிக்குவின் உடல் தகனம் செய்யப்பட்டது. அதுபோல பல இடங்களில் நீதிமன்ற கட்டளைகளை மீறி சிங்கள பௌத்த மயமாக்கலும் நில ஆக்கிரமிப்பும் நடந்திருக்கின்றன. நடந்துகொண்டிருக்கின்றன. எனவே இலங்கைத்தீவின் சட்டக்கட்டமைப்பு தமிழ் மக்களுக்கு நீதியைத் தரும் என்ற தோற்றத்தை ஏற்படுத்த முடியாது.

மாறாக தையிட்டி விகாரை விடயத்தை நிலப்பறிப்பு, சிங்கள பௌத்த மயமாக்கல் நிகழ்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியாகவே பார்க்கவேண்டும்; அணுக வேண்டும்; அதற்கு எதிராகப் போராடவேண்டும். கடந்த பௌர்ணமி நாளன்று நடந்த போராட்டம் குறிப்பிடத்தக்கது. ஆனால் ஒவ்வொரு பௌர்ணமி நாளில் மட்டும் போராடலாமென்றால் அது மிகப்பலவீனமானது. ஏனென்றால் நிலப்பறிப்பும் சிங்கள பௌத்த மயமாக்கலும் பௌர்ணமிகளுக்காகக் காத்திருப்பதில்லை. அவை மிகவும் நிறுவனமயப்பட்ட நடவடிக்கைகள். இக்கட்டுரை எழுதப்படுகையில்கூட எங்காவது ஒரு சிறுகுன்றில் ஏதாவது ஒரு விகாரைக்கு ஒரு செங்கல் வைக்கப்பட்டுக்கொண்டிருக்கும்.

எனவே ஒவ்வொரு போயாதினத்தன்றும் போராடி தையிட்டியை மீட்கமுடியாது. நில அபகரிப்புக்கும் சிங்கள பௌத்த மயமாக்கலுக்கும் எதிரான போராட்டம் மாதத்தில் ஒரு தடவை மட்டும் நடத்தப்படும் ஒன்றாக இருக்க முடியாது. ஏனென்றால் நில அபகரிப்பும் சிங்கள பௌத்த மயமாக்கலும் சிங்கள பௌத்த அரசுக்கட்டமைப்பின் தொடர் நடவடிக்கைகள். பல தசாப்தகால தொடர்ச்சியான நடவடிக்கைகள். மிகவும் நிறுவனமயப்பட்ட, அதிக வளம் பொருந்திய அரசு உபகரணங்களால் முன்னெடுக்கப்படுகின்ற தொடர்ச்சியான நடவடிக்கைகள். அதாவது சிங்கள பௌத்த மயமாக்கல் நடவடிக்கைகள் அதை இன்னும் கூர்மையான வார்த்தைகளில் சொன்னால் தமிழ்மக்களின் தேசிய இருப்பை அழிக்கும் நடவடிக்கைகள் கடந்த பல தசாப்தங்களாக தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக 2009க்குப் பின்னரும் அது முன்னெடுக்கப்பட்டுவருகிறது. ஆனால் தமிழ் எதிர்ப்புத்தான் குறைந்துபோய்விட்டது.

இப்படிப்பட்டதோர் பின்னணியில் நில அபகரிப்புக்கும் சிங்கள பௌத்த மயமாக்கலுக்கும் எதிராகத் தொடர்ச்சியாகப் போராடவேண்டிய ஒரு நிர்ப்பந்தம் தமிழ்த்தரப்புக்கு உண்டு. அடுத்த பௌர்ணமிவரை இன்னுமொரு எழுச்சிக்காகக் காத்திருப்பது பலமானது அல்ல. தமிழ் மக்களுடைய போராட்டத்தின் அளவுதான் இந்த விடயத்தில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் முடிவையும் தீர்மானிக்கும். ஏனென்றால் இது ஒரு தேர்தல் ஆண்டு. இந்த ஆண்டில் சிங்கள பௌத்த வாக்காளர்களின் வாக்குகளைக் கவர்வதா? அல்லது தமிழ் மக்களுடைய பயங்களை நீக்குவதா? என்று பார்த்தால், அரசாங்கம் சிங்கள பௌத்த வாக்காளர்களின் கூட்டு உளவியலை பாதுகாக்கவே முன் நிற்கும்.

தையிட்டிப் போராட்டத்தின் பின்னணியில் ஜனாதிபதி வல்வெட்டித்துறைக்கு வருகிறார். பிரதமர் வலிகாமத்தின் பல பகுதிகளுக்கும் வருகிறார். மானிப்பாயில் வைத்து பிரதமர் கூறுகிறார், இது தமிழ் மக்களாலும் தெரிவுசெய்யப்பட்ட அரசாங்கம் என்று.

அதேசமயம் அமைச்சர் சந்திரசேகரன் மீனவக் கிராமங்கள்தோறும் தீயாக வேலைசெய்கிறார். தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இந்த விடயத்தில் ஒருவித இந்திய எதிர்ப்பை 'லோக்கலாக' வெளிப்படுத்துகின்றது. இந்திய மீனவர்களுக்கு எதிராகத் திட்டவட்டமான நிலைப்பாட்டை எடுப்பதன்மூலம் தமிழ் கடற்றொழிலாளர் சங்கங்களைக் கவர்வது அவர்களுடைய உள்நோக்கம்.

அண்மையில் வெளியிடப்பட்ட வரவு செலவுத்திட்ட அறிக்கையும் தமிழ் மக்களைக் கவரும் நோக்கிலானது. ரணில் விக்கிரமசிங்க எரித்த நூலகத்தை நாங்கள் அபிவிருத்தி செய்கிறோம் என்ற பொருள்பட சந்திரசேகரன் முகநூலில் ஒரு பதிவை போட்டிருக்கிறார். நூலக எரிப்புக்கு ரணில் எப்பொழுதோ மன்னிப்புக் கேட்டுவிட்டார். ஆனால் வடக்குக் கிழக்கை பிரித்தமைக்கு; சுனாமிப் பொதுக்கட்டமைப்பு எனப்படும் மனிதநேயக் கட்டமைப்பை எதிர்த்தமைக்கு; இறுதிக்கட்டப் போரில் மஹிந்தவைப் பலப்படுத்தியதற்கு ஜே.வி.பி. இன்றுவரை மன்னிப்புக் கேட்கவே இல்லை. நூலகத்துக்கு நிதி ஒதுக்கியதன்மூலம் படித்த தமிழ் நடுத்தர வர்க்கத்தைக் கவரலாமா? என்று அரசாங்கம் முயற்சிக்கின்றது. அதாவது விரைவில் வரக்கூடிய உள்ளூராட்சி மன்றத் தேர்தல், பின்னர் வரக்கூடிய மாகாணசபைத் தேர்தல் ஆகியவற்றை இலக்குவைத்துத் தமிழ் வாக்குகளைக் கவரும் நோக்கத்தோடு அரசாங்கம் தமிழ்ப்பகுதிகளில் இறங்கி வேலைசெய்கின்றது.


ஆனால் பிரதமர் ஹரிணி கூறுவது போல இந்த அரசாங்கம் தமிழ் மக்களாலும் தெரிவுசெய்யப்பட்டது என்றால், தையிட்டி விகாரை விடயத்தில் தமிழ் மக்களின் பயத்தையா அல்லது சிங்களபௌத்த கூட்டு உளவியலையா அதிகமாக மதிக்கும்?

வரவுசெலவுத் திட்ட அறிக்கையை முன்வைத்து உரையாற்றிய அநுர பின்வருமாறு கூறுகிறார் “எங்களில் யாரும் லஞ்சம் எடுப்பதில்லை. அப்படி எடுத்தால் அவர்களுக்கு எந்த மன்னிப்பும் கிடையாது. ஊழல் இல்லாத ஆட்சியை உருவாக்குவேன். லஞ்சம் வாங்கப் பயப்படும் நாட்டை உருவாக்குவேன். அப்படிப்பட்ட ஆட்சியால் மட்டும்தான் இந்த நாட்டை கட்டியெழுப்பமுடியும்.” அவர் கூறுவது சிங்கள மக்களுக்குப் பொருந்தலாம். ஆனால் தமிழ் மக்களுக்குப் பொருந்தாது. தமிழ் மக்கள் ஊழலுக்கு எதிராகவோ அரசு நிர்வாகத் துஷ்பிரயோகங்களுக்கு எதிராகவோ போராடவில்லை. நமது தேசிய இருப்பை அழிக்கமுற்படும் இன ஒடுக்குமுறைக்கு எதிராகத்தான் போராடிவருகிறார்கள். எனவே தமிழ் மக்கள் கேட்பது தமது தேசிய இருப்பைப் பாதுகாக்கவேண்டும் என்றுதான். ஊழலற்ற ஆட்சியால்தான் நாட்டைக் கட்டியெழுப்பலாம் என்று கூறுவது தவறு. இனவாதமற்ற, இன அழிப்புக்கு பரிகாரம் தரத் தயாராக உள்ள, அதாவது இனப் பிரச்சினையைத் தீர்க்கத் தேவையான அரசியல் திடசித்தத்தை “பொலிட்டிக்கல் வில்லைக்” கொண்டிருக்கும் ஒரு அரசாங்கத்தால் மட்டும்தான் இந்தச்சிறிய தீவைக் கட்டியெழுப்பமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ம.லக்ஷிதா
தரம் 4A
யா/ மீசாலை வீரசிங்கம்
ஆரம்ப வித்தியாலயம்



உ.அஜய்
தரம் - 4A
யா/ ஆனைப்பந்தி
மெ.மி.வித்தியாலயம்

**மாணவர்களே!**

நீங்களும்
உங்கள்
கைவண்ணங்கள்,
ஆக்கங்களை
அனுப்பலாம்.

அனுப்ப வேண்டிய முகவரி!

**உதயன் சஞ்சீவி**
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
**0773165555**




யூ.ர.தியோரிநாத்.
தரம்9
யா/இந்துக்கல்லூரி.




ர.சாணக்கியன்
தரம் - 6A
யா/உடுப்பிட்டி
அ.மி.கல்லூரி




கே.இந்துஜா
தரம் - 9
யா/உரும்பிராய்
இந்துக் கல்லூரி.



ரா.சுகீர்தன்
தரம் - 8E
யா/கொக்குவில் இந்துக்
கல்லூரி.



சந்திரகாந்தன் டேமி
தரம் - 10D
யா/புத்தளம் கல்பிட்டி
அல் அக்சா தேசிய
பாடசாலை



சேரா ஜொஹனா
பிரதீபன்
தரம் 7
அட்டமி சர்வதேச
பாடசாலை



பி.ரமியன்
தரம் 4A
சாவகச்சேரி இந்து
ஆரம்ப பாடசாலை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சங்கப் பெண்பாற் கவிஞர்களின் பார்வையில் தமிழர் பண்பாடும் வாழ்வியலும் – ஓர் நோக்கு

பேராசிரியர் சிவேசன் சிவானந்தமூர்த்தி
சந்தைப்படுத்தல் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



04

நான் அணிந்திருந்த பாசி படர்ந்தது போல் இருந்த பழைய ஆடையினை மாற்றுவதற்குப் புதிய மிருதுவான ஆடையினை எனக்குக் கொடுத்து ஆடை மாற்றுவித்த பின்னர் கள்ளும், ஊண் கலந்த உணவும் எனக்குக் கொடுத்தான் எனவும் தன் சுற்றத்தார்க்கும் உணவுகள் வழங்கப்பட்டன என்றும் ஔவையார் "இயற்றி தன் உழைக்கும் குறுகல் வேண்டி, என் அரை" என்று ஆரம்பிக்கும் 390 ஆவது புறநானூற்றுப் பாடலில் காட்சிப்படுத்தியுள்ளார்.

மேலும், 392 ஆவது புறநானூற்றுப் பாடலில் அதியமான் நெடுமானஞ்சி மகன் பொருட்செழியனின் சிறப்பினை ஔவையார் பாடும்போது அவன் புளித்த கள்ளையும், அன்னத்தையும் கொடுத்து மகிழ்ந்தான் என்றும் அந்தப் புறப்பாடல் குறிப்பிடுகின்றது. அதியமானின் கொடைச்சிறப்பினைப் பற்றி ஔவையார் பல பாடல்களில் விபரித்துள்ளார். சான்றாக ஔவையார் 91ஆவது புறநானூற்றுப் பாடலில் "சிறியிலை நெல்லித் தீம்கனி குறியாது" என்று சுட்டிக்காட்டி அதியமானின் கொடைச்சிறப்பினை விபரிக்கின்றார். அதாவது பெறுதற்கரிய நெல்லிக்கனியைப் பெற்ற அதியமான் அதனைத் தான் உண்ணாது ஔவையார்க்குக் கொடுத்தான். இதனை நான் உண்பதனால் எனது ஆயுள் நீடிக்கும் என்று அதியமான் நம்பினார். அதியமான் மிக அரிதாகக் கிடைக்கூடிய பொருள்களினையும் தானமாகக் கொடுத்து மகிழ்கின்ற மனநிலையினைக் கொண்டவன் என்றும் நட்புக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பவன் என்றும் ஔவையார் 91ஆவது புறநானூற்றுப் பாடலில் விபரித்துள்ளார். சங்ககாலத்தில் வாழ்ந்த மக்களும் மன்னனும் கொடைச்சிறப்பு மிக்கவர்களாக, வந்தோரை வரவேற்று உண்டி கொடுத்து உபசரித்தும் மகிழ்ந்தனர் என்பதும் இதனூடாகப் பெறப்படுகின்றது.

## பெண்களும் உறவுமுறைகளும்

சங்ககாலத்தில் பெண்கள் தெய்வ நிலையிலும், தெய்வீக உணர்வுகளுடனும் சமநிலைப்படுத்தப்பட்டு ஏற்றுதலுக்கும், போற்றுதலுக்கும் உரியவர்களாக விளங்கினார்கள். அக்காலத்தில் வாழ்ந்த மங்கையர்களின் மனநிலை, குணவியல்புகள்கூட ஆண்களுக்குச் சமநிலைப்பட்டனவாகவே காணப்பட்டன. தெரிவை,மாதர், நல்லார், மென்சாயலர், மாதர்,ஆயிலை போன்ற பண்புகளினை விபரித்த அதேவேளையில் பெண்ணின் கண், கூந்தல், முகம்,நெற்றி,இடை, தொடை,பற்கள், முலைகள் மற்றும் பாதங்கள் போன்ற பெண்ணின் அங்கங்களினையும் வர்ணித்தனர். (சிவேசன், 2024) இவ்வாறான வர்ணனைகளின் வாயிலாக நோக்கும்போது பெண் என்பவள் ஒரு போகப்பொருளாகவும் நோக்கப்படுகின்ற நிலை உயிர்யிதப்படுத்தப்படுகின்றது. சங்ககாலத்துப் பெண்கள் பல தொழில்களில் ஈடுபட்டனர் என்பதற்கு இலக்கியவழிச் சான்றுகள் உள்ளன. (அகம் 20, 390, 157, 387, புறம் 311, பக்.178 -181,பெ : 336 -340)

இதற்கும் மேலாக ஆடவர் வாணிபம், அரசியல், படைக்காப்பு போன்ற துறைகளை முகாமை செய்ய பெண்கள் அறம் ஓம்பிக் குடும்பம் நடத்தினர். பொன்முடியார் என்ற பெண்பாற் பாவலர் "ஈன்று புறந்தருதல் என்தலைக்கடனே" என ஆரம்பிக்கும் 312ஆவது புறநானூற்றுப் பாடலில் ஒவ்வொருவருக்குமான கடமைகளினைத் தெளிவாக எடுத்துக்கூறுகின்றார். பண்டைய தமிழர்கள் தமக்கெனத் தம்மால் வகுக்கப்பட்ட கடமைகளினைச் செய்கின்ற உணர்வு நிறைந்தவர்கள். இப்பாடலில் குழந்தையினைப் பெற்று பாதுகாப்புடன் வளர்ப்பது தாயின் கடமை என்றும், குழந்தையை நற்பண்புகளுடன் வளர்ப்பது தந்தையின் கடமை அதாவது தனது குழந்தையை சான்றோன் எனப் பிறர் பாராட்டும்படியாக வளர்க்க வேண்டும் என்றும், போர்க்கலையினை அறிந்திட வேண்டும் என்றும் வேல் போன்ற ஆயுதங்களினைச் செய்வது கொல்லனின் கடமை என்றும், நல்ல முறையில் போர்ப்பயிற்சிகள் வழங்கி போர்க்கலையில் வல்லவர் ஆக்குதல் மன்னனின் கடமை என்றும் பொன்முடியார் குறிப்பிடுகின்றார்.

பெண்பாற் புலவர்கள் தாம் தெரியப்படுத்த விரும்பி யவற்றினை ஒளிவுமறைவின்றி நிதானமாக வெளிப்படுத்துகின்ற தன்மையைக் காணமுடிகிறது. பெண்பாற் புலவர்கள் வாழ்க்கை பற்றிய தெளிவான சித்தாந்த நோக்கல்களினைக் கொண்டவர்களாக இருந்தனர்.

காமக்கணிப்பசலையர் என்ற பெண்பாற் கவிஞர் பாலைத்திணையில் உள்ள நற்றிணைப் பாடலில் வாழ்க்கையின் நிலையாமைத் தன்மையை சூதாட்டத்துக்கு ஒப்பிடுகின்றார். "கவறுபெயர்த்தன்ன நில்லா வாழ்க்கை இட்டு" (நற். 243 : 5)

சூதாட்டத்தில் வெற்றி தோல்வியானது நிலையற்றது போல் வாழ்க்கையில் தேடப்படுகின்ற செல்வமும் நிலையில்லை என்பதனை உணர்த்துபவராக இப்புலவர் உள்ளார்.

அறமும், செல்வமும் நிறைந்திருக்கும் இல்லற வாழ்க்கையில் செல்வம் என்பது நிலையற்றது என உணர்ந்தும் அதைத் தேடுவதற்கு வாழ்க்கைக் காலத்தின் பெரும்பகுதியினைச் செலவுசெய்தனர். ஆடவர்கள் எல்லோரும் சரியான அறத்தின்வழி ஒழுகுகின்றார்களா என்ற வாதம் சங்ககாலத்தில் காணப்பட்டது. இவ்வாறான பெண்களின் ஆதங்கம் பெண்பாற் புலவர்களின் வழியே வெளிக்கொண்டுவரப்படுகின்றது.

(தொடரும்)

# உணர்ப்திணம்

பாகம் 3

இராகவன்

தைப்பூசத்திலண்டு தொண்டைமனாறு செல்வச்சந்நிதி முருகனிட்டப் போட்டு உதயண்ணையின்ர மாமியாரின்ர முப்பத்தொண்டுக்கும் போகவேண்டியிருந்தது. உதயண்ணை என்னோட ஏ.எல். படிக்கிற காலத்திலயிருந்து வலுநெருக்கம். ஆள் 1992 ஏ.எல் எழுதி 'ஏ 3 பி' எடுத்து மனேஜ்மன்ற் கிடைச்சுக் கம்பஸ்போன கெட்டிக்காரன். இவரின்ர மூத்தண்ணாதான் மன்னார், பருத்தித்துறை , கரவெட்டியெல்லாம் பிரதேசசெயலாளராக இருந்து இப்ப கடைசியா சிறுவர் மகளிர் விவகார அமைச்சின் செயலாளராப் பதவி வகிச்சு ஓய்வுபெற்ற வரதீஸ்வரன். அவரும் என்ர மூத்தண்ணரும் யாழ்ப்பாணக் கம்பஸில ஒரே 'பட்ஜில' மனேஜ்மென்ற் செய்து 1989 பாஸ் அவுட் பண்ணினவை. அதோட ரூம் மேற்றாயுமிருந்தவை. அந்தவகையிலயும் உதயண்ணை குடும்பம் எனக்கு நெருக்கம்.

மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதியாயிருந்த காலப்பகுதியில அதாவது 2014 நவம்பர் நடுப்பகுதியில நான் மருதங்கேணிப் பிரதேச செயலகத்தில வேலை செய்தனான். அப்பதான் எனக்கு அரசாங்க மோட்டர் சைக்கிள் கிடைச்சது. அப்ப எனக்கு மோட்டர் சைக்கிள் உருட்டவே தெரியாது. துரையப்பா ஸ்ரேடியத்துக்கு வந்து உடனடியா மோட்டர் சைக்கிள எடுக்கச்சொல்லிச்சினம். எனக்கு அப்ப என்ன செய்யிறதெண்டு தெரியேல்ல. இப்பவும் எனக்கு நெருங்கின சிநேகிதனா இருக்கிற சித்திராதரனைப் போய்ப்பிடிச்சன். அவன் அப்ப (இப்பவும்) வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் போஸ்ற் ஒப்பீஸில வேலை செய்துகொண்டிருந்தவன். நான் போய்க் கேட்டோண்ண அண்டைக்கு வேலைக்கு லீவு போட்டுட்டு வந்தான். இரண்டுபேரும் பஸ்ஸில போயிறங்கித் துரையப்பா ஸ்ரேடியம் போய் மோட்டர் சைக்கிளை எடுத்து சித்திராதரன் ஓட நான் பின்னுக்கிருந்து வந்தன். புத்தூரில


17

ட்ரபிக்காரர் நிண்டினம். அப்பதான் சித்திராதரன் "மாஸ்ரர் எனக்கு லைசன்ஸ் இல்லை. மறிச்சாங்கள் எண்டால் கதை கந்தல் " எண்டொரு குண்டைத்தூக்கிப் போட்டான். எனக்குச் சரியான ரென்சனாயிருந்திச்சுது. ஆனால் நல்லகாலம் அவங்கள் மறிக்கேல்ல. அண்டைக்கு மோட்டர் சைக்கிளைக் கொணந்து வீட்டுக்குள்ளை விட்டது தான். பிறகு அதிலை கைதொடேல்ல.

சித்திராதரன் , "மாஸ்ரர் முதல்ல போய் லேணர்ஸில பதிஞ்சு பழகி லைசென்ஸை எடுங்கோ" எண்டு என்னை அருட்டினதாலை நானும் லேணர்ஸில பதிஞ்சு சனி,ஞாயிறு காலமை வெள்ளணப்போய் வதிரி அம்மன்கோயில் (எரிஞ்சம்மன் கோயில் அல்லது உல்லியனெல்லை அம்மன்கோயில்) பின்வீதியில மூண்டு மாதமாப் பழகினன். இதுக்குள்ளயும் ஒரு முசுப்பாத்தியிருக்கு, எனக்கு மோட்டர் சைக்கிள் பழக்கினவருக்கு நான் ட்றையல் காட்டி பாஸ் பண்ணுவன் எண்ட நம்பிக்கை துண்டற இல்லை. இருந்தாலும் ட்றையல் காட்ட வரச்சொன்னார். நான் வழமைபோல ஒரு சனிக்கிழமை காலமை மோட்டர் சைக்கிள் பழகிற இடத்துக்குப் போனன். அங்கையொருத்தருமில்லை. அந்த இடமே வெறிச்சோடிப் போயிருந்தது. அதால லேர்ணஸ் ஒப்பிஸுக்குப் போனன். அங்கைபோய் விசாரிச்சால் கவுண்டரிலயிருந்த பிள்ளை சுள்ளெண்டு விழுந்தது. "இண்டைக்கும் நாளைக்கும் உங்களுக்கு யாழ்ப்பாணத்தில பழக்கிப் போட்டுத் திங்கக்கிழமை ட்றையல் காட்டிறது எண்டு தெரியாதே? எங்கை படுத்து நித்திரைகொண்டுட்டு வாறியள்? நீங்கள் காசுங்கட்டேல்ல. இப்ப உடனை காசக் கட்டிப்போட்டு யாழ்ப்பாணம் முனியப்பர் கோயிலடிக்குப் போங்கோ! " எண்டிச்சுது. உண்மையா இந்தச் சங்கதி எனக்குத் தெரியாது. பழக்கிறவர் நான் எப்பிடியும் ட்றையல்ல பெயிலாகிவிடுவன் எண்ட அசைக்கமுடியாத நம்பிக்கையில எனக்கு இதைச் சொல்லாமல் என்னை விட்டுட்டு மற்றாக்களைக் கூட்டிக்கொண்டு போகிட்டார். நான் அண்டைக்குக் காசைக் கட்டிப்போட்டு பஸ்பிடிச்சு முனியப்பர் கோயிலடிக்குப் போனாப்போலதான் எனக்கிது தெரிஞ்சுது. என்னைக் கண்டுட்டுப் பழக்கிறவர் முதல்ல கேட்ட கேள்வி, "நீங்கள் ஏன் வந்தனீங்கள்? " எண்டதுதான்.' உங்களுக்கு இந்தமுறை பாஸ் வராது. எண்டாலும் கடைசியாளாய் ட்றையல் காட்டுங்கோ'! எண்டார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளர் அவர்கட்கு,

## அப்பாவி எழுதும் ஓர் அருவெருப்பான கடிதம்?

முதற்கண் அப்பாவி அன்னமுத்துவின்ரை ஆசியும் வணக்கமும்.

"சீத்துவக்கேடு" பற்றிக் கேள்விப்பட்டனியளோ? காரைக்கவின்ரை முக நூலிலை எழுதிறத சீத்துவக்கேட்டை நான் சொல்லேல்லை. உங்கடை நகரசபையின்ரை சீத்துவக்கேட்டைப் பற்றிச் சொல்லுறன்.

போன 13 ஆம் திகதி ஒரு செத்தவீடு நடந்தது. அதுக்குக் கொழும்பிலை இருந்து ஊடகத்துறையிலை வேலை செய்யிற கனசனம் வந்தவை. ஒரு பதினைஞ்சு இருபதுக்கு மேலை இருக்கும் எண்டு நினைக்கிறன். சிங்களவர், தமிழர் எண்டு ஒரு கணக்கில்லை. எல்லாரும் யாழ்ப்பாண ரவுணுக்கை இருக்கிற ஹோட்டல்களிலைதான் தங்கினவை.

செத்தவீடு முடிய எல்லாரும் கொழும்புக்குப் போக வெளிக்கிடேக்கை அங்கை நிண்ட ஆக்களிட்டை நாங்கள் கொஞ்சம் பனஞ்சாமான் வாங்கவேணும் எங்கை வாங்கலாம் எண்டு கேட்டினம். அதுக்கு நீங்கள் யாழ்ப்பாணம் சத்திரச்சந்தைக்குத்தான் போகவேணும் எண்டு ஒராள் சொன்னார். சத்திரச்சந்தை எங்கை கிடக்கு? எண்டு வந்தவை கேட்டினம். ரவுணுக்கை போய் கேளுங்கோ காட்டுவினம் எண்டு ஒராள் சொன்னார். எங்களுக்குச் சத்திரச் சந்தை எங்கை கிடக்குதெண்டு தெரியாது, ஆனபடியாலை தயவுசெய்து அதைத் தெரிஞ்ச ஒராளை விடுங்கோ அவருக்கு நாங்கள் வேணுமெண்டால் ஏதாவது கொடுக்கிறம் எண்டு ஒராள் கேட்டார். உடனை அங்கை நிண்டவர் என்னைக் காட்டி அன்னமுத்து அண்ணைக்குத்தான் ரவுணுக்கை எல்லா இடமும் அத்துபடி எண்டு சொல்ல, அந்த ஆள் வந்து என்னட்டை வரச்சொல்லி மன்றாடினான். பாவம் எண்டு நினைச்சுக்கொண்டு அவை இருந்த ஹோட்டலிலை இருந்து ஆக்களைச் சத்திரச்சந்தைக்குக் கூட்டிக்கொண்டு போனன்.

அப்பிடியே அவையளைக் கூட்டிக்கொண்டு மணிக்கூட்டு வீதியாலை கொண்டுபோய் அப்பிடியே மலாயன் கபேக்கு முன்னாலை இருந்த சந்துக்குள்ளாலை கூட்டிக்கொண்டு போனன். அதுக்கை நிறையத் தையல்கடை. கொஞ்சத்தூரம் போனதுதான் தாமதம் வந்தவை தாங்கள் வரேல்லை வாங்கோ திரும்பிப் போவம் எண்டு கேட்டினம். உந்தச் சாமான்களை வாங்கிக்கொண்டு போறதிலையும் வெறுங்கையோடை போகலாம் எண்டு சொல்லிப்போட்டினம். எனக்கு ஏன் எண்டு விளங்கேல்லை.

வந்தவை எல்லாம் மூக்கைப் பொத்திக்கொண்டு நிண்டினம். அதிலை நிண்ட ஒரு தமிழ்ப் பெடியன் மூக்கையும் வாயையும் பொத்திக் கொண்டு கையாலை அங்கை இருந்த கோயில் பக்கத்தைக் காட்டினான். சந்தைக்கு நடுவிலை இருக்கிற அந்தக் கோயிலின்ரை பக்கத்திலை ஒரு வெட்டைவெளிக்காணி ஒண்டு இருக்கு. அதிலை நிண்டுகொண்டு கோயில் சுவரிலை மூண்டு நாலுபேர் மூத்திரம் பெய்துகொண்டு நிண்டினம். அது மாத்திரம் இல்லை அங்காலையும் இஞ்சாலையும் எண்டு கனபேர். மணம் தாங்கமுடியாமல் வந்தவையிலை ஒருதன் சத்தி எடுத்தான். குப்பெண்டு அந்த இடம் முழுக்க மணத்தது. எங்கை போறதெண்டு தெரியாமல் ஆஸ்பத்திரி வீதிப்பக்கம் போய் அப்பிடியே ஓட்டமும் நடையுமா ஓடிப்போய் ஹோட்டல் அறைக்கு வந்தாங்கள். வந்தபிறகுதான் மூக்கிலை இருந்து கையை எடுத்தாங்கள். அது சண்டைக் காலத்திலை செல் அடிக்குள்ளை ஓடினதுதான் எனக்கு ஞாபகத்துக்கு வந்தது. சத்தி எடுத்தவன் அப்பிடியே விழுந்து படுத்திட்டான். மற்றவங்கள் என்னை இருத்திப்போட்டுக் கேளாத கேள்வியளைக் கேக்கத் துவங்கினாங்கள்.

அண்ணை இவங்கள் இந்தப் பொதுஇடத்தை ஏன் இப்படி வைச்சிருக்கிறாங்கள். இதை எல்லாம் பாக்க உங்கடை ஊரிலை ஒரு நிர்வாகம் இல்லையா? உங்கடை ஊரிலை பீ.ஏச்.ஐ. இல்லையா? யாழ்ப்பாணத்துக்கு இதுதான் முதல் தடவை வந்திருக்கிறம். அதுவும் ஐயாவின்ரை கடைசி மரியாதையிலை கலந்துகொள்ள ஆசைப்பட்டுத்தான் வந்தனாங்கள். எங்கடை கனவிலையும் யாழ்ப்பாண ரவுன் இப்பிடி இருக்கும் எண்டு நினைச்சதில்லை. என்ன யாழ்ப்பாணம் பக்தி உள்ள ஊர் எண்டு சொல்லுறியள், பாத்தால் இந்துக்கோயிலைச் சுத்தி மூத்திரம் பெய்யிறியள். கோயில் வாசல்படி எல்லாம் வெத்திலைத் துப்பல். கோயிலுக்கு ஒரு பக்கம் வெறுங் காணிக்கை மூத்திர நாற்றம் தாங்கேலாமைக் கிடக்கு. மற்றப் பக்கம் வெத்திலைக்கடை. அதிலை வாங்கி அதிலை இருந்து சப்பிப்போட்டு வீட்டு முத்தத்திலை துப்பிறமாதிரி "கொளக்.. கொளக்" எண்டு துப்பிக்கொண்டு இருக்கிறாங்கள். அந்தக் கேட்டுக்கை மற்றப்பக்கம் ஒரு தேத்தண்ணிக் கடை. அதுக்கிடையிலை அந்தச் சுகந்த மணத்துக்கு நடுவிலை ஒரு நானா இருந்து வலு சௌகரியமாத் தைச்சுக்கொண்டு இருக்கு.

இந்த மாக்கெற் கட்டிடத்துக்கு ஆர் பொறுப்பு? எண்டு கேட்டாங்கள். யாழ்ப்பாண மாநகரசபைதான் பொறுப்பு எண்டு சொன்னன். அப்ப அவையளிட்டையோ யாழ்ப்பாணக் கலாசார மையத்தைப் பொறுப்புக் குடுக்க வெளிக்கிட்டவை எண்டும் கேட்டாங்கள். வந்தவை அத்தனை பேரும் மீடியாக்காரர். விளப்பமுள்ள ஆக்கள். அவங்களைப் பேக்காட்டப் பலதையும் பத்தையும் சொல்லிப்பாத்தன். அவங்களுக்குக் கோபம் வந்திட்டுது. அன்னமுத்து அண்ணா பேக்கதை கதையாதையுங்கோ எண்டு மிண்டத் துவங்கிவிட்டாங்கள். அண்டு மட்டுமில்லை. அவங்கள் முதல் நாள் பின்னேரமே வந்திட்டாங்கள். ஹோட்டலிலை உடுப்பு பாக்கை வைச்சிட்டு சாப்பிட வெளியே வந்திருக்கிறாங்கள். மெல்ல சீரிபி பஸ் ஸ்ரான்ட் பக்கமாப் போனால் நல்ல சைவக்கடை இருக்கெண்டு ஆரோ சொல்லிச்சினமாம். ஆனால் ஆமான கடை ஒண்டையும் காணேல்லை எண்டு திட்டினவங்கள். சீரிபி பஸ் ஸ்டான்ட்டிலை திரும்பின பக்கம் எல்லாம் கடையள் எண்டும் சனம் போகவரச் சௌகரியமில்லாமல் வியாபாரியள்தான் கனக்கவாம். அதுக்கை பழக்கடைப் பக்கம் போனால், அதிலை ஆரோ தூஷணத்தாலை கத்திக்கொண்டு நிண்டவங்களாம். நகைக்கடைப் பேலியிலை மூண்டு சாராயக்கடை, ஆஸ்பத்திரியடியிலையும் சாராயக்கடை, அங்காலை கருவாட்டுக்கடைப் பக்கமும் சாராயக்கடையளுக்குக் குறைவில்லை எண்டும் வின்சர் சந்தியிலை இருக்கிற குளம் சாக்கடையாக கிடக்குதெண்டும் அப்பிடியே திருத்தின ஆரியகுளமும் பாராமரிப்பில்லாமல் அதுக்குள்ளை வள்ளங்கள் எல்லாம் தலைகீழாக் கிடக்குதெண்டும் சொல்லிப் பகிடி பண்ணினவங்கள். நாகவிகாரைப் பக்கம் தொட்டு அப்பிடியே வந்து வேம்படிச் சந்தியாலை போய் கார்கில்ஸ் சந்திவரைக்கும் இரண்டு பக்கமும் இருக்கிற சாக்கடை ஏன் பாராமரிக்காமல் கிடக்கு. முத்தவெளியிலை கண்காட்சியளை மட்டும் நேரவழிக்கு நடத்திற உங்களுக்கு உந்தச் சாக்கடையை மட்டும் நேரவழிக்குக் கழிவிப் பராமரிக்கவேணும் எண்டு தெரியேல்லையோ எண்டு காது புளிக்கக் கேளாத கேள்வி கேட்டாங்கள். உங்கடை மாநகரசபை ஆக்களை ஒருக்காக் கூட்டிக்கொண்டுபோய் திருகோணமலையைக் காட்டுங்கோ.

நாகரிகமெண்டால் என்ன? நீங்கள் வெள்ளையும் சொள்ளையுமாத் திரியிறதெல்ல நாகரிகம். முதலிலை கற்றறிவு இருக்கவேணும். அடுத்தது ஆரோக்கியமாக ஆட்களை வைச்சிருக்கவேணும். மண்வீடு எண்டாலும் மெழுகிப் பராமரிச்சுச் சுத்தமாக வைச்சிருக்கிறதைப்போலை சுற்றுச்சூழலை சிறப்பா வைச்சிருக்கவேணும். இருக்கிறதை வைச்சுச் சந்தோஷமாய் சீவிக்கிற குடும்பங்களைப் போலை நாட்டை வைச்சிருக்கவேணும். இது அதைவிட்டிட்டு காட்டுமிராண்டியள் இருக்கிற இடமா ஒரு இடத்தை வைச்சிருக்க ஏலாது அன்னமுத்து அண்ணை.

போன மாரிகாலம் இந்த இடத்திலை தண்ணி ஓடாமல் நிண்டதை வீடியோவிலை பாத்தனாங்கள். ஏன் நல்லூர் கோவில் பக்கத்திலையும் ஒரு அடிக்கு வெள்ளம். இவ்வளவு காசு பணம் உள்ள கோவிலை ஏன் வெள்ளத்துக்குள்ளை வைச்சிருக்கவேணும். கடல் கிட்டத்தானே இருக்கு. மழைத்தண்ணியை வாய்க்கால் கட்டி வடிவாக் கடலுக்கை விடலாம்தானே? இல்லாட்டி நாவல்குழிப் பக்கம் எவ்வளவு நிலம் இருக்கு! இந்த மழை நீரைச் சேகரிக்க இப்ப எத்தினை புதுப்புது ரெக்னோலஜி வந்திருக்கு. நினைச்சா இந்த ஊரை எவ்வளவு அழகா வைச்சிருக்கலாம்? உங்கடை ஆக்களிட்டை என்ன காசா இல்லை. கோயில்களை எல்லாம் கட்டி வடிவாத்தானே வைச்சிருக்கிறியள். உங்களுக்குத் தெரியவேணும் நாடும் வீடும் கோயிலுக்குச் சமன் எண்டு. ஒரு நாகரிகமான சமூகம் எண்டால் அந்தச் சமூகம் சந்தோஷமாக இருந்தாலே போதும். அதுக்குள்ளை எல்லாம் வந்திடும்.

பிணத்தோடை சுடலைக்கும் போனவங்களாம். சுடலை கிடக்கிற கிடை. அதை மக்கள் நினைச்சா வடிவா வைச்சிருக்கலாம். குப்பை கூழங்களை அதுக்கை கொட்டி நாறடிச்சுக் கிடக்கெண்டு திட்டினாங்கள். ஆரோ அதுக்கை கொண்டுவந்து இளங்கொடி ஒண்டை ஆலைமரத்திலை கட்டிப்போட்டுப் போட்டாங்களாம். அதைக் காகம் கொத்தி அரைகுறையா விட்டதாலை சுடலை முழுக்க அந்த நாற்றமாம், நிக்கேலாது எண்டாங்கள். இதுக்குமேலை உங்களோடை கதைக்கிறது வேஸ்ட் அண்ணை. நீங்கள் வாழுற முறை, உங்கடை யோக்கியத்தனம், உங்கடை நேர்மை, உங்கடை நியாயம், உங்கடை ஒற்றுமை, உங்கடை ஒழுக்கம், உங்கடை பண்பாடு எண்டு எல்லாத்தையும் பாத்து எதிரி பயப்பிடவேணும். அதைப் பாத்திட்டு இப்படியான ஓர் இனத்துக்குத் தனியாட்சியைக் குடுக்கவேணும் எண்டு உலகம் நினைக்கவேணும். அப்பிடியான ஒரு நிலைமைக்கு வராமல் உங்களுக்கு ஒரு சுபீட்சமும் வராது. இதை எழுதி வைச்சிருங்க. இதுக்கு மேலையும் இருந்து கதைக்கிறதிலை பிரயோசனம் இல்லை, நாங்கள் போட்டுவாறம் எண்டு எழும்பீட்டாங்கள்.

பிறகும் வாங்கோ அண்ணை கற்பகத்திலை போய் கொஞ்சம் சாமான்கள் வாங்குவம் எண்டு மண்டாடிப் பாத்தன். பனம் சாமான்கள் வாங்கிறதை நினைக்க அந்த மூத்திர மணம்தான் ஞாபகத்துக்கு வருகுது. பிச்சை வேண்டாம் நாயைப் பிடியுங்கோ எண்ட மாதிரி அவங்கள் போனதைப் பாக்க என்னிலை எனக்கே ஒரு வெறுப்பு வந்தது. இப்படிப்பட்ட ஒரு ஊத்தேக்கை நான் வாழவேணுமோ எண்டு...??

தயவுசெய்து யாழ்ப்பாண நவீனசந்தைப் பக்கம் போங்கோ, போய் ஒருக்காப் பாருங்கோ. அங்கை என்ன நடக்கிது எண்டு. சனத்துக்கு நடந்துபோக வழி இல்லை. எல்லா இடங்களிலையும் சாமான்களைப் பரப்பிவைச்சிருக்கினம். குறிப்பா வயிரவடிப் பக்கத்தையும் பாருங்கோ. குறிப்பாச் சத்திரச் சந்தைக்குள்ளை இருக்கிற கோயிலடியைப் பாக்க மறக்கவேண்டாம். அதுக்குப் பக்கத்திலை இருக்கிற அந்த வெட்டையைக் கட்டாயமாக அகற்றவேணும். இது உங்கடை பொறுப்பு.

முடிஞ்சால் இதைக் கௌரவ கவனர் கவனத்துக்கும் கொண்டுவர முயற்சிக்கிறன்.

நன்றி

இப்படிக்கு

**அப்பாவி அன்னமுத்து**



# அடங்காத்தமிழன் சுந்தரலிங்கம்:

தெரியவேண்டிய சில குறிப்புகள்

ந.பரமேஸ்வரன்

19

1977ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் சங்கிலியனின் சிலையின் கீழ் நின்று தமிழ் ஈழத்திற்கு ஆணை கேட்டு நாடாளுமன்றம் சென்ற அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தைப் பார்த்து போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம் நான் எதற்கும் தயார் என்று ஜே.ஆர் . கேட்டபோது அமிர்தலிங்கத்தால் எதுவும் செய்யமுடியவில்லை. ஒப்பரேஷன் பதவியாவை வெற்றிகரமாக நிறைவேற்றிய சுந்தர லிங்கம் மறுநாள் நாடாளுமன்றத்தில் போர்ப்பிரகடனம் செய்தார். யுத்தம் ஆரம்பமாகிவிட்டது. கீதையில் கிருஷ்ண பரமாத்மா கூறியது போல் "இது நீதிக்கும் அநீதிக்குமான யுத்தம்". எம்மிடம் ஆயுதங்கள் எதுவுமில்லை ஆனால் வன்னிக்குள் யாராவது கால் வைத்தால் வன்னிக்காடுகளே சுடும் (forest will fire) என எச்சரித்ததுடன் தமிழர்களுக்கு எதிராக சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் வன்முறைகளில் ஈடுபட்ட ஒளிப்படங்களையும் காட்டி உரையாற்றினார்.

இதேவேளை இந்தியப்பிரதமர் நேருவும் உடனடியாக கலவரத்தை நிறுத்துமாறும் இல்லையேல் இந்திய இராணுவத்தை அனுப்ப வேண்டி வருமெனவும் எச்சரித்தார். பண்டாரநாயக்கா கலவரத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சென்றவாரத் தொடர்ச்சி)

# ஊடகவியலாளர்களை குறிவைத்து வேட்டை



○ கே.வி.தவராசா

## யசிதரன், வளர்மதி கைது

### சர்வதேச மன்னிப்புச்சபையின் வேண்டுகோள்

யசிகரன் மீது ஏற்றுக்கொள்ளத்தக்க குற்றம் ஏதும் இல்லாத விடத்து அவரை உடனடியாக விடுதலை செய்யவேண்டும் என்று கோரும் பிரசார நடவடிக்கையை சர்வதேச மன்னிப்புச் சபை ஆரம்பித்தது. இலங்கை ஜனாதிபதி, பிரதம நீதியரசர், பொலிஸ்மா அதிபர் உட்பட முக்கியஸ்தர் களுக்குக் கடிதங் களை அனுப்பியதுடன் மனித உரிமை அமைப்புகளையும் பொதுமக்களையும் அதில் இணையுமாறும் சர்வதேச மன்னிப் புச்சபை கோரியது. யசிகரன் பொலிஸாரால் தாக்கப்பட்டு துன்புறுத்தலுக்கு ஆளாகியுள்ளார் என்பதையும் சர்வதேச மன்னிப்புச்சபை தனது அறிக்கையில் வெளியிட்டிருந்ததுடன் அதற்குத் தனது கண்டனத்தையும் பதிவுசெய்திருந்தமை குறிப் பிடத்தக்கது.

Ekwality Graphics பதிப்பகத்தை நடத்திவந்த வேளையில் 2008.03.06 ஆம் திகதி கைதான யசிகரனும் வளர்மதியும் தொடர்ந்து பாதுகாப்புச் செயலாளரின் தடுப்புக்காவல் உத்தர வின்கீழ் பயங்கரவாதப் பொலிஸ் பிரிவில் தடுத்துவைக்கப்பட் டிருந்த நிலையில் ஜே.எஸ் திசநாயகமும் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டிருந்தார். இவர்களுடன் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்ட செய்தியாளர் சித்சிறி விஜேசிங்க, படப்பி டிப்பாளர் கயன வசந்தரங்கா, உதயன் ஆகியோர் 2008.03.19ஆம் திகதி நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு விடு விக்கப்பட்டனர்.

### குற்ற ஒப்புதல் வாக்குமூலங்கள்

தடுத்துவைக்கப்பட்டிருந்த யசிகரன், வளர்மதி, ஜே.எஸ் திசநா யகம் ஆகிய மூவரிடமும் பொலிஸார் வாக்குமூலங்களைப் பெற்று விசாரணை நடத்திவந்த வேளையில் திசநாயகம், யசி கரன் ஆகிய இருவரிடமிருந்தும் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டிருந்தது. திசநாயகத்தின் வாக்குமூலம் அவரின் கையால் தமிழில் எழுதப்பட்டிருந்தது. முதன்முதலில் 2008 வைகாசி 23 ஆம் திகதி அன்று யசிகரனையும், வளர்மதியை யும் திசநாயகத்தையும் கொழும்பு பிரதம நீதவான் முன்னிலை யில் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் நீதவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தினர். அப்போது 'என்னைத் தாக்கி துன்புறுத்தி சித்திரவதை செய்து எனது விருப்பத்துக்கு மாறாக வற்புறுத்தி கையெழுத்தைப் பெற்று குற்ற ஒப்புதல் வாக்குமூ லம் என்ற ஆவணத்தைப் பொலிஸார் தயார்ப்படுத்தியுள்ளனர்' என யசிகரன் என்னிடம் முறையிட்டார்.

### யசிகரன் சித்திரவதை

பயங்கரவாதப் பிரிவுப் பொறுப்பதிகாரியும் மற்றும் சில பொலி ஸாரும் யசிகரனைத் தாக்கி சித்திரவதை செய்து, பலவந்தமாக குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தைப் பெற்ற விடயத்தை நீதிமன் றத்தின் கவனத்துக்குக் கொண்டுவந்ததையடுத்து, நீதிபதி யசிகரனைச் சட்ட மருத்துவ அதிகாரியிடம் அன்றையதினமே உடனடியாகக் கொண்டுசென்று சட்ட மருத்துவ அறிக்கையைப் பெற்று அதனை நீதிமன்றுக்குச் சமர்ப்பிக்கும்படி பொலிஸா ருக்கு உத்தரவிட்டார். அன்றையதினமே பொலிஸார் யசிகர னைச் சட்ட மருத்துவ அதிகாரி மயூரதனிடம் முன்னிலைப்ப டுத்திய பின்னர் மீண்டும் பயங்கரவாதப் பிரிவுப் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டுசென்ற னர். தாங்கள் ஏற்கனவே தாக்கிச் சித்திரவதை செய்தமையை நீதிமன் றுக்கு யசிகரன் முறையிட்டதால் பொலிஸார் கோபத்தில் இருந்தனர். இதனால் மீண்டும் அன்றிரவு அவ ரைக் கடுமையாகத் தாக்கி மனிதாபி மானமற்ற முறையில் சித்திரவதைக்கு உட்படுத்தினர். 2008 ஆம் ஆண்டு மே மாதம் 27 ஆம் திகதி இந்த வழக்கு நீதிமன்றத்தில் மேலதிக விசா ரணைக்காக அழைக்கப்பட்ட பொழுது யசிகரன் தன்னைப் பொலிஸார் 2008 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆம் திகதி சட்ட மருத்துவ அதிகாரி யிடம் கொண்டுசென்று மீண் டும் பயங்கரவாதப் பிரிவுப் பொலிஸ் தலைமையகத்துக்கு அழைத்துவந்து தாக்கித் துன்பு றுத்திய சம்பவத்தை நீதிமன்றில் முறையிடுமாறு கண்ணீர் மல்க என்னிடம் கோரினார்.




நான் யசிகரனிடம், "நீங்களே நீதிமன்றத்தில் நடந்த சம்ப வத்தை நீதிபதியிடம் கூறுவதுதான் பொருத்தமானது" எனக் கூறினேன். பின்னர் நீதிபதியிடம்"எனது கட்சிக்காரர் யசிகரன் உங்களிடம் தன்னைப் பொலிஸார் தாக்கியதை முறையிட விரும்புகிறார்" என்று கூற உடனடியாக பிரதான நீதிபதி நிசந்த அப்பு ஆராய்ச்சி, தமிழ் மொழிபெயர்ப்பாளரை அழைத்தார். தொடர்ந்து யசிகரன் 23052008 அன்று இரவு பொலிஸார் தன்னைத் தாக்கித் துன்புறுத்தியதை மிகவும் வேதனையுடன் அழுதுகொண்டே நீதிபதிக்கு முறையிட்டார். பொலிஸாரைக் கடுமையாக எச்சரித்த நீதிபதி அன்றையதினமே 27052008 அன்று யசிகரனை மீண்டும் சட்ட மருத்துவ அதிகாரியிடம் கொண்டுசெல்லும்படி உத்தரவு பிறப்பித்து மேலதிக விசார ணைக்காகவும் சட்ட மருத்துவ அறிக்கைக்காகவும் இந்த வழக்கை ஒத்திவைத்தார்.

நீதிமன்ற உத்தரவுக்கமைய யசிகரன் பொலிஸார் சட்ட மருத் துவ அதிகாரியான லோகநாதனிடம் கொண்டுசெல்லப்பட்டு, மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார். பாதுகாப்புச் செயலாளரின் அல்லது பாதுகாப்பு அமைச்சரின் தடுப்புக் காவல் உத்தரவில் பொலிஸாரின் கட்டுக்காப்பில் இருக்கும் பொழுது பொதுவாக பயத்தின் காரணமாக எந்தக் கைதியும் பொலிஸாருக்கு எதிராக எந்த முறைப்பாட்டையும் நீதிபதிக்குக் கூறுவதில்லை. பொலிஸ் கட்டுப்பாட்டில் தடுத்துவைத்திருக் கின்ற காலத்தில் தாங்கள் பொலிஸாரினால் தாக்கப்பட் டதை, துன்புறுத்தப்பட்டதை நீதிபதிக்கு முறையிட்டால் அதன் பின்விளைவுகள் எப்படியிருக்கும் என்பதைக் கைதிகள் நன்கு அறிவர். ஆனால் யசிகரனோ, பொலிஸார் தன்னைத் தாக்கியதையும் சித்திரவதைக்கு உட்ப டுத்தியதையும் நீதிபதிக்கு முறைப்பாடு செய்ய முதலில் தயக்கம் காட்டியபோதிலும், எனது அறிவுறுத்தலின் பிரகாரம் விபரமாக நீதி பதியிடம் கண்ணீர்மல்க முறையிட்டதை நீதிமன்றத் திற்கு வழக்குக்காக வந்தி ருந்தவர்களும், பொலிஸ் அதிகாரிக ளும், சிறைச்சாலை அதிகாரிகளும், நீதிமன்ற உத்தியோகத்தர்களும், சட் டத்தரணிகளும், சக கைதிகளும் ஒரு கணம் திகைத்து யசிகரனை நோக்கி வேதனை கலந்த ஆச்சரியப்பார்வை பார்த்தனர் . மேலும் யசிகரனோடு நீதி மன்றத்தில் முன்னிலைப்ப டுத்தப்பட்ட ஊட கவியளாளர் திசநாயகம் பொலிஸார் மீது எந்தக் குற்றச்சாட் டையும் சுமத்தாமல் எதிரிக்கூட்டில் அமைதியாக நின்றுகொண்டிருந்தார். பயங்கரவா தத் தடைப் பிரிவுப் பொலிஸார் வளர்மதியிடமிருந்து குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பெறப்படாத காரணத் தால் வளர்மதி எந்தமுறைப்பாட்டையும் நீதிபதிக்குச் செய்யவில்லை.

### அடிப்படை மனித உரிமை மீறல் மனுக்கள்

யசிகரன் பொலிஸாரால் தாக்கப்பட்டு சித்திர வதைக்கு உட்பட்டமைக்காக நீதிகோரி அரசுக்கு எதிராக உயர் நீதிமன்றில் அடிப்படை மனித உரிமை மீறல் மனு சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசா மூலம் தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனு உயர் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட முதல் தினத்தன்றே யசிகரன் பொலிஸாரால் தாக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டமை உயர் நீதிமன்ற நீதியரசர்களின் கவனத்துக் குக் கொண்டுவரப்பட்டது. இதனையடுத்து நீதியரசர்கள் யசிக ரனை சட்ட மருத்துவ அதிகாரியிடம் பரிசோதனைக்குட்படுத்தி மருத்துவ அறிக்கையைப் பெறும்படி கட்டளை பிறப்பித்தனர். திசநாயகமும் தனது சட்டத்தரணி மூலம் உயர்நீதிமன்றில் அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கைத் தாக்கல் செய்தி ருந்தார்.

(வழக்கு தொடரும்)

# வணங்குதலிலாவது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நல்லூர் ஆலயம் அமைந்துள்ள பகுதிக்குள் முஸ்லிம் மதகுரு ஒருவரின் 'தைக்கா'(சமாதி) இருந்ததாகக் கூறுகிறார்கள். போத் தல், பித்தளை போன்றவற்றை முன்னர் துவிச்சக்கரவண்டியில் பயணித்து கொள்வனவு செய்யும் முஸ்லிம்கள் தொழுகை நேரமாயின் நல்லூரின் மேற்கு வாசல் அமைந்திருந்த இடத்தில் நின்று தொழுவதை நம்மில் சிலர் கண்டிருக்கிறோம்.

மீள்குடியமர்வின் பின்னர், நல்லூர் முதலாளியைச் சந்தித்த முஸ்லிம்கள் கோயிலுக்கு முன்னால் கற்பூரம் விற்கும் தமது உரிமை பற்றிப் பிரஸ்தாபித்துள்ளனர். அதற்கு அவர், "அது உங்களது உரிமை. அதற்கு எவ்விதத் தடையுமில்லை", எனக் கூறியதாக அறிகிறோம். எனினும் கோவிலின் வெளியில் இயல் பாக வாழமுடியாத சிலர் (ஊனமுற்றோர், வலது குறைந்தோர் போன்றோர்) கற்பூரம் விற்பதைக் கண்டுவிட்டு மீளக்குடியமர வந்த உடனேயே இவர்களின் வாழ்வாதாரத்தில் கைவைப்பதா என எண்ணினர். ஆனாலும் இறுதி முடிவு என்ன என்பது தெரி யவில்லை. நல்லூரில் சகவாழ்வு என்றால் என்ன என்பதை முஸ்லிம்கள் எமக்குக் கற்றுத் தந்துள்ளனர்.

அதேபோன்று முன்னர் ஆலயம் அமைந்த இடத்தில் தான் மீண்டும் ஆலயம் அமையவேண்டுமென நாமும் அடம்பிடிக் காமல், எல்லோரது சம்மதத்துடனும் தெரிவுசெய்யப்பட்ட இடத் தில் நல்லூரை அமைத்து, இன்று யாழ்ப்பாணத்தின் அடையா ளமாக மாறிவிட்டது. அதனை தையிட்டி விவகாரத்தில் ஏன் முன்மாதிரியாக பெருந்தன்மையாக உரிய தரப்புகள் எடுக்கக் கூடாது?

இதேவேளை பெருந்தன்மையை பலவீனம் எனக்கருதி திமிரு டன் செயற்படாமல் படையினரால் அழிக்கப்பட்ட ஆலயங்கள் மற்றும் துயிலுமில்ல விவகாரங்களில் புதிய அணுகுமுறையை கையாளுமா அநுர அரசு? நாட்டினுள் அனைவருக்கும் சமத் துவமான உரிமைகள் கிடைக்கவும் அவர்களின் தனித்துவ அடையாளங்களைப் பேணவும் வழிசமைப்போம் என வட்டுக் கோட்டையில் பிரதமர் ஹரிணி கூறுரைத்திருக்கிறார். பிரகட னங்களுக்குப் பெயர்போன வட்டுக்கோட்டையில் சொல்லப்பட் டது செயலுருப் பெறுமா? ஏனெனில், பாடசாலை நிகழ்வுகளில் அரசியல்வாதிகள் கலந்துகொள்ளக்கூடாது என்று அண்மை யில் இவர் உத்தரவு பிறப்பித்ததாக ஞாபகம்.

ஆனால், யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்வொன் றில் இவர் கலந்துகொண்டிருந்தார். மறதிதான் இதற்கும் கார ணம் என்றால் வட்டுக்கோட்டையில் இவர் செய்த பிரகடனத்துக் கும் நேரப்போகும் கதி என்னவோ? எனவே வாக்குறுதிகளை வழங்குவதை விடுத்து தமிழர்களின் வணக்கத்தலங்கள் தொடர்பான எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதே காலத்தின் தேவை. கட்சி அரசியலுக்கப்பால் சிந்திப்பார்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org